விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு +பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், வீடுகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.




ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 30 ஞாயிற்றுக்கிழமை (13.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

# மூன்று மாதங்களுக்குள் மீள்குடியேற்றம் பூர்த்தி

## யாழ்.வந்த ஜனாதிபதி உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களின் மீள்குடியேற்றம் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும் என உறுதியளித்துள்ள ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவம் பெற்றுள்ள மீள்குடியேற்றத்தை மேற்கொள்ள அனைத்துத் தரப்பும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## 7 ரூபாய் 50 சதத்தால் கோதுமை மா அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை 7 ரூபாய் 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை, 90 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கிராம் கோதுமை மா, இந்த விலை அதிகரிப்பைத் தொடர்ந்து 97 ரூபாய 50 சதத்துக்கு விற்பனை செய்யப்படும். (செ-12)

## நடேஸ்வரா கல்லூரி, 701 ஏக்கர் காணி ஜனாதிபதியால் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி மற்றும் வலி வடக்கு பகுதிகளில் விடுவிக்கப்பட்ட 701.5 ஏக்கர் காணிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றையதினம பொதுமக்களிடம் நேரில் வந்து உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார்.

மேலும் வட கிழக்கில் அமைக்

15 ஆம் பக்கம் பார்க்க....

## வீட்டுத்திட்டத்தின் குறைநிறை ஆய்வு;

## மைத்திரி-விக்னேஸ்வரன்-சுவாமிநாதன் கருத்து மோதல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் அமைக்கப்பட்டு வரும் 65ஆயிரம் வீட்டு திட்டம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோருக்கு இடையில் நேருக்கு நேர் கருத்து மோதல் இடம்பெற்றுள்ளது.

இதனால் நேற்றைய தினம் ஒருவரது முகத்தை ஒருவர் பார்க்காதவாறு இருந்தனர். நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோப்பாய் செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் வீட்டு திட்டத்தை சென்று பார்வையிட்டார்.

அதன் பின்னர் மூன்று மணியளவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள நடேஸ்வரா கல்லூரியை கையளித்து வைக்கும் நிகழ்வு குறித்த கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் வரவேற்புரையினை ஆற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர்,

கோப்பாயில் அமைக்கப்பட்டு வரும் வீட்டு திட்டம் பொருத்தமற்றது எனவும், எங்களுடைய கால நிலைக்கு ஏற்ற தல்ல எனவும் கூறி, குறித்த வீடு தரமானதாக இல்லாத போதிலும் வீட்டுக்குள்ளே மக்களை கவரும் வகையில் சில மின்னியல் பொருட்கள் கவர்ச்சிகரமாக வைக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் குறித்த வீடு தொடர்பில் சிந்திக்க முடியாதவாறு அந்த கவர்ச்சி பொருட்களில் நாட்டம் கொள்ள வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தனது கருத்தினை வெளியிட்டார்.

இதன் பின்னர் உரையாற்றிய மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், குறித்த வீட்டு திட்டம் உலகின் தரம் வாய்ந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

02 ஆம் பக்கம் பார்க்க....

## வல்வெட்டித்துறை பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில்

# 12 கோடி ரூபாய் பெறுமதியிலான 2 கிலோ தூய ஹெரோயின் மீட்பு



(கரணவாய்)

வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் 12 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு கிலோ தூய ஹெரோயின் மீட்கப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் இக்ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

தொண்டைமானாறு பாலத்துக்கு அருகாமையில் ஹெரோயின் கடத்தப்படுவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து வட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பெணான்டோ, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா

16 ஆம் பக்கம் பார்க்க....

## பாணின் விலை அதிகரிக்கக் கூடும்

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக பாண் மற்றும் ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருட்களின்

16 ஆம் பக்கம் பார்க்க....

## உதைபந்தாடிய வேளை நெஞ்சுவலியால் மரணம்

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நெஞ்சுவலி என கீழே விழுந்த நிலையில் வைத்தியசாலை கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

16 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**காணி விற்பனைக்கு உண்டு**

செல்வபுரம் முல்லைத்தீவில் அரச குவாட் டசக்கு அருகாமையில் உள்ள வீடு, கிணறு, மலசலகூடத்துடன் உள்ள 20 பேசேஸ் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 194 0481, 077 388 4031,

(C-3879)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## மணிவிழா வாழ்த்து

உயர்திரு.

" பொன்மனச் செம்மல் "
" மனிதநேய ஈகையாளன் "
" கல்விக் காருண்யன் "

**E.S. பேரம்பலம் நாகரத்தினம்**

அவர்கள்

காரைமண் பெற்றெடுத்த தவப் புதல்வன் வாரிவளவு கற்பக விநாயகர் தத்தெடுத்த தவப் புதல்வன் காரை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நன்கொடையாளன், தமிழன் போற்றும் உன்னத கொடை வள்ளல் நான்மறை வேதங்களும் நல்லாசி கூறி நால்வரில் ஒருவராம் மாணிக்கவாசகர் மடத்தில் நாசுவைக்கை நாவிருந்தளித்த உமை நாவரா வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் : தமிழ்க்கங்கை காட்வெயார் அன்ட் வண்ணச் சோலை ஐயப்பா நகை மாளிகை (உத்தரவு பெற்ற நகை அடைவு பிடிப்பாளர் A-9 கிளிநொச்சி) கள்ளித்தெரு. தங்கோடை. காரைநகர்.

(C-3988)



## மணிவிழா வாழ்த்து

இன்று மணிவிழா காணும்

**E.S.P. நாகரத்தினம்**

அவர்களின் சமூகப்பணி மேன்மேலும் தொடர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(C-3988)

பரிபாலன சபையினர், சித்தி விநாயகர் ஆலயம், றொட்டிக்கோ மைதானம் அருகில் A-9, கிளிநொச்சி.



**13.03.2016 இன்று தனது மணிவிழாவை கொண்டாடும் எமது**

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

" கல்விக் காருண்யன் " " மனிதநேய ஈகையாளன் "
" பொன்மனச் செம்மல் "

எனும் கௌரவப் பட்டங்களைப் பெற்ற உயர்திரு.

**E.S.P. நாகரத்தினம்**

அவர்கள்

அன்பின் உறைவிடமாய்
பார் போற்றும் பண்பின் சிகரமாய்
பரிவுடனே உதவிடும் காருண்யனே
நீண்ட காலம் உம் சேவை
இப் பாரினிலே நிலைக்கட்டும்
சகல சௌபாக்கியங்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
ஆவரங்கால் சிவன் துணை கொண்டு
மணிவிழா தன்னில் மனதார
வாழ்த்துகின்றேன்.

உரிமையாளர்
விதுரன் மோட்டோர்ஸ் & விதுரன் ஹாட்வெயார், ஆவரங்கால்.

(3871)





## மணிவிழா வாழ்த்து

பொன்மனச் செம்மல், மனிதநேய ஈகையாளன், கல்விக் காருண்யன்

**லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம்**

இன்று மணிவிழா காணும் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஐயாவின் சேவை கல்விச்சமூகத்திற்கு இன்னும் தேவை எனக் கூறி அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய சமூகம்

(3884)



North Mass Media College

## ஊடகத்துறையில் 6 மாதம் டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பம்!

அங்கீகரிக்கப்பட்ட North Mass Media College

இலவசம்

(இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை பயிற்றுவித்துள்ளோம். அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் பணியாற்றுகின்றார்கள்)

செய்தியாளர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், அறிவிப்பாளர்கள், படத்தொகுப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள் சவுண்ட் எடிட்டிங் ஆகிய ஊடகத் துறைசார் இலவச செய்முறை டிப்ளோமா பயிற்சி நெறி.

06 month

பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்

ஊடகத்துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு 20,500 ரூபா அறிவிடப்படும்

தொடர்புகளுக்கு 076 9053 179

(C-3995)

**North Mass Media College**

யாழ்.மாநகரசபை கட்டடம், 03 ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



உயர்திரு.

**E.S.P. நாகரத்தினம்** தம்பதிகள்

" சமூகமாமணி " " சைவபுரவலர் " " ஈகையார் திலகம் "

காரை மண் பெற்றதொரு தவப்புதல்வன்
காருண்ய சேவகன் நன்மகன்
காலத்தால் அழியாத கல்விக்கும் கலைக்கும்
ஞாலத்தில் பாரியென வாரி வழங்குபவன்
வாரி வளவளவென்று சொன்னவர்கள்
வாரி வாரி வழங்கும் வள்ளல் இவர்
பாரி பாரி யென புகழ் பெற்று வாழி

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்னமுதை
ஈந்து அடியவர் பசி தீர்த்து
காலத்தில் பெருவெளியில்
அறங் காத்து அமுதூட்டும்
அன்புடன் இல்லறத்துள்
அறுபது ஆண்டு கண்டு
ஆயிரம் ஆயிரமாய்
அறம் புரிந்து வரம் பெற்று
நூற்றாண்டு வாழிய வாழியவே

இளைஞர்கள்
வாரிவளவு பிள்ளையார் கோவிலடி

(C-3991)



## மணிவிழா வாழ்த்து

இன்று மணி விழா மேடையை அலங்கரிக்கும் பிரபல தொழிலதிபரும், கல்விக் கொடையாளருமாகிய உயர்திரு.

**E.S.P. நாகரத்தினம்**

அவர்கள்

இன்று போல் பல ஆண்டு காலம் நீடூழி வாழ்ந்து கல்விக் கொடையில் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென்று நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளை வேண்டுவதோடு அவரும் அவர் தம் குடும்பத்தினரும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(3889)

போட்டோ பிளஸ்
இல. 9, யூபிலி பஜார்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சோ. ரவிவர்மன் குடும்பம்
(போட்டோ ரவி)

## வீட்டுத்...

இந்த வீடுகள் இங்குள்ள கால நிலைக்கு ஏற்றது எனவும், குறிப்பாக வெப்பம் உள்ளே செல்லாதவாறு அமைக் கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு முப்பத்து இரண்டு முகாம்கள் உள்ளன. அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்ல வேண்டிய தேவை உண்டு. உறங்கு வதற்கு படுக்கை இல் லாத நிலையில் மக் கள் உள்ளனர்.

அதற்காகவே இந்த வீட்டுத்திட்டம் அவர் களுக்கு அமைத்து வழங்கப்பட உள் ளது. இந்த வீட்டு திட்டத்தை மக்கள் விரும்புகின்ற போதிலும் அரசியல் வாதிகள் விரும்பு கின்றனர் இல்லை. இது சந்தேகத்திற்கிட மாக உள்ளது என அவர் உரையாற்றி னார்.

இதன் பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி, குறித்த வட்டுத்திட்டம் தொடர் பில் முதலமைச்சர் மற்றும் மீள்குடி யேற்ற அமைச்சர் ஆகியோர் தமது கருத துக்களை கூறிவிட் டார்கள். ஆனால் அவர்கள் அங்கு சென்று குடியேறப் போவதில்லை.

மக்களுக்காகதன அந்த வீடுகள் அமைக கப்படுகின்றன.

எனினும் வடக்கு மாகாண முதலமைச் சர் கூறியதனை நான செவிமடுத்துள்ளேன என்றார் அவர். (செ-4)

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் 3ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/கிழமை/மாதவாடகைக் குண்டு.

தொடர்பு: 0778378597

(3887)

**டோமன் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.**

ஒரு மாதத்திற்கு மேல் வளர்ச்சியடைந்த டோமன் நாய் குட்டிகள் உடன்விற்பனைக் குண்டு.

தொடர்பு: 0772292436

(3888)

## ஜோடிகளுக்கு அச்சுறுத்தல்

மாலைதீவு பிரஜைகளுக்கு மறியல்

மாலைதீவிலிருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்த இரண்டு மாலைதீவு ஜோடிகளை அச்சுறுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட இரண்டு மாலைதீவு பிரஜைகளையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த ஜோடிகளின் புகைப் படங்களை வைத்து அச்சுறுத்தியமையினாலேயே, இவ்விரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-5)

# வெள்ளைக்கொடி விவகாரத்தில் என்னை குற்றவாளியாக்க முயற்சி


## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**வெள்ளைக் கொடி விவகாரத்தில் என்னை குற்றவாளியாக சித்திரித்து அவ்விடயம் தொடர்பில் உண்மைகளை கண்டறிய வேண்டும் என்று அமைச்சர் சரத்பொன்சேகா கூறுகின்றார். அதனை செய்வதற்கு முன்பதாக ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.**

பாரிய ஊழல் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வாக்குமூலம் வழங்குவதற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப கட்டடத் தொகுதிக்கு வருகை தந்திருந்த வேளை ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## தென்கொரியாவிற்கு செல்லும் இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்



தென் கொரியாவிற்கு வேலைவாய்ப்பிற்காக செல்லும் இலங்கை பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது.

தென்கொரியாவிற்கு சுற்றுலா சென்றுள்ள வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும், தென்கொரிய வெளிநாட்டு அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதற்கான இணக்கப்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்கொரியாவில் தற்சமயம் தொழில் புரியும் இலங்கையர்களுக்கான மேலதிக வசதிகள் பல செய்து கொடுப்பதற்கு தென்கொரிய வெளிநாட்டமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 42 ஆயிரம் இலங்கைப் பணியாளர்கள் தென்கொரியாவில் தற்சமயம் பணிபுரிவதாகவும் வெளிநாட்டமைச்சு தகவல் தெரிவித்துள்ளது. (இ-5)

## எட்டு மணிநேரம் நின்றநிலையில் வாக்குமூலமளித்த கோத்தபாய

ரக்னா லங்கா, அவன்கார்ட் ஆயுத களஞ்சிய நிறுவன ஊழல் குற்றச்சாட்டில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் எட்டு தடவைகள் இடம்பெற்ற தொடர்ச்சியான விசாரணையின் பின்னர் முதல் தடவையாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வாக்கு மூலமளித்தார்.

இதன்போது, விசாரணை அதிகாரிகளின் முன்னிலையில் கோத்தபாய ராஜபக்ஷ எட்டு மணிநேரம் நின்று கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறுகையில்,

இன்று என்னிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என வரவழைத்து எட்டு மணி நேரம்வாக்குமூலம்பெற்றனர். நின்றுகொண்டே மிகநீண்ட நேரம் வாக்குமூலம் வழங்கினேன். பின்னர் வாக்குமூலம் பதிவுசெய்ய நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி ஒருவர் எனக்கு ஆசனம் ஒன்றை பெற்றுக்கொடுத்தார்.

எவ்வாறு இருப்பினும் என்னால் முடிந்தவரையில் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நல்லாட்சி அரசாங்கத்தின் வேலையை இலகுபடுத்தி கொடுத்துள்ளேன். ஏனைய காரியங்களை அரசாங்கம் மேற்கொள்ளும். எம்மை பழிவாங்கவும் எமது பயணத்தையும் மக்கள் எம் மீது வைத்துள்ள ஆதரவையும் முற்றாக அழித்து எம்மை முழுமையாக ஓரங்கட்டும் வகையில் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது என அவர் தெரிவித்தார். (இ-5)

## கூகுள் பலூன் பரிசோதனை சிகிரியாவில்

இணையத்தள சேவையை துரிதப்படுத்துவதற்கான கூகுள் பலூன் பரிசோதனை எதிர்வரும் 30 ஆம் திகதி சிகிரியாவில் நடத்தப்படவுள்ளது.

இதன்போது இளைஞர்கள் மற்றும் ஊடகங்களுக்கு குறித்த பலூன் பரிசோதனை தொடர்பில் தெளிவூட்டப்படவுள்ளதாக தொழில் நுட்ப மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூகுள் நிறுவனத்தினால் அண்மையில் பலூன் பரிசோதனை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதன்படி அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் பல பொருட்கள் திருட்டு

கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒருதொகுதிப்பணமும்மற்றும் சில பொருட்களும் திருடப்பட்டுள்ளதாகநெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியில் உள்ள குஞ்சர் கடை சந்தியில்உள்ளமேற்படிகிளையினை நேற்று முன்தினம் இரவு ஓடு கழற்றி இறங்கிய திருடர்கள் ஒரு தொகைப் பணத்தையும் பிஸ்கட் இனிப்புப் பொருட்களையும் திருடியுள்ளதாக நேற்றுக் காலை நெல்லியடிப்பொலிஸாரால் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நெல்லியடிப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## 2016;11,313 பேர் டெங்கால் பீடிப்பு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 11.313 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 51.56 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாகவுள்ள இடங்கள், சூழல்களை தொடர்ந்தும் துப்புரவாக பேண வேண்டியதன் அவசியத்தையே இந்த நிலைமை உணர்த்துவதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. மூன்று நாட்களுக்கும் மேல் காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில், வைத்தியரை நாடி சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளவேண்டும்எனவும்அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ-5)

## ஊடக விமர்சனங்களுக்கு பதிலளிக்க நேரமில்லை

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

தனக்கு எதிரான ஊடக விமர்சனங்களுக்கு பதிலளிக்க நேரம் எடுப்பது வீணானது எனவும், இத்தகையவர்களுக்கு, வார்த்தைகளினால் அல்லாமல், வேலையினால் பதிலளிக்கப் போவதாகவும் நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற விமர்சனங்கள் வேலை செய்யும்போது தான் முன்வைக்கப்படுகின்றது. இதற்கு முன்னர் இதனைவிடவும் பாரிய விமர்சனங்களுக்கு தான் முகம் கொடுத்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில்பாதை விஸ்தரிப்பு செயற்திட்டமொன்றை நேற்று ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## பாதாள உலகக் குழுக்கள் சுதந்திரமாக செயற்பட அரசாங்கம் அனுமதித்துள்ளது

### ஞானசார தேரர் குற்றச்சாட்டு

பாதாள உலகக் குழுக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கு எதிராக நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பை கட்டுப்படுத்த பாதாள உலகக் குழுச் செயற்பாடுகளை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்கின்றது.

பாதாள உலகக்குழு செயற்பாடுகளின் மூலம் மக்கள் மத்தியில் தேவையற்ற பீதியை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக மக்கள் ஜனநாயக உரிமைகளுக்காக போராடுவதனை தடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லாத நிலைமை காணப்படுகின்றது என அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (இ-5)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் பசில் ராஜபக்ஷவின் உறுப்புரிமை இரத்து

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷவின் கட்சி உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இளைஞர் பிரிவு தேசிய அமைப்பாளர் ரவி கிருஸாந்த கொழும்பு ஊடகமொன்றிடம் இதனை தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் வருடாந்தம் தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். எனினும் பசில் ராஜபக்ஷ அவ்வாறு கட்சி உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ளவில்லை.

இவ்வாறான நபர் ஒருவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவடையச் செய்து புதிய கட்சி அமைப்பது குறித்து பேசுவது ஆச்சரியப்படக்கூடிய விடயமன்று என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அமைச்சர் றிசாத்தை தூக்கிலிட வேண்டும்

### ராவணா பலய கோரிக்கை

காட்டிலுள்ள ஒரு யானைக் குட்டியை வைத்திருந்ததற்காக தேரர் ஒருவரை கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். வில்பத்து வனத்தை அழித்து 1000 யானைகளின் வாழ்க்கையை இல்லாமலாக்கிய அமைச்சர் றிசாத்தை தூக்கில் போட நடவடிக்கை எடுக்கவும் என ராவணா பலயவின் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைத் தெரிவித்தார்.

தேரர்களுக்காக பேசக்கூடிய புத்தசாசன அமைச்சு இந்த நாட்டில் இல்லை. குற்றங்களைக் காட்டிக் கொடுக்கும் போது அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனைக் காட்டிக் கொடுப்பவர்களைத் தண்டிப்பது அல்ல முறை எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சம்பிக்கவின் வாகனத்தில் மோதுண்ட இளைஞனுக்கு சுயநினைவு திரும்பியது

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வாகனத்தில் மோதுண்ட இளைஞனுக்கு சுயநினைவு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாகனத்தில் மோதுண்டு சுயநினைவின்றி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சந்தீப் என்ற இளைஞனுக்கு சுயநினைவு திரும்பியுள்ளதாக உதய கம்மன்பில சிங்கள ஊடகத்திற்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை குறித்த சம்பவத்தின் விசாரணைகள் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்தின் உண்மைகளை கண்டறிய விபத்து இடம்பெற்ற இராஜகிரிய பிரதேசத்தின் சீ.சீ.டீ.வி கமெரா ஒளிப்பதிவுகளை பரிசீலிக்கவும் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கிடையே குறித்த இளைஞனுக்கு நலம்வேண்டி சிவில் அமைப்பு ஒன்று நேற்றைய தினம் பூஜை வழிபாட்டொன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மணிவிழா காணும் தம்பதிகளை வாழ்த்துகின்றோம்

" பொன்மனச் செம்மல் "
" மனிதநேய ஈகையாளன் "
" கல்விக் காருண்யன் "

உயர்திரு.
**E.S.P. நாகரத்தினம்**
அவர்கள்



மனிதம் வாழும் மனம்
மற்றவர்க்கு உதவும் குணம்
புனிதம் நிறைந்த செயல்
புன்னகை புரியும் முகம்
அன்பை விதைத்து நாளும்
அறம் செய விழையும் கரம்
மன்புகழ் கொண்டதையா
மணி விழாக் கண்டதையா

வள்ளல் குணம் நன்கு
வாய்த்த பெரும் பண்பு
உள்ளம் உவகை யுற
உதவும் பேரி ரக்கம்...
எல்லாம் இவர் சொத்து
இவரோ நம் சொத்து
கல்வி கலை இலக்கியத்தை
கரிசனையாய் வளர்க்கு மிவர்
தமிழ்த் தாயின் தலைமகனாய்
தரணியிலே வாழ்க வாழ்க

(C-3987)

வாழ்த்துவோர் :
எவகிறீன் அச்சகம்
693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## சேவை முகவர்
## காணி, வீடு விற்பனைக்கு

பலாலி வீதி உரும்பிராய், கோயில் வீதி, மணற்தறை லேன், சோமசுந்தரம் வீதி ஆகிய இடங்களில் யாழ், நல்லூரில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம். (3865)

V.சுந்தரம்: 077 4819801

## விற்பனைக்கு உண்டு

சமீபத்தில் புதிதாக வாங்கியவையும் நல்ல நிலையில் உள்ளவையும் நான்கு மாதிரி டிசைன் கொண்டவையும் சீமெந்து மூலம் கல் அரிந்து அழகிற்காக முற்றத்தில் கல் பதிக்கக் கூடியவையுமான பிளாஸ்ரிக் அச்சுக்கள் (PAVING MOULD) 196 வரை உடனடியாக விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு**
**0765498699**
(C-3992)

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்



மூளாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாகிய மங்கையர்க்கரசி அவர்கள் லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்கள் வல்லிபுரம்-நாகம்மா தம்பதியினரின் (பண்டாரவளை-வல்லிபுரம் அன் சன்ஸ்) சிரேஷ்ட புதல்வியும், அமரர்கள் அப்பாப்பிள்ளை- வள்ளியம்மை (பண்ணாகம்) தம்பதியினரின் மருமகளும் காண்டீபன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயும், ஞானாம்பிகை திகம்பரலிங்கம் (கனடா), அமரர் கணேசானந்தன் (கனடா) மற்றும் கிருஷ்ணவேணி தங்கராசா, கோபாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.03.2016) லண்டனில் நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மங்களகிரி,
மூளாய்,
சுளிபுரம்.
0779453798 (3880)

தகவல் :
சகோதரி -
கிருஷ்ணவேணி தங்கராசா (ராசா)

## காரைநகர் வாரிவளவு தவப்புதல்வனுக்கு

# மணிவிழா வாழ்த்துக்கள்

60

காரைநகர் வாரிவளவில் பிறந்து
தனது உழைப்பின் மூலம்
சமூக, கல்வி தொண்டுகள் புரியும்

**கல்விக் காருண்யன்**
**ஈ.எஸ்.பி. நாகரத்தினம்**

மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து
சேவையாற்ற எல்லாம் வல்ல
வாரிவளவு கற்பக விநாயகனை
வேண்டுகின்றோம்



**வாழ்த்துவோர் :**

வாரிவளவு கற்பக விநாயகர்
ஆலய சுற்றாடலில்
வசிக்கும் உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள், அயலவர்கள்.



(3878)

## மணிவிழா நாயகனிற்கு வாழ்த்துக்கள்

பொனமனச் செம்மல்,
மனிதநேய ஈகையாளன்,
கல்விக் காருண்யன்
**லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம்**



இன்று மணிவிழாக் காணும்
ஈ.எஸ்.பி.நாகரத்தினம்
அவர்கள் அவர்தம் குடும்பத்தினருடன்
சீரும் சிறப்பும் பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்

(3877)

பிரதேச செயலகம்
காரைநகர்.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

# சிரியாவில் தீவிரவாதிகள் 70 பேர் கொன்று குவிப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. இருந்த போதிலும் அங்கு இன்னும் வெடிகுண்டுகள் வெடிக்கும் சத்தமும், துப்பாக்கிச் சூட்டு சத்தமும் ஓய்ந்த பாடில்லை.

சிரியாவின் முக்கிய நகரங்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஐ.எஸ். தீவிரவாத இயக்கமும், அல்-கொய்தாவின் இணை இயக்கமான நுஸ்ரா முன்னணி இயக்கமும் தங்களது தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன.

மற்றொருபுறம் தீவிரவாதிகளை முற்றிலுமாக ஒழிக்க சிரிய இராணுவம் தீவிர நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் வடகிழக்கு பகுதியில் உள்ள ஹமா மாகாணத்துக்கு உட்பட்ட முக்கிய நகரங்களில் நுஸ்ரா முன்னணி இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகள் பலர் பயங்கர ஆயுதங்களுடன் நுழைய முயற்சி செய்தனர். ஆனால் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சிரிய இராணுவத்தினர் தீவிரமாக செயற்பட்டு அவர்களது முயற்சியை முறியடித்தனர்.

இராணுவத்தினர் நடத்திய அதிரடி தாக்குதலில் தீவிரவாதிகள் 70 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் அவர்களது ஆயுதம் தாங்கிய வாகனங்களும் கூண்டோடு அழிக்கப்பட்டன. (இ-5)

## எரிபொருளுக்கான விலைச்சூத்திரம் தற்போது நடைமுறைப்படுத்த முடியாது

எரிபொருளுக்கான விலைச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய போதிலும், அந்த விலைச் சூத்திரத்தை தற்போது நடைமுறைப்படுத்த முடியாது என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். எரிபொருளுக்காகச் செலுத்தப்படவுள்ள கடன் தொகையைச் செலுத்தாமல், இந்த விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## கோவிலுக்கு செல்லும் வீதி குன்றும் குழியுமாகவுள்ளது

வடமராட்சி -வதிரி கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட டைமன் விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள வதிரி பூவக்கரைப் பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமராட்சி தெற்கு பிரதேச சபைக்கு பொதுமக்களால் கடிதம் மூலமாக தெரிவிக்கப்பட்டும் பிரதேச சபையானது இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைக்காலம் என்றால் இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மழைக்காலம் வருமுன் இவ்வீதியை உரிய முறையில் புனரமைத்துத் தருமாறும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

## பாவிக்க முடியாத நிலையில் விராலி மடத்திலுள்ள கிணறு

(கரணவாய்)

விராலி மடத்தில் பல காலமாக பாவனையில் இருந்த குடிநீர் பொதுக் கிணறும் அதனுடன் இணைந்த கால்நடைகள் நீர் குடிப்பதற்கான தொட்டியும் அமைந்திருந்தன.

இவை தற்பொழுது பாவனைக்கு உகந்தற்ற நிலையில் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை சாவகச்சேரி வீதியில் அமைந்துள்ள விராலி மடத்திலுள்ள இப் பொதுக் கிணறு மாசடைந்த நிலையில் காணப்படுவதால் வயல் வெட்டு நடைபெறும் இக் காலத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமாக தண்ணீர் தேவைப்படுவதனால் நீண்ட தூரம் சென்று குடிநீர் பெறவேண்டி இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

இதனைக் கருத்தில்கொண்டு உரிய அதிகாரிகள் இதனைப் புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு ஏற்றதாக மாற்ற நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறு அப் பகுதிக்குரிய பொது மக்கள் கேட்டுள்ளனர். (இ-60)


நல்லதோர் சமூகத்தை
உருவாக்குதல்
நம்பிக்கையை கட்டியெழுப்புதல்
ஆன்மீகம்
உடல் உள ஆரோக்கியம்
பேணுதல்




சமூக பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு
நோய் பாதுகாப்பு, வருமுன் காத்தல்
ஆசிரியர், பெற்றோர் விழிப்புணர்வு,
உளவியல் சமூக ஆலோசனைகள், சாதனைகள்
வழிகாட்டிகளின் அனுபவ பகிர்வுகள்
கணித, விஞ்ஞான, ஆங்கில புலமையை வளர்த்தல்
உலகறிவு, பொது அறிவு விடயங்கள்
மது, போதைப்பொருள் பாவனையை ஒழித்தல்
விளையாட்டு, கலையறிவு, நாட்டுப்பற்று


சஞ்சிகை பெற்றுக்கொள்ளும் இடங்கள்
அன்னை புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை

**முகவரி:- மதி சஞ்சிகை**
**இல. 29/5, புகையிரத நிலைய வீதி,**
**புங்கங்குளம், அரியாலை,**
**யாழ்ப்பாணம்.** (இ)

தொலைபேசி இலக்கம்- 021 568 8820
துரித அழைப்பு- 077 780 6235
மின்னஞ்சல்-mathy1085@gmail.com


## நூல் வெளியீட்டு விழா அழைப்பு

**திரு.ஜெ.சத்தியேந்திரன்-J.P.**
**NDT Agriculture**
**சிரேஷ்ட தென்னை**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**



எழுதிய
"நவீன தென்னைச் செய்கை"
"Modern coconut cultivation"

அன்புடையீர்!

இடம்: தியாகி அறக்கொடை நிறுவன மண்டபம், 527 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 13.3.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 9.30 மணி
தலைவர்: திரு.தே.வைகுந்தன் பிராந்திய முகாமையாளர், தென்னைப்பயிர்ச் செய்கைச் சபை, யாழ்ப்பாணம்.

### பிரதம விருந்தினர்கள்

திரு.N.வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

திரு.கபில யகண்டவல
தலைவர், தென்னைப்
பயிர்ச்செய்கை சபை, கொழும்பு.

### சிறப்பு விருந்தினர்கள்

திரு.K.D.L.தர்மசிறி
பொது முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
கொழும்பு.

திரு.சி.சிவகுமார்
மாகாணப் பணிப்பாளர்,
விவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

### நிகழ்ச்சி நிரல்



இறைவணக்கம்
மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை: திரு.க.தனிநாயகம், (ஓய்வுநிலை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)
வரவேற்பு நடனம்:
ஆசியுரை:
தலைமையுரை:
வில்லுப்பாட்டு: "நவீன தென்னைச் செய்கை" AVM வில்லிசைக் குழு கொடிகாமம்.
நூல் அறிமுகம்: "நவீன தென்னைச்செய்கை" திரு.ஜெ.சத்தியேந்திரன் J.P. (சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்-நூல் ஆசிரியர்)

### நூல் வெளியீட்டு நிகழ்வு

ஆவணப் பத்திரிகை பதிவேடு கையளித்தல் நிகழ்வு
கௌரவ, சிறப்பு, பிரதம விருந்தினர்கள் உரை
மதிப்பீட்டு உரை:
நூலாசிரியர் ஏற்புரை: திரு.ஜெ.சத்தியேந்திரன் J.P. (சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)
நன்றியுரை: திரு.S.ஜெயநாதன், (சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**நூல் ஒன்றின் விலை: 1000/-**

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் தென்னைச் செய்கையாளர்கள் உட்பட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இ)

**விளம்பர அனுசரணை: ஸ்ரீரங்கன் என்ரபிறைசஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## இராசி பலன்

13.03.2016
(மாசி 30, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 8.55மணிவரை
பரணி பிற்பகல் 4.15 மணிவரை
சுபநேரம்9.21-10.51மணிவரை
இராகுகாலம்4.51-6.21மணிவரை
கார்த்திகை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| புத | சந் | | |
| சூரி, சுக், கேது | | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை
இரவு 9.28இற்கு
இட-சந்

**மீனம்**

குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மேடம்**

திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**இடபம்**

சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், எதிலும் விவாதத்தைக் குறைத்து செயற்படுவது நல்லது, சயனசுகக் குறைவான நாள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்**

எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்**

தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**

மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்**

உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு**

பிறருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**

உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தன்னம்பிக்கையுடன் பணியாற்றுவீர்கள்.

**துலாம்**

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**கன்னி**

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தேகநலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், போசன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

# தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணத்தில்





(யாழ்ப்பாணம்)

தேசிய நல்லிணக்கம் தொடர்பான யாழ்.மாவட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச்செயலகவேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் தேசிய நல்லிணக்கம் தொடர்பான அறிமுகம், நோக்கம் என்பன தொடர்பாக அனைவருக்கும் விளக்கமளிக்கப்பட்டதுடன் இந்த ஆரம்ப நிகழ்வு இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான மத்திய நிலையத்தின் தலைவர் ஜெயந்த செனவிரத்ன, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள் சாந்தினி ஆரியவம்சம், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான வளவாளர்களின் 10 பேர் அடங்கிய குழுவினர், பிரதேச செயலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (இ-9)

## வியாபார உரிமத்தினை 30ம் திகதிக்குள் பெறவும்

(நல்லூர்-2)

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்களும் அவற்றிற்கான வியாபார உரிமத்தினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் பெற்றிருத்தல் வேண்டும்.

அவ்வாறு பெறாமல் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளும் வியாபார நிலையங்களுக்கு 31ஆம் திகதி முதல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்.

குறித்த திகதியினுள் அனுமதியினைப் பெற்று சட்ட நடவடிக்கையினைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வியாபார நிலைய உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (இ-5-81)

## கசிப்புடன் கைதான பெண்ணுக்கு ரூ.40 ஆயிரம் அபராதம் விதிப்பு

ஒரு போத்தல் க்சிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

துன்னாலை பகுதியில் கடந்த மாதம் 16ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் 11 ஆம் திகதி அப் பெண்ணை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (இ-60)

## நல்லூரில் நடைபாதை வியாபாரத்துக்கு தடை

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளுக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

இந் நடைபாதை வியாபாரத்தினால் பொதுமக்கள் மற்றும் நிரந்தர வியாபாரிகள் ஆகியோருக்கு இடையூறு ஏற்படுவதாக சுட்டிக்காட்டியதாலேயே இவை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. (இ-5-8)

## போதையில் கலாட்டா; இளைஞனுக்கு அபராதம்

மதுபான நிலையத்திற்கு முன்னால் போதையில் கலாட்டா செய்த இளைஞனுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் 2500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

நெல்லியடி சந்தியில் உள்ள மதுபான நிலையத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த இளைஞரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது நீதிபதி 2500 ரூபா அபராதம் விதித்ததுடன் கடும் எச்சரிக்கையும் விதித்திருந்தார். (இ-60)

## விளம்பரங்கள் அகற்றப்படும்

நல்லூர்ப் பிரதேச சபையின் எல்லைக்குள் விளம்பரப் பதாகைகள் அமைப்போர் சபையின் முறையான அனுமதியுடனே அமைத்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமலும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையிலும் அமைக்கப்பட்ட/அமைக்கப்படும் விளம்பரப் பதாகைகள் அனைத்தையும் அகற்றுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள இருப்பதாக நல்லூர் பிர்தேச சபை அறிவித்துள்ளது. (இ-5-81)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசம் வீதியில் அமைந்துள்ள நிலைய கட்டத்தில் நடைபெறவுள்ளது. கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி யாழ்.நாவலர் வீதி கிளை முகாமையாளர் திருமதி.துஷ்யந்தி அருளானந்தம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அன்றூ, யாழ்.கொட்டடி ஜே/83 கிராம சேவையாளர் திருமதி.யூலின் சாலினி, லயன் கலாநிதி க.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## துவிச்சக்கரவண்டியைத் திருடிய நபர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டி ஒன்றைத் திருடிய நபரை பிடித்து மக்கள் தம்மிடம் ஒப்படைத்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி மந்திகைப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் மந்திகை தேவரன் பகுதியில் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்றை திருடிக் கொண்டு ஓடிய போது குறித்த நபரை அப் பகுதி மக்கள் பிடித்துத் தம்மிடம் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## கோமாளிகளின் மகிழ் அரங்கு

சிறுவர்களுக்கான சுவிஸ் நாட்டுக் கோமாளிகளின் மகிழ் அரங்கு நிகழ்வானது இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். அச்சுவேலி அருள்நந்தி வித்தியாலயத்திலும்,பிப 4மணிக்கு யாழ்ப்பாணம், பழைய பூங்காவிலும் இடம்பெறும். இ




## மஹாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் அரியாலை மேற்கு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில் ஆலய புனராவர்த்தன நூதன பிரதிஸ்டா மஹாகும்பிஷேகம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.50 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை விநாயகர் வழிபாடும் நாளை திங்கட்கிழமை எண்ணெய் காப்பு சாத்துதல் வைபவம் இடம்பெறும். (இ-5)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணியளவில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராசா மகேந்திரன் குடும்ப உள்ளரங்கில் மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் தலைவர் செல்வி சாயினி சோதிராசாவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் செயலாளர் செல்வி விதுர்சிகா சிவராமச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து செல்வி தமிழினி இந்திரநாயகம், செல்வி டிலக்ஷனா தங்கராசா, செல்வி பவிந்தா ஜெகதீஸ்வரன், செல்வி டிலாஜினி இரத்தினசிங்கம் ஆகியோரின் கவி ஆற்றுகையும், செல்வி ந. துவாரகா, செல்வி ரேகா திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் பேச்சும், செல்வி மாதங்கி யாதவனின் பாடல் மற்றும் சிறுவர் நடனம், சில்லாலை சிந்திக்கும் சிறுவர் கழகத்தினரின் நாடகமும், மறுமலர்ச்சி இளைஞர் கழக உறுப்பினர்களின் சொற்சமர் நிகழ்வும் பொது அறிவுப் போட்டியும் விசேட நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன. (இ-5)


# வடமாகாணத்தில் 111 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பட்டதாரிகளிற்கான ஆசிரியர் நியமனங்கள் 111 பேருக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வட மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது.

வட மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை பூர்த்திசெய்யும் வகையில், 111 ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கும்நிகழ்வு வடமாகாண கல்வி அமைச்சில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. மாவட்ட ரீதியில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் குறித்த பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்டது. குறித்த ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வழங்கிவைத்தார்.





ஆசிரியர்களுக்கான நியமனம் பெறுவதில் கிளிநொச்சி மாவட்டத்தில் தொண்டராக பணிபுரிந்த ஆசிரியர் ஒருவரும் மாற்றுவலுவுடைய பட்டதாரி ஒருவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதில் சிங்கள ஆசிரியர்களுக்கான நியமனங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், மாகாண கல்வி பணிப்பாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-4)

## சங்காபிஷேகம்

சுன்னாகம்,மயிலணிஅருள்மிகுமுத்துமாரிஅம்மன்ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

காலை 8 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி 1009 சங்குகள் கொண்டு மஹா சங்காபிஷேகம் நடைபெறும். (இ-5)

★★★★★★★★★★

(சித்தன்கேணி)

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த் அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு அஸ்டோத்திரசத (108)சங்காபிஷேகம் இடம்பெறும். (இ-5-17)

## மின்விளக்குகள் ஒளிர்வதில்லை

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் வீதி,செல்வபுரம் வீதி,கரவெட்டிப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான வீதிகளில் உள்ள மின் விளக்குகள் ஒளிர்வதில்லை என பொது மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனால் மேற் குறித்த வீதிகளில் பொதுமக்கள் இரவு நேரங்களில் பயணிப்பதற்கு அச்சப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் பொருத்தப்பட்ட இம் மின் விளக்குகள் பயனற்றவையாக இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி மின் விளக்குகளை ஒளிரச் செய்து தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

### உரமானிய நிவாரணத்துக்கு பதிலாக

# பணம் வழங்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது

உரமானிய நிவாரணத்திற்கு பதிலாக பணம் வழங்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது என விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உரமானிய நிவாரணத்திற்கு பதிலாக விவசாயிகள் உரத்தைக் கொள்வனவு செய்ய பணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது.

உள்நாட்டு விவசாயிகள் உள்நாட்டு விவசாயத்தை பாதுகாக்க அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளை சீர்குலைக்க ஒரு சில அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். இவ்வாறான அரசியல்வாதிகள் ஆங்காங்கே விவசாயிகளை ஏமாற்றி போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

விவசாயிகளுக்கு நலன் வழங்குவது இவர்களது நோக்கமன்று, விவசாயிகள் மீது ஏறி சவாரி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதே இவர்களின் நோக்கமாகும். கடந்த காலங்களில் உர நிறுவனங்களை செல்வம் கொழிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாமோ விவசாயிகள் சொந்தக் காலில் நிற்கககூடிய ஓர் நிலைமையை உருவாக்க முயற்சித்து வருகின்றோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

0% NET FARE

*Condition Apply

VISA CARD ACCEPTED.

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,300/- | LONDON | 94,300/- |
| MADURAI | 17,000/- | TORONTO | 155,100/- |
| TRICHI | 27,400/- | MALDIVES | 24,100/- |
| BOMBAY | 30,100/- | PARIS | 88,300/- |
| BENGALURE | 30,900/- | NEWYORK | 118,800/- |
| KOCHI | 25,600/- | MELBOURNE | 92,800/- |
| DELHI | 39,400/- | CANTON | 68,900/- |
| MALAYSIA | 33,400/- | PERTH | 93,900/- |
| SINGAPORE | 33,800/- | NARITA | 73,800/- |
| BANGKOK | 31,800/- | AUCKLAND | 129,300/- |
| ONEWAY: CHENNAI - 12,500/- | | SYDNEY | 104,800/- |

DUBAI -15,900/-, DOHA -19,800/-, SHARJAH -15,900/-

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT

எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், விசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83

0212229555 / 0212228555

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280

No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322

NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence

## கேள்விப்பத்திர அறிவித்தல்

# மக்கள் வங்கி
# சுத்திகரிப்பு சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை , சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, ஆகிய கிளைகளிலும் யாழ்.நாவலர் வீதி, மானிப்பாய், மல்லாகம், உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கொடிகாமம், கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத 1000 ரூபா கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணம் செலுத்துவதன் மூலம் 2016 சித்திரை 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிவரை எந்தவொரு வார நாளிலும் காலை 9 தொடக்கம் பி.ப 4 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களை பெறலாம். வாங்க முன்பு கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு ஆவணங்களை விலைக்கு வாங்கிய பின்பு எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2016 சித்திரை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
இல. 82, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

Fax:021 222 2602
E-mail :jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல: 021 222 2601
021 222 8602

(சி-3977)

13.03.2016 இன்று யாழ். இராமநாதன் வீதி, ராஜா கிறீம்ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ள விழாவை ஒட்டிய

மணிவிழா வாழ்த்து



E.S.P. நாகரத்தினம்

பொன்மனச் செம்மல், தேசபுத்திர, மனிதநேய ஈகையாளன், கல்விக் காருண்யன், கல்விக் கதிரவன், ஈகைக் காவலன், இறைபணி வேந்தர், சமூகமாமணி, ஈகையார் திலகம், சைவப் புரவலர் அறுபதாம் அகவையில் கால் பதிக்கும் அன்புடையீர் அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்-உமை ஆதாரமற்றவர்க்கு தொழில் வாய்ப்பளித்து ஆகாரம் பண்ண வைத்து அரவணைத்தாய் ஆல்போல் தளிர்த்து அறுகுபோல் வேரூன்றி வாழ்க பல்லாண்டு

ஊழியர்கள்- E.S.P. நாகரத்தினம் அன்கோ பெப்சி மென்பான விநியோகஸ்தர் களஞ்சியம், அல்வாய் வீதி,கரவெட்டி.

13.03.2016 இன்று சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவை ஒட்டிய

மணிவிழா வாழ்த்து

E.S.P நாகரத்தினம்

அவர்கள்

பொன்மனச் செம்மல், தேசபுத்திர, மனிதநேய ஈகையாளன், கல்விக்காருண்யன், கல்விக்கதிரவன், ஈகைக்காவலன், இறைபணி வேந்தர், சமூகமாமணி ஈகையார் திலகம், சைவப்புரவலர்

பாசமுடன் பட்டறிவை பகிர்ந்து கொள்ளும் பெருந்தகையீர்!

பரிவுகாட்டி எமது தொழிலை மேம்படுத்த நல்லாசி கூறி பரிதவிக்கும் பாரோர் காயத்திற்கு பன்னீர் ஒத்தடம் நல்கும் பண்பாளனுக்கு பல்லாண்டு வாழ பார்வதி சமேத பரமேஸ்வரனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

நல்லூரான் கபே
381/A, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



## உங்கள் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

- இன்னொருவர் வாழ்க்கையை மலர வைப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் காண விரும்புகிறீர்களா?
- தற்கொலைச் செய்திகள் வருத்தம் தருகின்றனவா?
- முன்பின் தெரியாதவருக்கும் உதவ நீங்கள் தயாரா?

ஒரு தொண்டராகச் சேர்வீர்!

தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே எமது ஒரே நோக்கம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் நாம் கை கொடுப்போம். எம்முடன் இணைந்து பணியாற்ற விரும்பின் உடனே தொடர்பு கொள்ளுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்களை ஒதுக்க வேண்டும். சம்பளம் எதுவுமில்லை. ஏற்ற பயிற்சி வழங்கப்படும்.

### கை கொடுக்கும் நண்பர்கள்

Sri Lanka Sumithrayo, Jaffna Branch

யாழ்ப்பாணம்: (021) 222 8117 / 077 900 8776

வவுனியா: 077 306 8572

(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)

*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*



மணிவிழா வாழ்த்து

"பொன்மனச் செம்மல்" "கல்விக்காருண்யன்"

உயர்திரு

E.S.P. நாகரத்தினம்

அவர்கள் மணிவிழாவும் நூற்றாண்டு விழாவும் கண்டு அல்லலுறும் மக்களுக்கு அரும்பணி ஆற்ற எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினரும் அடியார்களும் கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கிளிநொச்சி.

# ESP நாகரத்தினம் அவர்களின் மன





### காரைநகர் ஈழத்து சிதம்பர தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச் செய்தி

திருவும் கல்வியும் சீரும் தழைத்த எமது காரைநகரில் பிறந்த பெருவணிகன் திரு. ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அவர்கட்கு யாழ்ப்பாண கல்விச் சமூகம் மணிவிழா மலர் வெளியிடுவதையறிந்து சந்தோஷப்படுகின் றேன்.மனிதருள் மாணிக்கம் போன்ற திரு.E.S.P.நாகரத்தினம் அவர்கள் அவரது தந்தையர் இட்ட வியாபாரத்துறை என்னும் வித்தை உழைப்பு என்னும் நீரை வார்த்து பெரிய விருட்சமாக்கி வைத்துள்ளார்.அந்த விருட்சத்தில் கனிந்த பழங்களை பல துறைகளுக்கும் வழங்கி பிரயோசனப்படுத்துகின்றார். அந்தச் செல்வம் இறைவனால் வழங்கப்பட்டதனால் இறைப்பணிக்கும் அன்னதானப் பணிக்கும் கல்விப் பணிக்கும் நன்கொடை செய்து வருகின்றார்.புன்முறுவல் பூத்த முகத்துடன் பண்பாகப் பழகி உதவி கேட்கும் ஒவ்வொருவருக்கும் உதவிபுரிந்து வருகின்றார்.எமது ஆலயத் திருப்பணிக்கு முன்வந்து எனது மாமனார் சிவபூமி. க. வைத்தீஸ்வரக்குருக்களின் ஆசியுடன் அப்பணியில் ஈடுபட்டதனால் அவர் இன்று உலகம் மதிக்கும் ஒரு சீமானாக திகழவேண்டும்.

எல்லாம் வல்ல ஆண்டிகேணி ஐயனார் திருவருளால் அவர் நோய்நொடியின்றி வாழ்ந்து மென்மேலும் நற்பணிகள் செய்ய ஆசியைக் கூறி ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

சிவஸ்ரீ. வி.ஈஸ்வரக்குருக்கள்
ஈழத்துச் சிதம்பரம



### மக்களால் ஆசீர்வதிக்கப்பட்டவர்

எங்கள் மனங்களில் உயர்ந்த ஓர் இடத்தில் குடிகொண்டிருக்கும் திரு.E.S.P. அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தனது வாழ்க்கையில் கடின உழைப்பாலும், திறமையாலும், நேர்மையாலும் படிப்படியாக உயர்ந்து எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு மனிதனாக உயர்ந்து நிற்கிறார். மற்றவர்களுக்கு உதவுவதற்கு முதலில் மனம் இருக்க வேண்டும். வசதி படைத்தவர்கள் எல்லோரும் உதவுபவர்களாக இருப்பதில்லை. அதிர்ஷ்டவசமாக ஈகையில் நாட்டம் கொண்ட E.S.P. நாகரத்தினம் அவர்கள் தனது உழைப்பால் அதற்கான பொருளையும் தேடிக் கொண்டார். அவர் தனது கொடையில் கல்விக்கே அதிக முதலிடம் கொடுத்து வந்துள்ளார்.

மாணவரின் கல்வி மேம்பாட்டிற்காக தயக்கமின்றி அவர் அளித்து வரும் ஒத்துழைப்பும் ஆதரவும் அனைவரும் அறிந்ததே. அவரின் பொருளுதவியால் பயன்பெற்ற மாணவர்கள் பலர். மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஊக்கியாக தன்னை அர்ப்பணித்தார். அதனால் குடும்பத்தினருக்கு கிடைக்கும் ஆசிகள் ஏராளம். மிகவும் எளிமையான வாழ்க்கை முறையைக் கொண்ட அவர் ஏனையோருக்கு ஒரு முன்மாதிரி. வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறியவர். அதனால் அவர் ஏல்லாப்படிநிலைகளையும் ஆராய்ந்து அறியக்கூடிய பக்குவத்தைப் பெற்றுள்ளார். எல்லோராலும் அணுகக் கூடிய ஒரு கனவான். நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நடராஜா தெய்வேந்திரராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்.வலயம்.



### நல்லான் நாகரத்தினத்தால் நம் எல்லோர்க்கும் மழை பெய்யும்

கல்விக் காருண்யன் திருமிகு பேரம்பலம் நாகரத்தினம் ஐயா அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

**''நலமிகு நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே''**

என்ற முதுமொழிக்கிணங்க இவரின் நல்ல பண்புகளை எடுத்துரைப்பது எமது வருங்காலச் சந்ததிக்கு வழிகாட்டுவதாக அமையும்.

வளத்தால் மட்டுமன்றி மனத்தாலும் உயர்ந்த பெருமகன் சிலரிடம் வளமிருக்கும் மனமிருக்காது.பலரிடம் மனமிருக்கும் வளமிருக்காது.ஆனால் இவரிடம் இரண்டும் இணைந்தே இருப்பது இவருக்கும் பெருமை.எமது சமூகத்துக்கு பெருநன்மை.

அடக்கமும் எளிமையும் இவரது தனிச்சிறப்பு.கற்றோர்க்கு மட்டுமன்றி மற்றோர்க்கும் மதிப்பளிக்கும் பெருந்தகை. இறைபக்தியும் சமவாழ்வும் இவருடன் இரண்டறக் கலந்தவை.வேடம் தரிப்பதையும் போல புனைவதையும் அடியோடு வெறுப்பவர்.உண்மையாகவே வாழ்பவர்.

இரக்கமும் பரிவும் இவருடன் இயல்பாகவே பிறந்தவை. இரப்போருக்கு இல்லையென்னாது ஈயும் வள்ளல். இவர் உதவிகளில் பெரும்பகுதி எமது பிரதேசத்தின் கல்வித்துறைக்கா னது.ஆயிரம்,பத்தாயிரம் அல்லது பல இலட்சங்களை தயங்காது அள்ளிக் கொடுப்பவர்.சிறு உதவிக்கே பெறு விளம்பரம் தேடும் இவ்வுலகில் இவர் வித்தியாசமானவர்.தனது வள்ளல்தன்மையை ஒருபோதும் விளம்பரம் செய்ய விரும்பியவரல்லர்.இம்மணி விழா கூட அன்புள்ளவர்களின் வற்புறுத்தலின் விளைவு தான்.

நானறிந்த தொழிலதிபர்களுள் சமூகஞ்சார்ந்து சிந்திப்பதிலும் உதவுவதிலும் முன்னிலை வகிப்பவர் இவரே.

எனது கல்லூரியின் வறிய மாணவர் பலருக்கு ஈருருளிகள் வழங்கி உதவியதை கல்லூரிச்சமூகம் நன்றியுடன் நினைக்கிறது.

இவர் நலம் பெருகவேண்டும்.வளம் பெருக வேண்டும்.
அதன் மூலம் எமது சமூகம் நலன் பெற வேண்டும்
இயற்கை அருள வேண்டும்.

க.அருந்தவபாலன்
முன்னாள் அதிபர்,
யா/டிறிபேக் கல்லூரி.



### பேராயரின் ஆசிச்செய்தி

"ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு" - தமிழ் மறை

உயர்திரு. E.S.P நாகரத்தினம் அவர்களின் அறப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி என்பவற்றைக் கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அக்கல்விக் காருண்யனுக்கு மட்டுமன்றி, அவருக்கு விழாவெடுக்கும் அன்புள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

"நல்லார் குணங்களை உரைப்பதுவும் நன்றே" என்பது ஔவையாரின் அமுத மொழி. திரு. நாகரத்தினம் அவர்கள் பெருஞ் செல்வத்தை ஈட்டியதோடமையாது அதனை நற்பணி களுக்காகவும் பயன்படுத்தி வருகின்றார். எத்தர்களும் ஏமாளிகளும் நிறைந்த இவ்வுலகில் இன்றும் பல பொன்மனச் செம்மல்கள் தோன்றுவதற்கு இவர் வாழ்க்கை உந்து சக்தியாக அமையும்.

அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன



### எம் மண்ணிற்குப் பெருமை சேர்த்த கொடை வள்ளல்

மணிவிழா நாயகன் திரு. E.S.P. நாகரத்தினம் அவர்களின் மணிவிழா மலருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் என்ற ரீதியில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடை கின்றேன்.

சிறந்த கொடை வள்ளலும் சமூகசேவையாளருமான திரு.நாகரத்தினம் அவர்கள் எமது மண்ணிற்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. சிறந்த பரம்பரை வியாபாரியான இவர் கடந்த 15 ஆண்டுகளாக ஆன்மீகப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி என ஆற்றிய பணிகளால் எமது சமூகம் அடைந்த பயன்கள்,அதனால் பெற்ற உயர்வுகள் மிகப்பெரியது. இப்படியான ஒருவரை கௌரவிப்பது சமூகத்தின் கடமையாகும். இவர் சமூகத்திற்கு ஆற்றிய பொதுப்பணிகள் சமூகப்பணிகள், கல்விப்பணிகளை கௌரவிக்கும் முகமாக சமூகத்தால் **"பொன்மனச் செம்மல்", "மனிதநேய ஈகையாளன்", கல்விக் காருண்யன்"** என கௌரவப்பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திரு.நாகரத்தினம் அவர்கள் தனது நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஒரு வீதத்தினை சமூகப்பணிக்கு செலவிட்டு வருகின்றார். இது மட்டுமன்றிப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றார்.

சிறந்த சமூகப்பணியாளருமான திரு.நாகரத்தினம் அவர்கள் ஆற்றிய சமூகப்பணிகளும் அறப்பணிகளும் கணக்கிட முடியாதவை. பொது அமைப்புக்கள் மற்றும் ஆலயங்களில் கட்டடங்களை அமைத்ததோடு நின்றுவிடாமல் பல்வேறு சேவைகளையும் வழங்கி வருகின்றார். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளர் நலன் புரிக்கான உதவிகளை வழங்கியதோடு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு புதிய கட்டடத்தை அமைப்பதற்கான காணியையும் வழங்கியுள்ளார். இன்னும் பல இவர் ஆற்றிய பொதுப் பணிகள அளப்பரியது. இவ்வாறானதொரு கொடைவள்ளலும் சமூக சேவையாளரும் எமது மண்ணிற்கு கிடைப்பது மிகவும் அரிதாகும்.

மணிவிழாவினை காணும் திருE.S.P.நாகரத்தினம் மேலும் தசாப்தங்களையும் விழாக்களையும் கண்டு எல்லாம் வல்ல இறைவனின் அருளால் தொடர்ந்தும் நாட்டுக்கு சேவையாற்ற வேண்டுகின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்



### நோயாளரின் துயர் துடைத்த உத்தமர்

ஈழவளநாட்டின் வடமேற்கே அமைந்துள்ள காரைநகர்ப்பதியில் தோன்றிய திருவாளர் நாகரத்தினம் அவர்கள் நியாயமுடனும் கண்ணியத்துடனும் வர்த்தகத்தில் ஈடுபடுவதனால், மக்கள் மத்தியில் பெருமதிப்புடன் திகழ்கின்றார். இவர் வர்த்தகச் சமூகத்திற்கு ஒரு முன்னுதாரணமாக நின்று தாம் பெற்ற செல்வத்தின் ஒரு பகுதியை கஷ்டப்பட்ட மக்களுக்கு கஷ்டம் துடைக்க வழங்க வேண்டுமென நினைத்த ஒரு வள்ளலுமாவார். இவர் மேலும் பல ஏழைச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகளைச் செய்து வந்தமையினால் கல்விச் சமூகத்தினரால் ஏகோபித்த தொனியில் **"கல்விக்காருண்யன்"** எனப் புகழப்பட்ட பெருந்தகையுமாவார்.

நான் வடபகுதியின் முதலாவது புற்றுநோய் சிகிச்சை நிபுணராக நியமிக்கப்பட்ட காலந்தொட்டு எனது ஊரைச் சேர்ந்த இவருடன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் துயர் துடைக்கும் தேவைகளுக்காக மிகவும் நெருங்கிப் பழகவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடைமைப் பிரச்சினைகளுக்காக பணவுதவி செய்வதில் முன்னின்று உழைத்தவர். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அன்று யுத்தம் முடிந்தவேளை, தென்பகுதியிலி ருந்து வடபகுதி நோக்கி நடைபவனி மூலம் பல மக்கள் மனமுவந்தளித்த பணத்தினால் உருவான புற்றுநோய் சிகிச்சைக் கட்டடத் தொகுதி அமைந்துள்ள நிலத்தின் பெரும்பகுதியை அன்னாரின் நிதியுதவியுடனேயே பெற்றுக் கொண்டோம் என்பதை இங்கு உறுதிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். உண்மையிலே இந்தப் புற்றுநோய்ச் சிகிச்சைக் கட்டடத் தொகுதியானது இந்நாட்டின் சகல இன மக்களின் நல்லெண்ணத்தினால் உருவான ஒரு "நினைவாலயம்" என்றே கருதவேண்டும்.

எந்த ஒரு நாட்டில் மக்கள் தேசபக்தியும் தெய்வபக்தியும் கொண்டு ஒழுகுகின்றனரோ அந்த நாடு எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கும் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே மணிவிழா நாயகன் திருவாளர் நாகரத்தினம் அவர்கள் போன்று நாம் ஒவ்வொருவரும் நாம் வாழும் காலத்தில் தன்னலம் கருதாது.

**"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந்தனவே"**

என்ற புரட்சிக்கவிஞன் மகாகவி பாரதியாரின் வாக்குக்கு இணங்க பிறந்த நாட்டிற்கு தொண்டாற்றி இன்புற்றிருக்க வேண்டும்.

" இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க" !!

Dr.நடராஜா ஜெயகுமாரன்
புற்று நோய்ச் சிகிச்சை நிபுணர்,
மகரகம தேசிய புற்றுநோய் நிறுவனம், இலங்கை.



### தொல்லுலகில் நல்லார் ஒருவர் ''உளரேல் -அவர்பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை''

என்னும் வாக்கிற்கு உரம் கொடுப்பது போல் எங்கள் தமிழ்த்தாய் பெற்றெடுத்த புதல்வர்கள் சிலர் வடபுலத்து யுத்த பாதிப்புக்கு உள்ளான உறவுகளைத்தாங்கும் கரங்களாக சிலர் இருப்பதனால்தான் ஆன்மீகம்,கல்வி போன்றனவற்றில் ஓரளவுக்கேனும் எமது சமூகம் முன்னிலை நோக்கி செல்வதற்கு காரணம் எனலாம். கல்விக் கொடையாளர் பொன்மனச் செம்மல் ESP நாகரத்தினம் அவர்கள் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு ஏதோ செய்து அவர்கள் உயர்வுக்கு வழிவகுத்துள்ளார் என்பதனை கடந்த ஒருமாதமாக பத்திரிகைகளில் சுயமாக பிரசுரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வாழ்த்துச் செய்திகள் பறைசாற்றி நிற்கின்றன.

அந்தவகையில் கல்விக்கொடையாளர் பொன்மனச் செம்மல் E.S.P. நாகரத்தினம் அவர்களை எனது சகோதரனாகவே என்றும் எண்ணிப் பெருமைப்படுவேன்.எனது சகோதரன் இலங்கையில் எந்தவொரு வர்த்தக சமூகமும் பெற்றிராத 12 கௌரவப்பட்டங்களை கல்வியியலாளர்களுக்கு ஊடாகப் பெற்றிருப்பது என்பது உண்மையான உழைப்பில்லாமல் சாதாரணமாக பெற்றிருக்கக் கூடிய விடயமல்ல.யாழ்.மாவட்டம் தழுவிய வகையிலும் வெளியிலும் அவர் செய்த நற்பணிகளே இத்தகைய பாராட்டுக்களுக்கும் வாழ்த்துக்களுக்கும் காரணமாகும்.

அன்புச்சகோதரனின் மணிவிழா மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் இவரின் உதாரணம் மற்றைய நிதிவளம் கொண்ட அன்பர்களுக்கு வழிகாட்டியாக மணிவிழாக்காட்சிகள் இருக்கும் என எனது மனக்கண் கண்டு நிற்கின்றது. மணிவிழா நாயகன் நூற்றாண்டு கண்டிட ,இறைவனை வேண்டுகிறேன்.

மாணிக்கம் சுப்பிரமணியம்
38B-செறிபெறிகாடின், பம்பலப்பிட்டி,கொழும்பு-4.



### கொடையின் நாயகனாய் 60வது அகவையிலே,..

E.S.P நாகரத்தினம் ஐயா அவர்களின் மணிவிழாக் காணும் பெருவிழாவில் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி,சமயம்,சமூகம் என முப்பணிகளிலும் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கி யாழ்.குடாநாட்டின் முதன்மையான கொடைவள்ளலாக மிளிர்ந்து கொண்டிருக்கும் அவரின் சேவையை கௌரவிக்கும் வகையில் குடாநாட்டின் பல்துறை சார்ந்த சமூகங்கள் இணைந்து மணிவிழா நிகழ்வை சிறப்பாக முன்னெடுப்பது மற்றோரையும் இப்பணிகளில் ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

எளிமையான தோற்றமும் மற்றோருடன் இயல்பாய் பழகும் மனநிலையும் வேண்டியோருக்கு வழங்கும் கொடை இயல்பும் அவரின் சிறப்பம்சங்கள்!

கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள எமது பொற்பதி அறிவாலயக் கட்டடத் தொகுதிக்கு அவர்கள் கைகளால் அடிக்கல் நாட்டி 65 பைக்கற் சீமெந்தையும் வழங்கி உதவி எமது முயற்சியை ஊக்குவித்ததால் இன்று அக்கட்டடத் தொகுதி சிறப்பாக மளிர்ந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது.

நாயகனின் **நாகரத்தினமாலை** மணிவிழாச்சிறப்பு மலரில் புகைப்படங்களைத் தொகுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது தான் அவர் குடாநாட்டின் பல்துறை சார்ந்த பொதுவிடயங்களுக் குளவ்வாறான பங்களிப்பை மிகவும் அமைதியான முறையில் வழங்கி சேவையாற்றியுள்ளார் என்பதை அறிந்து வியந்தேன்!


நாயகனின் சேவை மணிவிழா கடந்து பவளவிழா தாண்டி குடாநாட்டு மக்களுக்கு கிடைக்க எமது நிலையத்தின் சார்பில் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

Lion. S.N.பிறேம்குமார்
(சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்)
செயலாளர்,பொற்பதி அறிவாலயம்.

# ணிவிழா சிறப்புமலர்-13.03.2016



## தன்னடக்கம் கொண்ட கொடையாளர்



திரு. E.S.P.நாகரத்தினம் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் அவரது மணிவிழாவிற்கு தலைமை ஏற்பதி லும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மனிதநேயம் எவ்வாறு மக்களி டம் வளர்க்கப்படலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஒரு பெருந்தகை இவராகும். காரைநகர்க் கிராமத்தில் பிறந்து ஒரு வியாபாரியாக தோற்றம்பெற்ற இவரது வாழ்க்கை இன்று தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் மக்களால் பேசக் கூடியவாறு தோற்றம் பெற்றதை எவராலும் பாராட்டப்படாமல் இருக்கமுடியாது.

பணத்தை தமக்கெனச் சேமிக்காமல் எப்படி ஊர் மக்கள் பயன் பெற மாற்றலாம் என்பதே அவரது வாழ்க்கையின் இலட்சியமாகும். கல்விப்பணி, சமூகப்பணி, அறப்பணி என்ற பல்வேறு கோணங்களில் அவரது சேவையானது பரந்து, விரிந்து கிடப்பதனைக் காண்கின்ற வேளை யில் அவருக்கான ஆளுமையின் வளர்ச்சியினை வியக்காமல் இருக்க முடியாது.

திரு.நாகரத்தினம் அவர்கள் தனது தொழிலில் காட்டிவரும் ஆர்வத்தினையும் அங்கு பணி புரியும் ஊழியர்கள் மீது பயன்படுத்தும் முகாமைத்துவ நுட்பங்களையும் நேரடியா கவே நான் பார்த்திருக்கிறேன். "ஊழியர் நோக்கிய முகாமைத்துவம்" என்ற வகையில் ஊழியர் களை மையப் படுத்திய முகாமைத்துவ நுட்பத்தை கடைப்பிடிக்கும் காரணத்தால் மகிழ்ச்சி யாகப் பணி புரியும் ஊழியர்களை அவரால் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. இதேபோல் எப் பொழுதும் ஜப்பானிய முகாமைத்துவத்தை பின்பற்றும் பண்பு கொண்டவராக அவரது நடத்தை அமைந்துள்ளது. ஒருவர் தன்னிடம் எந்தவொரு உதவியைக் கேட்டாலும் அதனை செய்து கொடுக்க வேண்டும் என்ற நேர்கணிய மனப்பாங்கு காரணமாகவே முரண்பா டென்பதை வாழ்க்கையில் சந்திக்காத ஒரு பெருந்தகையாக அவர் விளங்கு கின்றார்.

கொடையால் புகழ் பெற்ற திரு.நாகரத்தினம் அவர்கள் காரைநகர் உட்பட யாழ்ப்பாண த்திலுள்ள பல கோயில்களின் விருத்திக்காக வருடாந்தம் பெருமளவு பணத்தை வழங்குவதைக் காண்கின்றோம். அதேபோல் கல்விப் பணிக்கென அவர் வருடாந்தம் பெருமளவு பணத்தினை ஒதுக்கி, ஏழை மாணவர்களுக்கு மாதாந்தம் இலட்சக்கணக் கான பணத்தை அன்பளிப்பாக வழங்கி வருகின்றார். பாடசாலைகள் தொடங்கி பலகலைக் கழகம் வரை அவரது கல்விக்கான கொடை பரந்து விரிந்து கிடப்பதைக்காண முடிகின றது. இதேபோல் அவரது சமூகப் பணியையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

லயன்ஸ் கழகத்தில் இணைந்து மருத்துவப் பணிக்கென எடுத்துவரும் நடவடிக்கைகள் அவ ரின் சமூகப்பணியைக் காட்டுவனவாகும். இதே போன்று பல நூலகங்களின் கட்ட வளர்ச் சிக்கும் நூல்களின் அதிகரிப்பிற்கும் அவர் ஆற்றி வரும் பணிகளைக் காண்கின்ற வேளை யில் அவரது சமூக மேம்பாட்டுச் சிந்தனையின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

மொத்தத்தில் அவரது பல்பரிமாணம் கொண்ட பணிகள் சமூகத்தால் என்றும் மதிக்கப்படும் காத்திரமான பணிகள் என மகிழ்வதுடன், அவர் இப்பணிகளை ஆற்ற நல்ல உடலாரோக்கியத்தையும், திடமான சிந்தனையை யும் இறைவன் அவருக்கு வழங்க வேண்டுமென இறைஞ்சி, அவர் தனது குடும்பத் தாருடன் பல்லாண்டு சீருடன் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் க. தேவராஜா**
**தலைவர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம.**

## சின்மயாமிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி



காரைநகர் வாரிவளவில் பிறந்து, நீண்ட காலமாக நல்லூரில் வாழ்ந்துவரும் இராமு சண்மு கம் பேரம்பலம் நாகரத்தினம் அவர்கள் 01.01.2016 இல் அகவை அறுபதை நிறைவு செய்து, இன்று மணி விழாக் காண்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

கடந்த 60 ஆண்டுகளில் அயராது உழைத்து, அறப்பணிகள் பல ஆற்றிவரும் இவர் இறைவன் திருவருளால் தனது கடும் உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் வியாபாரத்தின் மூலம் பொருள் சம்பாதித்து, பணம் படைத்தவராக மிளிர்வதுடன் பிறர்க்கு ஈயும் மனம் படைத்தவராகவும் இருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். அதற்கு ஏற்றவகையில் இறையருளால் இவருக்கு வாய்த்த மனைவியும் அதே சிந்தனையுடன் அறப்பணிகளை ஆற்றுவதற்கு அனுசரணையாக அமைந்திருப் பது சிறப்புக்குரியதாகும்.

இத்தம்பதியினர் "கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" எனும் கீதா உபதேசப்படி அறப்பணியை தமது கடமையாகச் செய்து வருகின்றனர். இத்தகைய பெருந்தகையாளர்கள் குடும்ப சமேதரராய் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பல பணிகள் ஆற்றி இறை சிந்தனையுடன் இன்புற்றிருக்க ஆசிவேண்டி இறைவனையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

**இறைபணியில்**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
**வதிவிட ஆச்சார்யார்,**
**சின்மயாமிஷன்,**

## சமூக சேவையின் முன்னோடி



காரைமண் பெற்றெடுத்த தவப் புதல்வன் கல்விக் காருண்யன் E.S.P.நாகரத்தினம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையின் வடபுலத்தின் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய காரைநகர் கிராமம். இங்கு வாழும் மக்கள் கடின உழைப்பாளிகள், தமது வாழ்வாதாரத்தில் வர்த்தகத்தை பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். யாழ். நகரின் பிரபல தொழிலதிபர்கள் காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

தமது பிறந்த மண் மீது அதீத அக்கறையுள்ளவர்கள் நகரத்தில் தொழில் ஸ்தானத்தை கொண்டிருந்தாலும் வாரத்தில் ஒரு தடவையாவது ஊர் சென்று தமது பிறந்த வீட்டையும் பரம்பரை கோவிலையும் வழிபடும் வழக்கமாகக் கொண்டவர்கள். தமது ஊரினதும் பாடசாலைகள், கோவில்களின் வளர்ச்சிக்காக காரை அபிவிருத்திச்சபை என்ற அமைப்பை உருவாக்கி ஊரின் வளர்ச்சியை மேனிலைப்படுத்தி வருகின்றார்கள். தமது வர்த்தக அரசியல் பலத்தைப் பயன்படுத்தி கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துள்ளனர். இங்கு வாழ்கின்ற மக்களுக்காக பிரதேச செயலகம், பிரதேச சபை, கோட்டக் கல்வி அலுவலகம், வைத்தியசாலை போன்றவற்றை உருவாக்கி சிறந்த சேவையை வழங்கி வருகின்றது.

இத்தகைய பெருமைக்குரிய மண்ணில் பிறந்து வளர்ந்து ஊரின் வளர்ச்சியில் இரண்டறக் கலந்தவர் மணிவிழா நாயகன் நாகரத்தினம் அவர்கள். ஊரில் இவர் இல்லா விழாக்களோ, சபைகளோ, அபிவிருத்தி முயற்சிகளோ கிடையாது. இன்று யாழ். மண்ணில் முன்னெடுக்கப்படும் கல்வி, சமய, சமூக பணிகளில் இவரின் பணிகளும், பங்குகளும் மகத்தானவை. இவரின் வாழ்வியலில் எளிமை, தூய்மை, அடக்கம், பணிவு, நேர்மனப் பான்மை போன்றவற்றை கண்டிருக்கின்றேன். நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராக இருக்கும்போது எனக்கும் அவருக்கும் நெருக்கமான தொடர்புகள் ஏற்பட்டது. இக்கல்லூரியில் முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுகளிலும் நலன்விரும்பியாக இருந்து பங்காற்றியவர். யாழ் கொக்குவில், இந்துக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற இந்துக்களின் சமர் துடுப்பாட்டப் போட்டிக்கு அனுசரணை வழங்கிய பெருமைக்கு ரியவர்.

இச்செயற்பாட்டின் மூலம் இரு கல்லூரிகளின் துடுப்பாட்ட வீரர்களின் வளர்ச்சி, துடுப்பாட்ட மேம்பாட்டிற்கு பெரும் துணையாக இருந்தவர். கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழாவில் விருந்தினராக கலந்து விழாவைச் சிறப்பித்தார். யாழ்ப்பாண கல்வி வலயத்தால் முன்னெடுக்கப்பட்ட தரம் 5 மாணவர்களின் சாதனையாளர்கள் கௌரவிப்பு, க.பொ.த (சாதாரணம்) போன்ற கல்வி செயற்பாடுகளில் அனுசரணை வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்திய செம்மனச் செல்வர். பல பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக அனுசரணை வழங்கி வ்ருபவர். பாலர் முதல் பல்கலைக்கழகம் வரை வறிய மாணவரின் கற்றல் விருத்திக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிகள் வழங்கும் பெருந்தகையர். சமய, சமூக, செயற்பாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கோவில்களின் புனரமைப்பு, புனருத்தாரணம், குடமுழுக்கு போன்ற வேலைகளுக்கு நாடி வருபவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி உற்சாகப்படுத்தும் சமயப் பற்றாளன்.

சமயம் சார்ந்த பல்வேறு பணிகளை மனத் திருப்தியுடன் ஆற்றும் பண்பாளன் தான் சார்ந்த அமைப்பின் ஊடாக பல மருத்துவ முகாம்களை நடத்தி ஏழை, எளியவர்களுக்கு துணையாக செயற்பட்டவர். சமூகத்தில் உள்ள நூல்நிலையங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், விவசாயக் கழகங்கள் போன்றவற்றிற்கு தன்னாலான பங்களிப்பை நல்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்று பல்வேறு சமூக பட்டங்களைப் பெற்றுள்ளார். இன்று இளைய தலைமுறையினரை சமூகப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னோடியாக விளங்குபவர் நாகரத்தினம் என்றால் மிகையாகாது.

இவரின் பணிகளை வாழ்த்துரையின் மூலம் நிறைவு செய்ய முடியாது. இவரின் கல்வி, சமூக, சமய செயற்பாடுகளை வளரும் இளம் வர்த்தக சமூகம் முன்னோடியாகக் கொண்டு செயற்படுவதன் மூலம் வழிதவறி நிற்கும் எமது சமூகத்திற்கு நல்வழிகாட்டியாக அமையும் என எண்ணுகின்றேன். என் அன்புக்குரிய அண்ணன் E.S.P.நாகரத்தினம் அவர்களும் அவர் குடும்பமும் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து சமூகப் பணி செய்ய வாழ்த்துகின்றேன்.

**அ.அகிலதாஸ்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர் .**

## சேவையால் உயர்ந்த உத்தமர்



உயர்திரு லயன் E.S.P. நாகரத்தினம் அவர்கள் தனது மணிவிழாவை கொண்டாடும் இத் தருணத்தில் அவருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பல வருடங்களாக உழைக்கின்ற செல்வத்தில் கல்விப்பணி, சமூகப்பணி, ஆன்மீகப்பணி ஆகியவற்றில் போற்றத்தக்க சேவையால் எமது சமூகத்திற்கு தொண்டாற்றிய உயர்திரு லயன் E.S.P. நாகரத்தினம் அவர்கள் அறுபதாவது அகவையில் மணிவிழா காண உள்ள இத்தருணத்தில் அவர்களின் சேவையினை நினைவுகோருவதுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன். இவர் செய்த சேவைகளில் குறிப்பிட்டு கூறுவதென்றால் தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதி கொண்ட புற்றுநோய் வைத்தியசாலை அமைய 18 பரப்பு காணியை தனது சொந்தப்பணத்தில் கொள்வனவு செய்து அன்பளிப்பு செய்தமை, பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்களிற்கான பண உதவி, கோயிற் திருப்பணிகளிற்கான நிதி உதவி மற்றும் பாடசாலை மாணவர்களிற்கான விளையாட்டுப்போட்டி உதவிகள் என்பவற்றை தொடர்ந்து செய்து வருவதைக் கூறலாம்.

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்"**

என்ற பொய்யா மொழிப் புலவனின் வாக்கிற்கமைய இவரது ஐந்து புதல்வர்களும் சிறந்த கல்வி கற்று சிறப்புடன் வாழ்வதைக் கொண்டே இவரைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மணிவிழா நாயகன் உயர்திரு லயன் E.S.P.நாகரத்தினம் அவர்கள் மணிவிழாவை கொண்டாடும் இத் தருணத்தில் அவரை வாழ்த்தி அவர் தொடர்ந்தும் சமய,சமூக,கல்விப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு சமூகத்திற்கு தனது ஆதரவினை தந்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**இ.இளங்கோவன்**
**ஆளுநரின் செயலாளர்,**
**வ்டமாகாணம.**

## பிறருக்கு உதவி செய்யும் பெருந்தகை



பட்டங்களால் சில மனிதர்கள் பெருமையடைகின்றனர். எனினும் சில மனிதர்களோ பட்டங்களுக்குப் பெருமையையும் சிறப்பையும் அர்த்த முழுமையையும் வழங்குகின்றனர். **"சிவத்தமிழ்ச் செல்வி"** என்ற பட்டத்திற்கு அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் அர்த்த முழுமையை அளித்தார். **"கல்விக் காருண்யன்"** என்ற பதத்திற்கு எம் மணிவிழா நாயகன் திருமிகு இ.ச.பே. நாகரத்தினம் அவர்கள் உருவகமாகவே தன்னை ஆக்கியுள்ளார்.

பொதுவாக எல்லா மனிதர்களும் பிறர்க்குதவி செய்யும் போது மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைவது வழமை. இதனால் அவர்கள் தம்மாலியன்ற வேளைகளில் இயன்ற அளவில் பிறர்க்குதவி செய்ய விளைகின்றனர். எனினும் எமது மணிவிழா நாயகனோ **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** எனப் பிறர்க்குதவி செய்வதைத் தனது வாழ்வின் நோக்கமாகவே வரித்துக் கொண்டுள்ளார்.

ஒவ்வொரு ஜனவரி முதல் நாளிலும்,ஆங்கிலப் புதுவருட தினத்தில் புத்துணர்வோடு எமது வங்கியின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக எமது வங்கியின் தூண்களாக விளங்கும் வாடிக்கையாளர்களை எமக்கு ஆசி வழங்க அழைப்பது எமது வழமை. தான் பிறந்த நன்னாளாம் ஜனவரி முதல் நாளில் திருவிளக்கின் முதலொளியேற்றி எம்மோடிணைந்து எமை வாழ்த்தி உற்சாகப்படுத்துவதை அவரது பிறந்த நாள் கடமைகளில் ஒன்றாக அவர் ஆக்கியுள்ளார். அவருடைய வங்கியாளர்களாக விளங்குவதில் ஹற்றன் நஷனல் வங்கி பெருமையடைகிறது.

இம்மணி விழா ஆண்டில், மணிவிழா நாயகனை நீடித்த ஆயுளும், பூரண ஆரோக்கியமும் கொண்டு தன் குடும்பத்தவ ருடன பல்லாண்டு மகிழ்ந்திருக்க எல்லாம் வல்ல வாரிவளவு விநாயகர் அருளை இறைஞ்சி வாழ்த்துகின்றோம். இவ் வாழ்த்து குலோத்துங்கன் அவையில் ஔவையார் பிராட்டி விளம்பிய **"வரப்புயர"** என்பதற்கு ஈடாகும். ஏனெனில் எம் மணிவிழா நாயகன் மகிழ்ந்து வாழ எம் சமூகம் அவரது அறப்பணிகளால் மகிழ்ந்து வாழும்.

வாழ்க வளமுடன்!

**க. இந்திரீவாசன்,பிராந்திய முகாமையாளர்,**
**HNB வட பிராந்தியம்.**

## வானுயர்ந்த பெருமையாளன்




கல்விக் கொடையாளர், "பொன்மனச் செம்மல்" E.S.P நாகரட்ணம் அவர்களின் மணி விழா நிகழ்விற்காக வெளியிடப்படும் **"நாகரத்தின மாலை"** என்னும் நூலுக்கும், பத்திரிகைச் சிறப்பு மலர்களுக்கும் வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 60 ஆண்டு கால வாழ்க்கை வயதில் 30 ஆண்டு காலம் பொதுப்பணியில் எவரும் எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு காலத்தால் அழியாத, கள்வரால் களவு எடுத்துச் செல்லமுடியாத கல்வியை மையமாக வைத்து ஆற்றிய கொடைகளும், சேவைகளும் ஐயா அவர்களை வானம் அளவு நிறையக் கூடிய புகழுக்கும், பெருமைக்கும் இட்டுச் சென்றிருக்கின்றது.

காரைநகரில் வாரிவளவின் உயர்பண்பும், விழுமியமும் உள்ள குடும்பத்தில் பிறந்து, யாழ்.குடா நாட்டில் கல்விப் புலத்தவர்கள் மனதிலும், மக்களின் மனதிலும் ஆழப்பதிந்தவர். துணிவும், முயற்சியும் கொண்ட E.S.P. அவர்கள் யாழ்.குடாநாட்டின் வர்த்தகப் பெருமகனின் வரிசைப்படுத்தலில் முதல் தரத்தில் வைத்துப் போற்றப்படுபவர். கடந்த ஒரு மாதமாக வலம்புரிப் பத்திரிகை ஊடாக, ஐயா அவர்களின் மணி விழா வாழ்த்தினை மீட்டுப்பார்த்துச் சிந்திக்க முடியும். இலங்கையின் அரச நிர்வாகத் தின் உயர் மட்டத்தில் இருந்து, அடிமட்டம் வரை E.S.P.நாகரத் தினம் அவர்களின் தன்னிகர் அற்ற பொதுச் சேவையினை உணர்ந்து பல இடங்களில் மதிப்பளித்த தன்மைகள் பெருமை யளிக்கும் விடயமாகும். மணிவிழாக் காணும் நாயகன் நூற்றா ண்டு விழாவும் காண இறைவன் அருள் வேண்டி, வாழ்த்தி நிற்கின்றேன்.

**சி. மாணிக்கராசா**
**செயலாளர், மணிவிழாச்சபை**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர்**
**யாழ்ப்பாணக்கல்வி வலயம்.**

# வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் சரத் பொன்சேகாவே முதலில் சிக்குவார்!



## கெஹெலிய தெரிவிப்பு



**வெள்ளைக்கொடி விவகாரத்தில் உண்மையான விசாரணைகளை முன்னெடுத்தால் இந்த குற்றச்சாட்டில் முதல் குற்றவாளியாக சரத் பொன்சேகாவே சிக்குவார் என பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பாதுகாப்பு தரப்பு பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

பிரபாகரன் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே யுத்த வெற்றியை அறிவித்தோம். இறுதி யுத்தத்தின் பின்னரும் பிரபாகரன் உயிரோடு இருக்கவில்லை. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் பொய்யான வரலாற்றை கூறுகின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அழுத்தமும், ரணில் விக்கிரமசிங்கவின் தூண்டுதலிலும் வெள்ளைக்கொடி விவகாரத்தில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று பொன்சேகா கூறுகின்றார். இந்த விவகாரத்தில் உண்மையான விசாரணைகளை முன்னெடுத்தால் இந்த குற்றச்சாட்டில் முதல் குற்றவாளியாக சரத் பொன்சேகாவே சிக்குவார் எனவும் அவர் தெரிவித்தார்.

இறுதி யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் பிரபாகரன் உயிருடன் இருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் அப்போதைய பாதுகாப்பு தரப்பு பேச்சாளராக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரத் பொன்சேகா என்ற நபர் ஒரு நல்ல அரசியல்வாதியோ அல்லது நல்ல இராணுவத் தளபதியோ அல்ல. அவர் எந்த நிலையிலும் விலைபோகக்கூடிய நபர். அவர் பலமான நபராகவோ மக்களின் ஆதரவை பெற்றிருந்த நபராகவோ இருந்திருந்தால் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருகக வேண்டும். ஆனால் அந்த தேர்தலில் அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டு மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார்.

யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் அவர் இராணுவத் தளபதியாக இருந்துள்ளார். ஆனால் யுத்தத்தை முன்னெடுத்து சென்றுள்ளார் என்று கூறுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் மாத்திரம் தலைமை தாங்கி யுத்தத்தை முடிக்கவில்லை. எமது அரசாங்கம் வழிநடத்தியது. பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வழிநடத்தினார். மாறாக சரத் பொன்சேகா என்ற தனி நபர் மாத்திரம் யுத்தத்தில் நாயகனாகப் பார்க்கின்றமையை ஒருபோதும் ஏற்றுகொள்ள முடியாது.

சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அனைத்தும் பொய்யானவையாகும். அதேபோல் பாராளுமன்றத்தில் அவரின் உரையை அவதானிக்கும் போதும் அதில் முழுமையாக மகிந்த ராஜபக்ஷ மீதும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும வைராக்கியத்துடனும் பழி வாங்கும் நோக்கத்துடனும் மாத்திரமே உள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலப்படுத்தும் வகையில் ராஜபக்ஷ குடும்பம் பணம் கொடுத்ததாகவும் பசில் ராஜபக்ஷ புலிகளை பலப்படுத்தி செயற்பட்டார் என்று கூறுவதும் முழுமையான பொய்யாகும். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பசில் ராஜபக்ஷவோ அல்லது கோத்தபாய ராஜபக்ஷவோ புலிகளுடன் நெருக்கத்தை பேணியிருந்தால் அப்போதே அவர் இதை வெளிப்படுத்தியருக்க வேண்டும். நாட்டினமதும் இராணுவத்தின் மீதும் பற்று கொண்ட நபர் ஏன் அப்போது இந்த உண்மைகளை மறைக்க வேண்டும். அப்படியாயின் அவரும் புலிகளுக்கு உடந்தையாக செயறபட்டிருக்க வேண்டும்.

மேலும் வெள்ளைக்கொடி விவகாரத்தில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். இந்த விவகாரத்தில் உண்மையான விசாரணைகளை முன்னெடுத்தால் இந்த குற்றச்சாட்டில் முதல் குற்றவாளியாக சரத் பொன்சேகாவே சிக்குவார். அவரின் தலைமையில் இடம்பெற்ற மிகப் பெரிய குற்றம் இதுவென்பதை மறந்துவிட்டோ அல்லது இந்த விவகாரத்தில் அவர் மீது இருக்கும் குற்றங்களை மறைத்துவிட்டோ வேறு ஒரு வகையில் செயற்பட பார்க்கின்றனர்.

மகிந்த, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை பழி வாங்கும் எண்ணத்தில் அவர்களை போர்க்குற்றவாளிகள் என்று சர்வதேச ரீதியில் தண்டிக்கும் முயற்சியில் அப்பாவி இராணுவத்தையும் சேர்த்து தண்டிக்கவே முயற்சிக்கின்றனர்.

மிகவும் மோசமான பயங்கரவாதிகளுடன் போரிடும் போதும் பல லட்சம் தமிழ் மக்களை வடக்கிலிருந்து காப்பாற்றும் மனிதாபிமான போராட்டத்தின் போதும் ஒரு சில தவறுகள் நடைபெறும். அதை தவிர்க்க முடியாது.

இந்த கருத்தை பல்வேறு நபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

டெஸ்மன் டி சில்வா தனது அறிக்கையிலும் இந்த காரணத்தை சுட்டிக் காட்டியுள ளார். ஆனால் இவவாறான சிறு சிறு காரணிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு மனித உரிமை மீறல்கள் நடந்தேறியது என கூறுவதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இப்போது அவர் கூறும் காரணங்கள் அனைத்தினதும் பின்னணியிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அழுத்தமும், ரணில் விக்கிரமசிங்கவின் தூண்டுதலும் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி, சரவதேச தரப்பு மற்றும் புலம்பெயர் புனிகளின் கட்டளைக்கு அடிபணிந்து இன்று மகிந்த தரப்பையும் இராணுவத்தையும் காட்டிக்கொடுக்கும் செயலை செய்து வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் மிகப்பெரய சூழ்ச்சித் திட்டம் இப்போது அரங்கேறி வருகின்றது.

மேலும் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருந்தார் என சரத் பொன்சேகா தெரிவித்தமையும் பொய்யான கருத்தாகும். பிரபாகரன் கொல்லப்பட்டது உறுதியான பின்னரும் கொல்லப்பட்டது அவர் தான் என பல தடவைகள் உறுதிப்படுத்திய பின்னருமே நாம் யுத்த வெற்றியை அறிவித்தோம்.

ஆனால் பிரபாகரன் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் சரத் பொன்சேகா அங்கு இருக்கவில்லை. ஜனாதிபதி பாராளுமன்றத்தில் யுத்த வெற்றியை தெரிவித்த பின்னரே சரத் பொன்சேகா அறிந்துகொண்டார்.

இவ்வாறு பல உண்மைகளை அறியாது பொயயான காரணிகளை பாராளு மன்றத்தில் தெரிவிப்பதனால் அனைத்தும் அங்கசரிக்கப்பட்டுவிடாது.

இப்போது உள்ள நிலையில் ரணிலின் அடிமையாகவே இவர்கள் அனைவரும் செயற்படுகின்றனர். மகிந்த ராஜபக்ஷவை யும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் பழிவாங்கும் ஒரே நோக்கத்தில் சரத் பொன்சேகா செயற்படுகின்றார்.

அடிமட்ட நிலைக்கு அவர் இறங்கியுள்ளார் என மேலும் தெரிவித்தார். (இ-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 90-120 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 | 160 | 200 | 120 |
| தக்காளி | 30 | 25 | 30 | 40 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 50 | 50 | 60 |
| கோவா | 50 | 35 | 50 | 60 | 80 | 50 |
| கரட் | 80 | 120 | 80-140 | 120 | 160 | 100 |
| பூசணி | 40 | 35 | 40 | 40 | 80 | 60 |
| புடோல் | 40 | 30 | 50 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 50 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 80 | 120 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 50 | 80 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 70 | 40 | 60 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 40 | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 70 | 80 | 120 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 60 | — | 100 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 15 | 30 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 100 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-45 | 50 | 40 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 160 | 100 | 140 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 100 | 60 | 120 | 70 |
| முள்ளங்கி | 40 | 20 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 | 70 |
| ஈரப்பலா | 50 | — | — | — | — | — |

# சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உரை உண்மையை புட்டு வைக்கும் வாக்குமூலம்

### அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



அமைச்சர் சரத் பொன்சேகா பாராளுமன்றில் ஆற்றிய உரை ஒரு ஆரம்பம் மட்டும்தான். இதன தொடர்ச்சியாக பல்வேறு புதுப்புது உண்மைகள், திடுக்கிடும் காட்சிகள் இன்னமும் பல வரவுள்ளன என நான் நினைக்கின்றேன்.

இது ஒரு சிறு கதை அல்ல, ஒரு தொடர்கதை. இதையே நாங்கள் சொன்னால் இட்டுக்கட்டிய புனைக்கதை.

அதையே அவர் சொல்லும் போது அது உண்மைகளை புட்டு வைக்கும் வாக்குமூலம் என்பதை உலகம் புரிந்துகொள்ளும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி விளையாட்டு விழாவில் நேற்று கலந்துகொண்டு பெற்றோர் மத்தியில் உரையாற்றும் போதே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்கள் பத்து வருட போராட்ட பணிகளின் காரணமாக மகிந்த அரசு வீழ்ச்சியடையும் சூழல் உருவான பின் பலர் எங்களோடு இணைந்து இந்த அரசு உருவாக்கத்துக்கு ஒத்துழைத்தார்கள்.


இன்னமும் சிலர் மகிந்தவுடன் இருந்துவிட்டு நாங்கள் இந்த அரசை உருவாக்கிய பின் எங்களுடன் வந்து இணைந்துக்கொண்டார்கள். இன்னும் சிலர் இன்னமும் மகிந்தவுடன் குடித்தனம் செய்கிறார்கள்.

இன்று இந்த அரசை உருவாக்கி, மகிந்த கூட்டத்தை வீட்டுக்கு அனுப்பியதில் மாத்திரம் நின்றுவிடாமல் யுத்தம் நடத்திய இராணுவ தளபதியின் வாயின் மூலமாகவே உண்மைகளை எங்கள் அரசு வெளியே கொண்டு வருகிறது.

யுத்தத்தை தலைமை தாங்கி நடத்தியதில் தனக்கு உள்ள நியாயமான பெருமையை கோரும் அவர், அந்த யுத்தத்தின் போது தனது கட்டுப்பாட்டையும், அதிகாரத்தையும் மீறி நடந்த மானிட உரிமை மீறல்களையும், அதனால் முழு நாட்டுக்கும், முழு இராணுவத்துக்கும் ஏற்பட்டுள்ள அபகீர்த்தியையும் பற்றி மனந்திறந்து சொல்லுகிறார். உலகம் கேட்க தொடங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரபாகரனுக்கு நடந்தது என்ன? உண்மையை கண்டறிய வேண்டும்

## மகிந்த சமரசிங்க வலியுறுத்து



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதி நேரத்தில் உயிருடன் இருந்தாரா? அல்லது கொல்லப்பட்டாரா? என்ற உண்மைகளில் கூட இப்போது சந்தேகம் எழுந்துள்ளது. பிரபாகரனுக்கு உண்மையில் என்ன நடந்தது என்ற உண்மைகளை கண்டறிய வேண்டும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

போர்க்குற்ற குற்றச் சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியம் எனவும், பிரபாகரன் இறுதி நேரத்தில் உயிருடன் இருந்தார் எனவும் அமைச்சர் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து தெரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தனை காலமாக வெளிவராத உண்மைகள் இன்று உரிய நபரின் மூலமாக வெளிவந்திருப்பது முக்கியமான திருப்புமுனையாக அமைந்துள்ளது.

இறுதி யுத்தத்தை வழி நடத்திய அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா மூலமாக இவ்வாறு கருத்துகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பில் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது ஆரோக்கியமான விடயமாகும். ஆனால் யுத்தத்தை எவ்வாறு முடித்தனர் என்பதில் தான் சர்வதேச தரப்பில் இருந்து கேள்வி எழுந்துள்ளது.

இறுதி தருணங்களில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் இத்தனை காலமாக மகிந்த ராஜபக்ஷ தரப்பு மறுப்பு தெரிவித்து வந்த நிலையில் யுத்ததை முன்னெடுத்துச் சென்ற தளபதியே இறுதி தருணத்தில் குற்றங்கள் இடம்பெற்றது எனவும் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் எனவும் கூறுவதை சாதாரணமாகக் கொள்ளக்கூடாது.

எவ்வாறிருப்பினும் சர்வதேச தரப்பின் பரிந்துரைகள் தொடர்பில் நாம் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

இறுதி யுத்தத்தில் மோசமான வகையில் தவறுகள் நடைபெற்றிருந்தால் உண்மையான குற்றவாளிகள் யார் என இனங்காணப்பட்டு அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இப்போது சரத் பொன்சேகா இவ்வாறு கருத்துகளை முன்வைத்துள்ள நிலையில் இதையும்ஆதாரமாகக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க வேண்டும். அதேபோல் உண்மையில் இறுதி யுத்தத்தில எமது இராணுவம் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டிருந்தால் அவை தொடர்பில் விசாரிக்க வேண்டும்.

இறுதி தருணங்களில் ஒரு சிலரின் தூண்டுதலின் பேரிலோ அல்லது புகழையும் பெயரையும் தக்கவைக்கும் வகையிலோ ஒருசிலர் மோசமான் வகையில் செயற்பட்டிருந்தால், சரத் பொன்சேகா கூறியதைபோல் மோசமான வகையில் இவர்கள் மக்களை கொன்று குவித்திருந்தால் அந்த குற்றங்கள் தொடர்பில் தனிப்பட்ட விசாரணைகளை மேற்கொண்டே தீரவேண்டும்.

ஒருசிலர் செய்ததாக கூறப்படும் தவறுகளுக்காக ஒட்டு மொத்த இராணுவத்தையும் குற்றவாளிகளாக நிறுத்த முடியாது.

இராணுவத்தை தலைமை தாங்கும் எவரேனும் தமது தனிப்பட்ட அதிகாரத்தில் மக்களை அழித்திருந்தால் அதை கண்டறிந்து அவர்களை தண்டிக்க வேண்டியது எமது கடமையாகும்.

மேலும் பிரபாகரன் இறுதி நேரத்தில் உயிருடன் இருந்தாரா? அல்லது கொல்லப்பட்டாரா? என்ற உண்மைகளில் கூட இப்போது சந்தேகம் எழுந்துள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த உண்மைகள் அனைத்தையும் கண்டறிய அரசாங்கம் முன்வரவேண்டும்.



அதேபோல் இப்போது வென்றெடுத்துள்ள சமாதானம், நாட்டின் அமைதியான சூழல் மீண்டும் பாதிக்கப்படக் கூடாது. இப்போதுவெளிவரும்உண்மைகளினால் மீண்டும் குழப்பகரமான சூழல்ஒன்று உருவாகி விடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

## அரசு சுயமரியாதையுடன் செயற்படக்கூடிய பொலிஸ், படையினரை உருவாக்கியுள்ளது

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

"கூட்டு எதிர்க்கட்சியினர் கூறுவது போல் இராணுவத்தினரின் ஆளணியை குறைக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் மேற் கொள்ளவில்லை. மாறாக கடந்த ஆட்சியை போலன்று சுயமரியாதையுடன் செயற்படக்கூடிய பொலிஸ் மற்றும் படையினரை உருவாக்கியுள்ளது" என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கு விருசர சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரத்தினபுரி கெமுனு படைமுகாமில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனை தெரிவித்தார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட காணாமற்போன இராணுவத்தினரின் குடும்பத்தினர்கள் சுமார் 3ஆயிரம் பேருக்கு இந்த அட்டை வழங்கப் பட்டது.

இவர்கள் அனைவரும் இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அருனாசேன ஹெட்டியாராச்சி, இராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் திருமதி அனோமா பொன்சேகா, சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ரொகான் டயஸ் உள்ளிட்ட பலரும் சமுகமளித்திருந்தனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்தன கூறியதாவது,

30 வருட கொடிய யுத்தத்தில் நாம் பல அனுபவங்களை கொண்டுள்ளோம். அதில் பலரும் பாதிக்கப்பட்டனர்.

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தில் பல தமிழர்கள் கொலை செய்யப்பட்டதனையும் கடந்த காலத்தில் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலர் கொல்லப்பட்டதனையும் நாம் மறந்து விடவில்லை.

இந்த கொடிய யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க உறுதி பூண்டுள்ளது.

இந்த வகையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு இந்த சிறப்புரிமை அட்டை வழங்கப்படுகின்றது. அரச மற்றும் தனியார் நிறுவனங்களை சார்ந்த 48 நிறுவனங்களில் இந்த அட்டை மூலம் நிவாரணங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையின் சட்டம் அனைவருக்கும் சமமாகும். தவறு செய்தவர்கள் தண்டனை பெறுவார்கள். அதன்படி தவறு செய்த இராணுவத்தரப்பினர் நீதிமன்ற சட்டத்திற்குட்பட்டுள்ளனர். நீதிமன்ற, பொலிஸ் நடவடிக்கைகளில் நாம் தலையிடுவதில்லை.

சர்வதேச ரீதியில் இலங்கை படையினருக்கு பல்வேறு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படுவதாக கூறப்படுகின்றது. நாம் இராணுவததினரை பாதுகாக்கவே ஐ.தே.க- ஸ்ரீ.ல.சு. கட்சி கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதனை தெரியாதவர்கள் தான் எம்மை குறை கூறுகின்றனர்.

வெளிநாட்டு நீதிபதிகள் எமது சட்டத்தில் தலையிட முடியாது. அவர்கள் மேற்பார்வையாளர்களாக கடமை புரிய அனுமதிக்கலாம். அது கூட இதுவரை இறுதி தீர்மானத்திற்கு உட்படவில்லை.

இராணுவத்தினரை குறைப்பதற்கு நாம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தேசிய பாதுகாப்பிற்கும் எவ்விதமான இடையூறும் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




நீங்கள் வாகனத்தில் ஐஸ்கிறீம் விற்பனை செய்பவரா ?

உங்கள் முயற்சியை ஊக்கப்படுத்த எமது பங்களிப்பு

எம்மிடம் வாடிக்கையாளர்களின் நலனில் அக்கறையுடன் மிகவும் சுத்தமாகவும், நவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு Hyginic முறையில் பொதி செய்யப்பட்ட

- ஐஸ்பழம் - ரூபா 6/8/10/15 விலையிலும்
- ஐஸ் சொக் - ரூபா 17 மற்றும் 22 விலையிலும்
- 80 ml cup - ரூபா 17 மற்றும் 20, 22 விலையிலும்
- தண்டர் கோண்- ரூபா 40 மற்றும் 50 விலையிலும்
- ஐஸ்கிறீம் லீட்டர் - ரூபா 100 விலையிலும் கிடைக்கும்
- 250ml/ 500ml/ 1000ml/ 4000ml ஐஸ்கிறீம் கிடைக்கும்

( தரம் ஒன்றே நிரந்தரம் )

(3841)

தொடர்பு கொள்ளவும்

Sylo food & Beverages pvt Ltd
No. 76, Amman Kovil Street,
Kokuvil East
JAFFNA : 021 221 2003
HotLine : 077 7710 785

**தேவை**

உள்ளூர் இன ஆடுகள், மாட்டுக் கன்றுகள் மற்றும் தோட்ட வேலை செய்வதற்கு ஆள் முல்லைத்தீவு பகுதிக்கு தேவை.

தொடர்பு இல :
0771681697
0768825467

(கி-3947)

**காணி விற்பனைக்கு**

மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் ராசா கடை எதிர் வீதி A9 றோட்டில் இருந்து 500 மீட்டர் தொலைவில் 70% கட்டி முடிக்கப்பட்ட வீடு, குழாய் கிணற்றுடன் கூடிய 3 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

விலை 22 இலட்சம்.

தொடர்பு :
குமார் - 0729229424

(3841)

**தேவை**

கொழும்பு பம்பலப்பிட்டியில் சுகயீனமுற்ற வயோதிபப் பெண்ணொருவரைப் பராமரிப்பதற்கு ஓய்வுபெற்ற தாதி மற்றும் வீட்டு சமையல் பார்க்கக்கூடிய பெண்ணொருவரும் தேவை. தங்கியிருப்பதற்கு இட வசதி உண்டு. தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு-மனோகரன்-011 255 5571
மோகன்- 021 225 1457, 075 053 2761

(3817)

## பொதுநலப் பணிகளை முன்னெடுக்க புவனேஸ்வரி இல்லம் திறந்து வைப்பு




(திருமுறிகண்டி)

சமூகப் பணிகள் மற்றும் பொது நல பணிகளை முன்னெடுப்பதற்காக வவுனியா பூந்தோட்டத்தில் புவனேஸ்வரி அன்பு இல்லம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஜே.பி.கே. சொப்பிங், கே.பி.கே. சென்ரர் ஆகியவற்றின் உரிமையாளரும் வர்த்தகருமான கு.பிரபாகரன் மற்றும் அவரது சகோதரர்களினால் அமுது அன்னையின் நினைவாக புவனேஸ்வரி அன்பு இல்லம் திறந்து வைக்கப்பட்டது.

இவ் இல்லத்தை குடியிருப்பு குளம் பிள்ளையார் கோவில் குருக்கள் கந்தசாமி மற்றும் திருமதி. அன்னபாக்கியம் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதன்போது பார்வைக் குறைபாடுகள் கொண்ட 300 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள், 160 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வவுனியா பொது வைத்தியசாலைக்கு 100 படுக்கை விரிப்புகள் என்பன வழங்கப்பட்டன.

இந் நிகழ்வுக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர். திருமதி. அன்ரன். சோமராஜா வவுனியா வர்த்தக சங்கத் தலைவர்கள், செலான் வங்கி, சம்பத் வங்கி அதிகாரிகள் சமூக அமைப்புகளின் தலைவர்கள் என பலர கலந்து கொண்டனர். (2-311)

ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய்

## பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்கள் அங்குரார்ப்பணம்

ஒட்டுசுட்டான். மாந்தை கிழக்கு. துணுக்காய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான். மாந்தை கிழக்கு. துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கான பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களை ஒன்றிணைத்து அமைக்கப்படுகின்ற இளைஞர் கழக பிரதேச சம்மேளன அங்குரார்ப்பண நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

அந்தவகையில் துணுக்காய் இளைஞர்கழக பிரதேச சம்மேளன அங்குரார்ப்பண நிகழ்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ.சுகநதன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது துணுக்காய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவராக கி.தரணதரன், செயலாளராக ஜெ.சுகந்தன், பொருளாளராக எஸ். திவாகரன், அமைப்பாளராக எஸ்.கிரீசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக உறுபபினர்களும் தெரிவாகினர்.

இவ்வாறாக மாந்தை கிழக்கு இளைஞர் கழக பிரதேச சம்மேளன அங்குரார்ப்பண நிகழ்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.ஜெயாளன் தலைமையில் இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவராக க.கோகுலதாஸ், செயலாளராக அ.ஜெயாளன், பொருளாளராக ம.மகிந்தராசா, அமைப்பாளராக க.சுஜந ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.


அத்துடன் ஒட்டுசுட்டான் இளைஞர் கழக பிரதேச சம்மேளன அங்குரார்ப்பண நிகழ்வு தேசிய இளைஞர் சேவைகள் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி செ.சுஜிதரன் தலைமையில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவராக த.அனோஜன், செயலாளராக செ.சுஜிதரன். பொருளாளராக.ஜனகன், அமைப்பாளராக ச.அனஸ்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (2-281)

## துள்ளுக்குடியிருப்பு ஐஸ்,கோழித்தீன் தொழிற்சாலைகளை அகற்றுமாறு மகஜர்

### முதலமைச்சரிடம் கையளிப்பு



(பனிக்கன்குளம்)

மன்னார் - துள்ளுக்குடியிருப்பு கிராமத்திற்கு அருகில் உள்ள ஐஸ் மற்றும் கோழித்தீன் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவற்றை அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த தொழிற்சாலையினால் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொள்வதால் அதனை அகற்றுமாறு கோரி கீளியன் குடியிருப்பு பங்குத் தந்தை எஸ்.டெரன்ஸ் அடிகளார் தலைமையில் பங்கு மேய்ப்புச்சபை பிரதிநிதிகள் நேற்று முன்தினம் காலை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ்சிறாய்வா, வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். குறித்த பிரச்சினை தொடர்பாக உயர் அதிகாரிகள், மன்னார் மாவட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டும் இது வரை தீர்வு கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (2-3-281)

ஒருகோடியே 77 இலட்சம் ரூபா செலவில்

## இரு பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வியமைச்சினால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட இரண்டு பாடசாலைகளுக்கு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்கு ஒரு கோடியே 77 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் 110X25X2 வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்கு ஒரு கோடியே 23 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் கிளி/வேரவில் மகா வித்தியாலயத்தில் 120X25 வகுப்பறைக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு 53 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் ஒரு கோடியே 72 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா இரு பாடசாலைகளின் வேலைகளுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டடங்கள் அமைப்பதற்கான வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 15.07.2016 இற்குள் நிறைவுபெற்று மாணவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## கட்டடமின்றி இயங்கும் புதுமுறிப்பு நூலகம்

புது முறிப்பு கே.என்.37 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள "துளிர்நிலா" நூலகத்திற்கு ஒதுக்கப் பட்ட காணி இருந்தும் தளபாட வசதி மற்றும் பெரும் தொகையிலான புத்தகங்கள் இருந்தும் கட்டடம் அமைக்கப் படாமையால் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள், மக்கள் பலன் அடைய முடியாது கவலை தெரிவித்துள்ளனர்.

இந் நூலகத்திற்கு Save the children நிறுவனம் நூற்றுக்கணக்கான புத்தகங்களையும் தளபாடங்களையும் வழங்கியுள்ள போதிலும் ஆறுமாத காலத்துக்கு மேலாக புது முறிப்புப் பொதுநோக்கு மண்டபத்தினுள் இந் நூலகம் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

அத்துடன் சிறிய அறை கொண்ட பொதுநோக்கு மண்டபமானது வேறு தேவைகளுக்கும் முன்னெடுக்கப்படுவதால் கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் கிளி.செல்வா நகர் அ.த.க.பாடசாலை மாணவர்கள் நூலகப் பயன் பெற முடியாமல் இடர் படுவதாகத் தெரிவிக்கின்றனர். (2-309)




## 13 பாடசாலைகளில் முக்கிய பாடங்களை கற்பிப்பதற்கு 20 ஆசிரியர்கள் பற்றாக்குறை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 13 பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்களில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய மூன்று முக்கிய பாடங்களையும் கற்பிப்பதற்கு 20 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/பாண்டியன் குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/யோகபுரம் மகா வித்தியாலயம், மு/விநாயகர்புரம் அ.த.க.பாடசாலை, மு/தென்னியன்குளம் அ.த.க.பாடசாலை, மு/ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை, மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை, மு/முத்தையன்கட்டுவலதுகரை மகா வித்தியாலயம், மு/கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை, மு/கோட்டைகட்டிய குளம் அ.த.க.பாடசாலை ஆகிய 13 பாடசாலைகளிலும் கணிதம் ஆறு, விஞ்ஞான பாடம் ஆறு, ஆங்கிலம் எட்டு என மொத்தம் 20 பாடங்களுக்கு 20 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதாகவும் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## பொதுமக்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை

### சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு குற்றச்சாட்டு

(கற்குழி)

மக்கள் மத்தியில் காணப்படும் சமூகப்பிரச்சினை தொடர்பாக இதுவரை காலமும் சமூகமயப்பட்ட மக்கள் உரிமைப்போராட்டங்களை நடத்திய சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வவுனியாவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வவுனியா கமநல சேவைகள் நிலையத்தில் நடத்தினர்.

இந் நிகழ்வில் அதன் இணைத் தலைவர்களான பூ.சந்திரபத்மன், எஸ்.கெகதீஸ்வரன், செயலாளர் எஸ்.பொன் பொஸ்கோ, மேழிக்குமரன் அருந்தவராஜா ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வெவ்வேறுபட்ட விதமான பிரச்சினைகள் காணப்படுகிறது. இவை தொடர்பாக வவுனியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், 16 பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் அடங்கிய மகஜர் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்டது.

இருப்பினும் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறிரெலோ செயலாளர் க. உதயராசா வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் பதில் அனுப்பி வைத்துள்ளதாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் தெரிவித்தனர்.

வேறு எவரும் இது வரை எந்தவிதமான பதிலையும் தரவில்லையென அவர்கள் தெரிவித்தனர்.

எனவே 10 வருடங்களாக திருத்தப்படாத வவுனியா கற்குளம் பாதை தொடர்பாக ஏன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

அதிகரித்துள்ள சிறுவர், பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரம் தொடர்பாக தகுந்த பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்க தவறியது.

ஆலயங்களில் அருகில் மதுபான கடை இயங்க அனுமதி வழங்கியது, மசாஜ் நிலையங்கள் இயங்க அனுமதி அளித்தமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருந்தும் அவற்றுக்கு எதிராக செயற்படாமை ஆகியவற்றிற்கு தீர்வு காணப்பட வில்லை.

எனவே இனி வரும் காலங்களில் இவ் விடயம் தொடர்பாக மக்களை விழிப்புணர்வு செய்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட அறைகூவல் விடுக்கிறோம் என தெரிவித்தனர். (2-303)

## சிறுநீரக நோய்த்தாக்கத்தில் இருந்து பாதுகாக்க தூய நீர் வழங்கும் திட்டம்



முல்லைத்தீவில் ஆனந்தபுரம், இரனைப்பாலை, சிவநகா ஆகிய இடங்களில் வாழும் 3 ஆயிரம் பேர் குடி நீர்ப்பிரச்சினைகளை எதிர்நோக்கிய நிலையில் அவ்வாறான நிலையை நீக்கும் வகையில் தூயநீர்வழங்கும் திட்டத்தை தனியார் நிறுவனம் ஒன்று ஆரம்பித்து வைத்துள்ளது.

சிறுநீரக நோய்த்தாக்கத்தில் இருந்தும் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையிலும் இந்த குடிநீர் விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனம் தெரிவிதது்ள்ளது.

இலங்கையில் 4 இலட்சம பேர் சிறுநீரக நோய்த் தாக்கத்தல் உள்ளார்கள். இந் நோய்த் தாக்கத்தினால் நாள் ஒன்றிற்கு 13 பேர் வரை மரணமடைகினறார்கள் இதற்கான மாற்று நடவடிக்கையை காணாவிட்டால் 28 இலட்சம் மக்கள்வரை சிறுநீரக நோய்த்தாக்கத்திற்குட்படுவார்கள் என்பதன் காரணத்தினால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

போரினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் ஆகிய கிராமங்களில் யுத்த வடுக்களில் இருந்து இன்னமும மீள முடியாமல் அடிப் படைவசதி கள் அற்ற நிலையல் மிகவும் வறுமைக் கோட்டின கீழ்வாழும் மக்கள் காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

ஏழை அழுத கண்ணீர்
கூரிய வாளை ஒக்கும்.–ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மக்களின் நீள் துயரத்துக்கு முதலில் முடிவு கட்டுங்கள்

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தை தேய்க்கும் படை என்றார் வள்ளுவர்.

படை என்றவுடன் ஆயுதம் ஏந்தியவர்களே நம் நினைவுக்கு வருவதுண்டு.

ஆனால் வள்ளுவர் செல்வத்தை தேய்க்கும் ஒரு பெரும் படை எது? என்பதை இந்த உலகுக்கு காட்டி நிற்கிறார்.

அந்தப் பெரும் படைதான் எளியவர் அழுகின்ற கண்ணீர் என்பது வள்ளுவரின் முடிவு.

ஆற்ற முடியாமல் அழுகின்ற கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் என்றால், யாருடைய செல்வம் என்ற கேள்வி எழும்.

இங்குதான் அந்த அழுகைக்கு யார் யார் காரணமோ யார் யார் பின்னணியோ அவர்கள் அனைவரதும் செல்வம் தேயும் என்று பொருள்படும்.

இலங்கை அரசு தமிழர்களை வதைத்து அவர்களை துன்பப்படுத்தி ஆட்சி செய்ய நினைக்கிறது. ஆனால் அந்த நினைப்பு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை.

ஏனெனில் வதைபட்டவர்கள் விடுகின்ற கண்ணீரானது இருக்கக் கூடிய செல்வங்களை அழித்து விடும்.

அசோகவனத்தில் இருந்த சீதை அழுத கண்ணீர் இராவணனின் அனைத்துச் செல்வங்களையும் அழித்து, ஈற்றில் அவனையும் அழித்தது.

எனவே நல்லாட்சி என்பது மக்களைக் காப்பாற்றுவது; மக்கள் விடுகின்ற கண்ணீரை துடைப்பது; மக்கள் படுகின்ற கஷ்டங்களை நீக்குவது இதைச் செய்யாத அரசை நல்லாட்சி என்று கூறுவது பெரும் பாவம்.

ஆக, நல்லாட்சியின் அழகு மக்களின் துன்பத்தைத் தீர்ப்பது என்ற வகையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தாம் வாழ்ந்த நிலத்தில் மீளவும் குடியிருப்பதற்காக அவர்கள் படுகின்றபாடு கொஞ்சமல்ல.

தமிழர்கள் என்பதால் அவர்களின் வாழ்விடங்களை கபளீகரம் செய்து அங்கு படையினரைக் குடியிருத்தி எந்த நேரமும் தமிழர்களை தாக்கத் தயாராக இருங்கள் என்பதுபோல நடந்து கொள்வது அரசுக்கு அழகன்று.

ஆகவே தமிழ் மக்களின் வாழ்விடங்களை உடனடியாக கையளிப்பது அரசின் கடமை. இதைச் செய்வதில் ஜனாதிபதி மைத்திரியின் அரசு கவனம் செலுத்துவது பாராட்டுக்குரியதாயினும் அதன் வேகம் போதுமானதன்று.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களின் வாழ்விடங்களில் குடியிருப்பதன் மூலம் தங்களின் சீவனோபாயத்துக்கான தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

சொந்தக் காணியைக் கைவிட்டு இரவல் காணியில் தற்காலிக கொட்டிலில் குடியிருக்கும் ஒரு குடும்பத்தின் மனநிலை எப்படியிருக்கும் என்பதை அறிந்து கொள்வது அரசின் கடமையாகும்.

இதைவிடுத்து நாங்கள் ஆள்பவர்கள். நீங்கள் தமிழர்கள். ஆகவே, நாங்கள் அனுமதித்தால்தான் நீங்கள் உங்கள் சொந்த மண்ணில் குடியிருக்க முடி யும் என்றால் இது எந்த வகையில் நீதியாகும் என்பதை இனபேதம் கடந்து உணர்ந்து கொள்வது காலத்தின் உடனடித் தேவையாகும்.

நேற்றைய தினம் வலி வடக்கில் 700 ஏக்கர் நிலத்தை உத்தியோகபூர்வமாக விடுவிப்பு செய்து மக்களிடம் கையளித்த ஜனாதிபதி மைத்திரிக்கு தமிழ் மக்கள் நன்றி கூறிக்கொள்ளும் அதேநேரம்,

தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய அத்தனை ஆக்கிரமிப்பு நிலங்களையும் விடுவிப்பு செய்து அவற்றை மக்களிடம் கையளிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் பல்வேறு துன்பங்களில் ஒன்றுக்கு முடிவு கட்டியதாக இருக்கும்.

# யாழில் பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கிராம மட்டங்களில் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பெண்கள் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வதற்கு கிராம மட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு விழிப் புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வீணாகான குரு பீடத்தின் ஏற்பாட்டில் சிறுவர், பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக சமூக மட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன் தினம் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடல் தொடர்பில் வீணாகான குரு பீட தலைவர் வாசுதேவ குருக்கள் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில்எமது சமூகத்தின் மத்தியில் பாரிய வன் முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோக நடவடிக்கைகள் தொடாச்சியாக அதிகரித்த வண்ணம் உள்ளன.

பல தரப்புக்களாலும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொணடு வருகின்றபோதும் அவை அனைத்து மட்டத்தினரையும் சென்றடைவதில்லை என்றே கூற முடியும்.

எனவே எமது எதிர்கால சந்ததியினரையும் எமது தமிழ் இனத்தின் பெருமையையும் பாதுகாக்க வேண்டும் எனில் நாம் அனைவரும் முனைப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்.

முதற்கட்டமாக குடும்ப உறவுகளை மேம்படுத்துவதற்காக கிராம மட்டங்களில் ஒவ்வொரு பிரதேச செயல கம் மற்றும் தனியார் துறையினருடன் இணைந்து கிராம மட்டங்களில் குழுக்களை அமைத்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

கல்வி அமைச்சுடன் இணைந்து அறநெறி பாடசாலையில் மாணவர்களை முற்று முழுதாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற செயற்பாடுகளை முதலில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இந்த ஆரம்பகட்ட செயற்பாடுகளுக்கு குறித்த துறைசார்ந்த அரச அதிகாரிகள் பெண்கள் அமைப்புக்கள், மதத் தலைவர்கள் உட்பட பல தரப்பினரும் தமது ஆதரவினை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து எமது சமூகத்தினை பாதுகாப்பதற்கு முனைப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், சிறுவர், பெண்கள் பாதுகாப்பு சபை அதிகாரிகள், பொலிஸார் சிவில் அமைப்புக்களின பிரதிநிதிகள் பாடசாலை அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீரவழங்கல் வடிகால் சபை, மண்கும் பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்பண்டை முகாம் ஆகிய இடங்களிலும்மன்னார் பிரதேசத்தில மணல்குளம், சூரிய கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

# ஈ.எஸ்.பி.நாகரத்தினத்தின் மணிவிழா இன்று

"கல்விக்காருண்யன்" ஈ.எஸ்.பி. நாகரத்தினத்தின் மணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் சேர்.பொன. இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதன் போது வரவேற்புரையை யாழ். மத்திய கல்லூரி உப அதிபர்ப.திரு ஞானசம்பந்தன் நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரைகளை நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.சின்மய மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் அருட்திரு சு.ஜெபநேசன் அடிகளாா, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தலைமையுரையினை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராசா நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து வாழ்த்துரைகளை வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரச ரட்ணம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேநதர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, வடக்கு மாகாண முன்னாள் பிரதிக் கல்வி செயலாளர் ப.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வடக்கு மாகாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, சா்வதேச லயன்ஸ கழக மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா, யாழ்.கைத்தொழில் மன்றத் தலைவர் வை.கு.விக்னேஷ், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன், ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ். சுந்தரேஸ்வரன், மகாராணி பட்டுச்சோலை உரிமையாளர் க.சோமசேகரம் ஆகியோர் வழ ங்கவுள்ளனர்.

தொடர்ந்து மணிவிழா சிறப்பு மலர் வெளியீடான நாகரத்தினமாலை வெளியிடப்படும். நூல் வெளியீட்டுரையை வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று III) பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித் தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் /உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல் விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதியில் 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.விண்ணப்பங்கள் 2016.04.11 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு இல.40, புத்தகமுவ வீதி,இராஜகிரிய எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.மேலதிகதகவல்களுக்கு 11.03. 2016ல் வெளிவந்த வர்த்தமானியை பார்வையிடவும். (இ

# இந்த நானிலத்தில் நாம் நண்பர்களாக வாழும் வழிகளை அதிகமாக்குவோம்

இன்று தவக்காலத்திற்குள் வருகின்ற ஐந்தாவது ஞாயிறாகும். பைபிளின் படி மறைநூல் அறிஞரும் பரிசேயரும் ஒரு பெண்ணை இயேசுவிடம் கூட்டி வநது, 'போதகரே, இப்பெண் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளாள். இப்படிப் பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?' என்று கேட்டனர். இவர்கள் ஏன் இயேசுவிடம் வரவேண்டும்? இவர்கள் தங்களுக்குச் சட்டங்கள் பற்றிய பூரண அறிவு உள்ளதெனக் காட்டிக்கொள்வதற்குபைபிளையே உதாரணமாக முன்வைக்கின்றவர்கள். அச்சட்டப்படி அந்தப் பெண்ணைத் தண் டிக்

## பரமபிதா காட்டிய பாதை

கும் அதிகாரமும் அவர்களு க்கு உண்டு. பின்பு எதற்கு இந்த வெளிவேடம். இயேசுவை மடக்குவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம என நினைத்தார்கள். அவர்களுக்கு அந்த பெண்ணோ, சடடங்களோகூட முக்கியமில்லை. சவாலில் இயேசுவை மடக்கி வெல்லவேண்டும் என்பது தான் அவர்கள் திட்டம்.

மோசே தமக்குக் கொடுத்ததாகக் கூறும் சட்டம் என்ன? 'அடுத்தவன் மனைவியோடு உறவு கொள்பவனும், அந்தப் பெண்ணும் கொலை செய்யப் பட வேண்டும்' 'ஒரு மனிதன் மற்றொருவனுடைய மனைவியோடு உறவு வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அப் பெண்ணும் அப்பெண்ணோடு உறவு வைத்தவனும், இருவரும் சாவர்' என்பதுதான். எனவே பைபிளில் இருவேறு இடங்களில் மோசேயின் சட்டப்படி விபச்சாரத்தில் ஈடுபடும் இருவரும்கொலை செய்யப்பட வேணடும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்க அந்த ஆணை அவர்கள் இழுத்து வந்ததாகக் கூறப்படவில்லை. ஆணுககொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற அளவில் மறைநூல் அறிஞரும், பரிசேயரும் மோசேயின் சட்டத்தை மாற்றி அமைத்து விட்டனர். அதிகாலையில், இப்படி ஒரு பெண்ணையும், மோசே சட்டத்தையும் பகடைக் காய்களாக்கிய பரிசேயரையும், மறைநூல் அறிஞர்களையும் வேதனையோடு நினைத்து, பரிதாபப்பட்டு, அவர்களோடு பேசாமல் இயேசு மௌனமாகிறார். உண்மையில், இயேசுவைக் குற்றம் சாட்டி அவரைத் தீர்ப்பிட நினைத்த பரிசேயர்கள் இயேசுவிடம் அப்பெண் மீதான தீர்ப்பை வற்புறுத்தவே, 'உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்' என்கிறார் இயேசு. இயேசுவுக்கு சவால் விடுவதாக நினைத்து வந்த அவர்களுக்கு இது ஒருபெரும்மரணஅடி அனைவரும் விலகிப்போக வேண்டியதாயிற்று. ஆண வர்க்கத்திற்கு, ஏன சிறப்பாக பெண்களை வியாபாரப் பொருளாக, போகப் பொருளாக, அடிமைகளாக, பகடைக் காய்களாக நடத்தும் இன்றைய ஆண் வர்க்கத்திற்கு இயேசு கொடுக்கும் ஒரு சாட்டையடி இது எனலாம்.

கல்லால்எறிந்துகொல்லவேண்டும் என்பதில் காட்டிய வேகமும் விவேகமும் வீரமும், இப்படிப் பட்டவர்களை எவ்வாறு வாழ வைப்பது என்பதில் காட்ட வேணடும் என்று இயேசு தெளிவாக காட்டுகின்றார். கொல்லும் முயற்சியில் சட்டத்தைச் சாதகமாத பயன்படுத்தும் சாமர்த்தியம், பெண்ணை அடிமைப்படுத்தும் கொடூரம், அரங்கேறுவதைப் பார்ககிறோம். சட்டத்தை வளைத்து வசப்படுத்துகின்றனர் கொலை வெறி கொண்டோர். அதே சட்டப்படி அச்செயலில் ஈடுபட்ட ஆணையும் கொண்டு வர வேண்டுமே! வரவில்லையே, ஏன்? பெரிய இடத்துப் பாவங்களையும், பலவீனங்களையும் மூடிமறைத்து திசைதிருப்ப, பாவம் இதுபோன்ற அப்பாவிகள் பலியிடப்படுகிறார்கள். 'உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்' என்னும் இயேசுவின் கணீரொலி அத்தனை முகமூடிகளையும் பிடுங்கி யெறிநதது. அப்பெண்ணின் குனிந்த தலையை நிமிர வைத்தது. 'அம்மா, அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?' 'அம்மா' எனறு அந்த இயேசு




வின் அழைப்பு, தன் பெண்மையின் பரிமாணம், தாய்மையின் முழுமை என்னும் புது வாழ்வை அவளில் புகுத்தியதை அவள் உணர்ந்தாள். ஆணுக்குப் பெண் சரி நிகர் சமம் என்று ஆணித்தரமாய் சொல்கிறார் இயேசு. இந்த


**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

உண்மையின் ஆழத்தை நாம் ஒவ்வொருவரும் மனதார ஏற்றுக் கொள்ள முயன்றால், ஆண்-பெண் உறவுகள் எவ்வளவோ நலமுடன், என்றும் நிலைக்கும் நட்புடனும் சக்தியுடன் வளரும். வேண்டாத பாலியல் வன்முறைகள் எம்மை விட்டு விலகிப்போகும்.

எனவே ஆணும் பெண்ணும் நண்பர்களாக இந்த நானிலத்தில் நாம் வாழும் வழிகளை அதிகமாக்குவோம்.

# சமனிலையில் முடிவுற்றது வடக்கின் பெரும் போர்












வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி - யாழ்.மத்திய கல்லூரி அணிகளுக்கு இடையிலான 110 ஆவது வருடாந்த கிரிக்கெட் போட்டி சமனிலையில் முடிவுற்றது.

மேற்படிப் போட்டித் தொடர் கடந்த மூன்று நாட்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மத்திய கல்லூரி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.




அதன்படி தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 75.4 ஓவர்கள் வரை துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஜெரோசன் 51, கோமேதாகன் 39 ஓட்டங்களை அதிகபட்சமாக ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் செண்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் யதுரசன் 39 ஓட்டங்களுக்கு 4, நிலோஜன் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 53.3 ஓவர்கள்வரை துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்து 2 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி அணியை விட முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகித்தது.

துடுப்பாட்டத்தில் கிசாந்துஜன் 31, யதுரசன் 28 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் தேஸ்பியன் ராஜ் 71 ஓட்டங்களுக்கு 4, தசோபன் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

2 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி கிருபாகரனின் அற்புதமான சதத்தின் உதவியுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்களை எடுத்தது.

அபாரமாக துடுப்பெடுத்தாடிய கிருபாகரன் 103 ஓட்டங்களை எடுத்தார்.

2ஆவது இன்னிங்ஸ் பந்துவீச்சிலும் சிறப்பாக செயற்பட்ட சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஜதுரசன் 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


263 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2ஆவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி நேற்றைய 3ஆவதும் இறுதியுமான நாளாட்டம் நிறைவுக்கு வந்தபோது 5 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை எடுத்திருந்தது.

துடுப்பாட்டத்தில் பிளேமிங் 37 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் மதுரசன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும்" சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் யாழ்.மத்திய கல்லூரியின் கிருபாகரனும் சிறந்த பந்துவீச்சாளராகவும் சகலதுறை ஆட்டக்காரராகவும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் யதுரசனும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்.மத்திய கல்லூரியின் பிரியதர்சனும் சிறந்த விக்கெட் காப்பாளராக சென். ஜோன்ஸ் கல்லூரியின் தேவப்பிரசாந்தும் தெரிவாகினர்.

இதேவேளை இரு கல்லூரி அணிகளுக்கும் இடையிலான ஒரு நாள் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)





## மூன்று மாதங்களுக்குள்...

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள நடேஸ்வரா கல்லூரியை கையளித்து மக்கள் முன்பாக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நான் இங்கு வந்தமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று முப்பது வருடகாலமாக கஷ்ரப்பட்ட எமது மக்களுக்கு வழங்கப்பட உள்ள 65 ஆயிரம் வீட்டு திட்டத்தை பார்வையிட, மற்றையது காணிகளை இழந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக வருகை தந்துள்ளேன்.

நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களையும் ஒரே மாதிரி அபிவிருத்தி செய்யவே நாங்கள் திட்டமிட்டுள்ளோம், எனினும் வடக்கு மாகாணம் இருபதது ஆறு வருட கால போரினால் பாதிக்கப்பட்ட மாகா ணம் என்பதனால் விசேட கவனம் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கடந்த டிசம்பர் மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த போது, மக்களின் காணிகள் அனைத்தும் வழங்கப்படும் என நான் உறுதியளித்திருந்தேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற மூன்று மாதங்கள் உள்ளன. அதற்கிடையில் மக்களது காணிகளை கையளிப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் நான் கோருகின்றேன் என்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. (செ-4)

## நடேஸ்வரா...

கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றைய தினம் சென்று பார்வையிட்டார்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள் நடேஸ்வரா கல்லூரி விடுவிக்கப்பட்டதனை தொடர்ந்து,

பாதுகாப்பு வலயத்துக்குரிய இராணுவ நுழைவாயிலை பின்னகர்த்த வேணடிய தேவை இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பாடசாலை எல்லை யோடு புதிதாக முட்கம்பி வேலிகளை அமைக்க ஆரம்பித்துள்ளனர்.

இராணுவத்தின் சிற்றுண்டிசாலைகள், பேக்கரி உட்பட அனைத்தும் இயங்கு நிலையிலேயே காணப்பட்டன. மேலும் விடுவிக்கப்பட்ட பாடசாலையை சூழ இராணுவ காவலரண்களும் உள்ளன.

இவ்வாறானநிலையில் பாடசாலை ஆரம்பிக்கப்படுமாயின், மாணவர்களால் இயல்பான கல்வியை தொடர முடியாது. ஆகையால் அடுத்த கட்டமாக அங்குள்ள இராணுவ காவலரண்கள் அகற்றப்படல் வேண்டும் என்பதுடன் பாடசாலைக்கு முன்பாக உள்ள இராணுவத்தின் விற்பனை நிலையங்களும் அகற்றப்படல் வேண்டும் என்ற கோரிக்கை அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசிக்கும் பகுதியை அண்டி அமைந்துள்ள காங்கேசன்துறை சீமெந்து ஆலையினையும் மீள இயக்க வேண்டும் என மக்களால் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-4)


மணிவிழா வாழ்த்துக்கள்



(3873)

"பொன்மனச் செம்மல்" "கல்விக் காருண்யன்"

உயர்திரு.E.S.P. நாகரத்தினம்

அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துக்கள்

மணிவிழாக் காணும் இந் நன்நாளில் அவர் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றோம்

வாழ்த்துவோர்:

லயன் சீமாட்டி இராமலிங்கம் ராகினி

(தலைவர் யாழ்.மாவட்ட மகளிர் விவகாரக் குழு)

J/108 நல்லூர் முருகன் மகளிர் விவகாரக் குழு உறுப்பினர்கள்


## மரண அறிவித்தல்

### திருமதி
### அழகதுரை உபாத்தியாய ஜனாகியம்மாள்

கெருடாவில் தொண்டைமானாறு வீரமாகாளி அம்மன் பரம்பரையைச் சேர்ந்த திருமதி அழகதுரை உபாத்தியாய ஜனாகியம்மாள் நேற்று (12.03.2016) சனிக்கிழமை சிவபதம் சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் கோயில் தோட்டம் அல்வாய் இல்லத்தில் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:பிள்ளைகள்

(சி-3998)


மணிவிழா வாழ்த்து



இன்று மணிவிழாக் காணும் எமது கழக ஆர்வலர்

திரு.ஈ.எஸ்.பி. நாகரத்தினம்

அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

யாழ்.விளையாட்டு வீரர்களையும் விளையாட்டுத் துறையையும் என்றும் ஊக்குவித்து, ஓங்குறச் செய்யும் தங்கள் பணி தொடர்ந்து சிறக்கட்டும்

-யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் வி.க.

(3252)



மணிவிழா வாழ்த்து



"பொன்மனச் செம்மல்"

"மனிதநேய ஈகையாளன்"

"கல்விக் காருண்யன்"

லயன்

E.S.P.நாகரத்தினம்

(பிராந்திய தலைவர் சர்வதேச லயன்ஸ் கழகம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை கோட்டம், வலயக்கல்வி அலுவலகம் போன்றவற்றில் நடைபெறும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு பேருதவி புரிந்து வரும் மணிவிழா நாயகனை பல்வகை செல்வங்களும் பெற்று அவர் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துகின்றோம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன்

ஆசிரிய ஆலோசகர்கள் ந.ஸ்ரீமுருகதாஸ்காந்தன்

வ.செந்தூரன் உடற்கல்வி ஆசிரியர்கள்

(3251)



மணிவிழா காணும் மனிதநேயனை மகிழ்வுடன் வாழ்த்துகிறாள் மங்கையர்க்கரசி



(சி-3996)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்



மணிவிழா வாழ்த்து



"சமூக மாமணி"

"சைவப் புரவலர்"

"ஈகையார் திலகம்"

உயர்திரு.

E.S.P.நாகரத்தினம்

அவர்கள்

கருணை உள்ளம் என்றும் நிலைத்திடவும் மணிவழா சிறக்கவும் இன்னும் பற்பல கௌரவ பட்டங்களைப் பெறவும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(3997)

வாழ்த்துவோர்:

அருள்மிகு ஐயனார் தேவஸ்தானம் வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

மணி ஐயப்பா நகைப்பூங்கா, கந்தசுவாமி கோயில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.



மணிவிழா வாழ்த்து



மணிவிழா காணும்

E.S.P.நாகரத்தினம்

அவர்கள் அவர் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

(3883)

**நடமாடும் மிருக வைத்திய சேவை**

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு

Dr. K. கிருபாகரன்

.0779738802 / 021224 2102 (3872)

446, நாவலர் றோட், நல்லூர். **4 - 6 PM**


# 12 கோடி ரூபா...

அதிபர் பெரேரா, காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் M.A.ரஞ்சித் மாசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் A.M.ஜஃப ரின் வழிநடத்தலில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பதில் கடமை புரியும் பொலிஸ் பரிசோத கர் ஜே.ஆர்.ஏ.ரீ.ரீ. ரணதுங்க தலைமை யிலான பொலிஸார் தொண்டைமானாறு பாலத்தை அண்டிய பகுதியை திடீர் சுற்றி வளைப்பு நடத்தி னர்.

இதன்போது இந் தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தூய ஹெரோயின் அடங்கிய இரண்டு பார்ச ல்கள் பாலத்துக்கு அருகாமையில் மீட்கப்பட் டன. இச்சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இக்ஹெரோயின் கார் ஒன்றின் மூலமாக தென்பகுதிக்கு கடத்துவதற்கு தயாராக இருந் ததாக பொலிஸ் புலன் விசாரணையில் அறிய முடிகிறது.

தூய ஹெரோயினுக்கு கலப்படம் செய்தே ஒருகிலோ ஒரு கோடி ரூபாயிற்கு விற்பனை செய்யப்படுகிறது. கலப்படம் செய்யாத தூய ஹெரோயின் இரண்டு கிலோவினதும் பெறு மதி 12 கோடி ரூபாய்களாகும்.

இதுவரை கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களில் அதிக பெறுமதியுடையது இது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)


**கணக்காளர் தேவை**

யாழ் நகரில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு தகைமையுள்ள பெண் கணக்காளர் தேவை ( Qualified Accountant) (முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது) தகைமையுடையோர் சுயவிபரக்கோவையுடன் புதன்கிழமை 16.03.2016 காலை 9.00 க்கு 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

பணிப்பாளர்

(3856)

**அம்பிளிபயர்,ஸ்பீக்கர்ஸ் விற்பனைக்கு**



சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜப்பான் அமெரிக்கன் ( ஒறியினல் பைய்னியர், கென்வூட் ) ஸ்பீக்கர்ஸ் அம்பிளிபயர்கள் அத்துடன் வாகன பூபர்ஸ், DVD, TV, ரிவேஸ் கமரா என்பன எம்மிடம் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: 0772374001 (3793)

ARISTO 238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**சொன்னபடி செய்தது சிகரம்!**

யாழில் 6 மாத கற்கைநெறியை பூர்த்திசெய்த 5 பேர் வெளிநாட்டு விசா அனுமதி பெற்றனர்

பகுதிநேர/ முழுநேர வேலைவாய்ப்பு & வருமானத்துடன் கூடிய

**Dip in Hotel Management**

Leading to

**University of Sunderland - UK**

NO IELTS, Bank Balance, Interview



2ம் அணியில் இணைந்த ஒரு தொகுதி மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி கடிதம் பெற்றனர்

நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள் 077 36 16 798

புதிய பிரிவு ஆரம்பம் நாளை காலை 9 மணி

வெளிநாடு செல்ல விரும்பாதவர்களுக்கு உள்நாட்டு வேலைவாய்ப்பு ஏற்பாடு

SIKARAM HOTEL SCHOOL

மேலதிக விபரங்களுக்கு: www.sikaram.lk

275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)

**யாழ் மகான் விடுதி**

AC, NON AC றூம்கள் அல்லது 7 றூம்களைக் கொண்ட வீடாகவும், நாள் கிழமை மாதம் வாடகைக்கு கொடுக்கப்படும்.

இடம் - இல.63, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

T.P :- 077 026 0180 (3838)

**பணியாளர் தேவை**

புத்தகக்கடை ஒன்றுக்கு கணனி, Account தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு: 021 221 5486



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

இன்றையதினம் (13.03.2016) மணிவிழாக் காணும் நாயகன்

"கல்விக் காருண்யன்", "மனிதநேய ஈகையாளன்", "செம்மொழிச் செம்மல்" "ஈகையர்த் திலகம்", Lion திருவாளர்

**E.S.P. நாகரத்தினம்**

அவர்கள்



இன்னும் பல விழாக்கள்
கண்டு மேன்மேலும்
இவ் வையகத்தில்
பல பணிகள் செய்திட
எல்லாம் வல்ல மூளாய்
வதிரன் புலோ சித்தி
விநாயகப் பெருமானையும்
மற்றும்
முத்துக்குமாரசுவாமிப்
பெருமானையும் இறைஞ்சி
மனதார வாழ்த்துகின்றோம்.

"வாழ்க, வளர்க, பணி செய்து ஓங்குக" (3866)

மனதார வாழ்த்தும்: மூளாய் இந்து இளைஞர் மன்றம் மற்றும் மாதிரி முன்பள்ளிச் சமூகம்



**மணிவிழா வாழ்த்து**

"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக் காருண்யன்"

உயர்திரு.

**E.S.P. நாகரத்தினம்**

அவர்கள்



கருணை உள்ளம்
என்றும்
நிலைத்திட
கற்பகதரு போல்
சேவைகள் தொடர்ந்திட
இன்னும் பலகாலம்
சிறப்புடன் வாழ்ந்திட
வாழ்த்துகின்றோம்
இறும்பூதெய்துகிறோம்...

நல்லூர் கந்தனின் துணையுடன்
மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

(3876)

வாழ்த்துவோர் :

க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் (CSK மருந்துக்கடை)
இல.76, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
கை. இராசரெட்ணம் 021 222 2912

க.செ.கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
CSK தெய்வேந்திரம் அன் சன்ஸ் (CSK மருந்துக்கடை)
இல.02, பருத்தித்துறை வீதி, நல்லூர், கல்வியங்காடு.
தெ. பகீரதன் 0778448589



**CCTV**

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

Job Guaranteed* (*Conditions apply)

Next Batch: 19 - March - 2016

iCS EDUCATION

77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)

021-4926222,076-7013060



**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-3982)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062



**நீரிழிவு நோய் தொடர்பான விழிப்பூட்டல்**

மாரடைப்பு, பக்கவாதம், பார்வைஇழப்பு, உயர்இரத்த அழுத்தம், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்த காரணமான நீரிழிவு நோய் உங்களை பீடித்துள்ளதா? இல்லையா? என்பதை உடன் அருகே உள்ள அரச வைத்தியசாலையில் இலவசமாய் பரிசீலித்து உறுதி செய்து கொள்ளுங்கள்.

சீனி கொல்லும். Sugar Kills.

யாழ்/ நீரிழிவு அஷோசியேஷன்

J/Diabetes Association

T.P : 077 666 9055 (3246)


# பாணின் விலை...

விலை அதிகரிக்கப்படக்கூடும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங் கம் தெரிவித்துள்ளது. அதன் தலைவர் என். கே. ஜயவர்த்தன இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாண் இறாத்தல் ஒன்றின விலை 2 ரூபாய் 50 சதம் அல்லது 5 ரூபா யால் அதிகரிக்கக்கூடும் என அவர் குறி ப்பிட்டுள்ளார். (செ-12)

# உதை...

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் யாழ். திருநெல்வேலி பாரதி மைதானத் தில்இடம்பெற்றுள்ளது.

இதில் திருநெல் வேலி பாற்பண்ணை யைச் சேர்ந்த பாலச் சந்திரன் பிரகாஷ் (வயது28) என்ற இரண்டுபிள்ளையின தந்தையே உயிரிழ ந்தவராவார்.

சடலம் பிரேத பரி சோதனைக்காக யாழ போதனா வைத்திய சாலையில் வைக்க ப்பட்டுள்ளது. (செ-30)


**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

உங்கள் கனவுகளை இன்றே அடைந்திட!

இலங்கையில் 54 வருடங்கள் மக்களிற்கு சேவையினை வழங்கி வரும் சிறிலங்கா இன்சூரன்ஸ் கிளிநொச்சி கிளையில் காப்புறுதித்துறையில் பணியாற்றிட ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள், ஓய்வுபெற்ற அரச மற்றும் தனியார் நிறுவன உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

விண்ணப்பத்தாரிகள்:

01. 18வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
02. கல்வி பொதுத் தர சாதாரணதரப்பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்கள் சித்தி
03. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட வதிவிட விண்ணப்பத்தாரிகள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முகவரி – முகாமையாளர் சிறிலங்கா இன்சூரன்ஸ் இல. 31 , A9 வீதி,கிளிநொச்சி.

விண்ணப்பமுடிவுத்திகதி: 31.03.2016

(சி-3057)





**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

LONDON METROPOLITAN COLLEGE

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS**
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.


HOTLINE : 0714150995 | 021 753 8395


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 | 13.03.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 56



# உயிரோடு இருந்தார் பிரபாகரன்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கத்தைத் தவிர உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர். பண்டிதர் பரமலிங்கம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இறைவணக்கத்தோடு ஆலடி மாநாடு கூடியது.

பண்டிதர் பரமலிங்கம் தலைமையுரை ஆற்றும் போதே வாத்தியார் வைத்திலிங்கம் ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

**விதானையார்:** என்ன? வாத்தியார் இன்றைக்கு எங்கேயோ போயிற்று வாரியள் போல இருக்கு.

**வாத்தியார்:** கனநாளா நல்லூர்க் கந்தனைப் பார்க்கவில்லை. அதுதான் ஒருக்கா நல்லூரானிட்ட போயிற்று வாறன்.

நல்லூர்க்கந்தன் கோயில் அந்த மாதிரி இருக்கு. கம்பீரமாக எழுந்து நிற்கிற இராஜகோபுரத்தைப் பார்த்த போது என்னை அறியாமலே கண்ணால கண்ணீர் கொட்டத் துவங்கிற்றுது.

**பண்டிதர்:** இந்த உலகத்திற்கே நேர முகாமைத்துவத்தை நல்லூர் முருகன் தானே அமுல்படுத்தினவர். சரி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம். இந்தப் பெரிய வீதியைச் சுற்றி வந்தாலும் சரியாக உரிய நேரத்திற்கு முருகன் முகப்பு வாசலில வாறதைப் பார்க்க எவ்வளவு ஆனந்தம்.

இந்த உலகம் முழுவதும் நல்லூர் முருகனிட்ட தான் நேர முகாமைத்துவத்தைப் படிக்க வேணும்.

எனினும் நாங்கள் எங்கட ஏனைய விடயங்களில நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பதில்லை. நாங்களும் நல்லூர் முருகனிட்ட நேர முகாமைத்துவத்தைப் படிக்க வேணும்.

**கங்காணி:** அதுமட்டுமே நல்லூர் முருகனிடம் தானே அன்று தொடக்கம் இன்று வரை ஒரு ரூபாவில அர்ச்சனை செய்ய முடியுது.

**மூப்பர்:** என்ன ஒரு ரூபாயில அர்ச்சனையோ!

**கங்காணி:** ஓம் மூப்பர். முருகனிட்ட ஏழை பணக்காரர் என்ற பேதம் இல்லாமல் எல்லோரும் அர்ச்சனை செய்யவேணும் என்ற ஒரு உயர்ந்த நோக்கில எங்கட மாப்பாணர் ஐயா ஒரு ரூபாயிலேயே இன்றுவரை அர்ச்சனை செய்யிறதை அமுல்படுத்தி வருகிறார்.

கோப்பாயில இருபத்தைந்து வருடங்களுக்கு முன் ஓ.ஐ.சியாகக் கடமையாற்றிய ஒரு பொலிஸ் அதிகாரி அண்மையில நல்லூர் முருகனிட்ட வந்தவர்.

அர்ச்சனை செய்யிறதுக்கு ரிக்கெற் எடுக்க நூறு ரூபாயைக் கொடுத்திருக்கிறார். ரிக்கெட் கவுண்டரில் இருந்தவர் ரிக்கெற் ஒரு ரூபா என்று சொல்ல அந்தப் பொலிஸ் அதிகாரி அதிர்ந்து போனாராம்.



25 வருடங்களுக்கு முன் கோப்பாய் ஓ.ஐ.சி ஆக இருந்தபோது ஒரு ரூபா ரிக்கெற் எடுத்து நல்லூர் முருகனுக்கு அர்ச்சனை செய்தனான். 25 வருடங்களுக்குப் பிறகும் ஒரு ரூபாயில அர்ச்சனை என்டால் நம்பவேமுடியவில்லை. அந்தப் பொலிஸ் அதிகாரியின்ர கண்கள் கலங்கிக் கொண்டதாம். எங்கட நல்லூர் முருகன்ர நிர்வாகம் அற்புதமாக நடந்து வருகுது.

**பண்டிதர்:** ஒவ்வொரு செயலும் முருகன்ர கட்டளை எண்டு நினைத்து ஆலயப் பணியைச் செய்யிறதால எல்லாம் சிறப்பா நடக்குது.

**மூப்பர்:** நானும் ஒருக்கா நல்லூர் முருகனிட்ட போக வேணும்.

(மூப்பர் இப்படிக் கூறிய போது ஆலடி மாநாட்டிற்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தை பண்டிதர் வாசித்தார்.)

**பண்டிதர்:** அன்பிற்குரிய ஆலடி மாநாட்டுத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வணக்கம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் 65 ஆயிரம் வீடுகளைக் கட்டுகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இந்த வீடுகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. நீண்ட காலத்திற்கு இந்த வீடுகள் உகந்தவையல்ல என்றொரு குற்றச்சாட்டு. இதைவிட இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஏகப்பட்ட செலவு ஆகிறது. இதுதவிர போதிய பாதுகாப்பும் வீட்டிற்கு இல்லை. காஸ் சிலிண்டரில சமையல். அந்தரத்திற்கும் அடுப்புமூட்டி ஒரு தேத்தண்ணி வைக்கமுடியாதாம். எங்கள் மக்களின்ர வாழ்வியல் வழமைக்கு இந்தப் புதிய வீடு ஒத்துவராது என்று பலரும் கூறிக்கொள்கின்றனர். இதுபற்றி ஆலடி மாநாடு நல்லதொரு தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
ஓர் அன்பர்

(பண்டிதர் கடிதத்தை வாசித்து முடித்ததும் மாநாட்டில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்கும் பொருட்டு விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** அந்த அன்பர் எழுதின கடிதத்தில நியாயம் இருக்கத்தான் செய்யிது. எனினும் அரசாங்கம் தாற வீட்டை வேண்டாம் என்று சொன்னால் அது எங்கட சனங்களுக்குக் கிடைக்கிறதையும் இல்லாமல் செய்துவிடுமோ என்றுதான் பயமாயிருக்கு.

**கங்காணி:** விதானையார் அப்படியல்ல. அரசாங்கம் சும்மா தருகுது என்பதற்காக தாற எல்லாத்தையும் வேண்ட முடியாது. அரசாங்கம் என்ன புண்ணியத்திற்குத் தருகினமோ எங்கட சனங்களை அடித்துத் துவம்சம் செய்து வாழ்ந்த மண்ணையும் விட்டுத் துரத்திப்போட்டு, நாங்கள் தாறதை நீங்கள் வாங்குங்கோ என்பதாக இருந்தால் அதை ஏற்கமுடியுமா என்ன?

**வாத்தியார்:** எங்கட தமிழ்மக்கள் வாஸ்து சாஸ்திரம் பார்த்து வீடு கட்டுறது தான் வழமை. அதிலும் கல் வீடு என்பதுதான் எங்கட தாயகத்தின்ர மரபு.

கல் வீடு என்பதற்கு அப்பால் ஒரு புதுவிதமாக வீடு கட்டுகிறதா இருந்தா அதை வீடு கிடைக்கவுள்ள மக்களைக் காட்டி நிலைமையை ஆராய வேணும். மக்களின்ர கருத்துக்களையும் கேட்க வேணும்.

எனினும் அமைச்சர் சுவாமிநாதன் இந்த வீட்டு விசயத்தில கடும் கோபம் கொண்டதாகக் கேள்வி. ஒரு அமைச்சர் அப்படிக் கோபம் கொள்ளக்கூடாது. மக்கள் விரும்புகிற வீட்டைக் கட்டிக் கொடுப்பதுதான் நல்லது. அதிலும் வாஸ்து சாஸ்திரம் என்பது கட்டாயம் இல்லை என்டால் புதுக்கக் கட்டின வீட்டில குடியிருக்கும் போது ஒரு குழந்தைக்கு அடிக்கடி வருத்தம் வந்தால் வீடு இராசியில்லை என்பதாக மக்கள் நினைப்பினம். அப்படியொரு நினைப்பு வந்திட்டால் பிறகு அந்த வீட்டில எவரும் குடியிருக்க மாட்டினம் என்பதுதான் உண்மை.

இதுவிடயத்தில யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மக்களின்ர மற்றும் துறைசார் நிபுணர்களின்ர கருத்துக்களை அறிகின்ற ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேணும். இதில அமைச்சர் சுவாமிநாதன், வடக்கு மாகாண முதலமைச்சர்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவேணும்.

இந்தக் கூட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடு பற்றிய விளக்கமும் புதிய வீட்டால் குடியிருப்பவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் பற்றியும் எடுத்து ஆராய்வது அவசியம். இதைவிட்டிட்டு அமைச்சர் சுவாமிநாதன் மக்களை அதட்டி எதையும் செய்ய நினைக்கக்கூடாது.


**விதானையார்:** அதுமட்டுமல்ல வாத்தியார் அமைக்கப்படவுள்ள வீடு தொடர்பில வீடுகள் அமைக்கின்ற நிறுவனம் சார்ந்த சிங்களப் பெண்ணொருவர் பொருத்தப்பாடில்லாமல் கடுமையாகக் கதைத்ததாக மக்கள் குறைபட்டுக் கொண்டவியள்.

என்னைப் பொறுத்தவரையில வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற ஒப்பந்த நிறுவனங்கள் தனியே தங்கட இலாபங்களை மட்டும் கருத்திலெடுத்துச் செயற்படக் கூடாது. இந்த வீடு அமைக்கிற செயல் ஒரு முக்கியமான விடயம் என்பதால இது தொடர்பில பொது மக்களின்ர கருத்துக்களையும் துறைசார் தமிழ் நிபுணர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்த பின் நிலைமைக்கேற்ப வீடுகளை அமைப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறன்.

விதானையார் இவ்வாறு கூற அதை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து மாநாட்டிற்குச் சென்றனர்.

ஆதித்தன்


# திருவாய் மலர்ந்த சரத்பொன்சேகா




மன்னன் ஒருவன் தன் ஆஸ்தான புலவனிடம் 3 கேள்விகள் கேட்டான். கடவுள் எங்கே இருக்கிறார்? எந்தத் திசை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்? என்ன செய்கிறார்? இந்த 3 கேள்விகளுக்கும் நாளைய தினம் விடையளிக்கவேண்டும். இல்லையேல் சிரச்சேதம் நடக்கும் என்று கண்டிப்பாக உத்தரவிட்டான்.

மன்னனின் 3 கேள்விகளால் அதிர்ந்து போன ஆஸ்தான புலவர் எதுவும் செய்யமுடியாமல் தன் வீட்டிற்குச் செல்கிறார். புலவரின் முகத்தில் சோகம். எவருடனும் கதைக்காமல் ஆழ்ந்த யோசனையுடன் இருந்தார். புலவரின் வீட்டில் இருந்தவர்கள் புலவரின் நிலை கண்டு கவலை கொண்டனர். தாத்தா என்ன நடந்தது என்று புலவரின் ஐந்து வயதுப் பேர்த்தி கேட்கிறார். புலவர் எதுவும் சொல்லவில்லை. மீண்டும் சிறுமி வலியுறுத்துகிறார். ஆத்தாக் கொடுமையாக இப்போது புலவர் வாய் திறந்தார்.

அம்மா, எங்கள் மன்னன் என்னிடம் 3 கேள்விகள் கேட்டுள்ளார். அதற்குத் தக்க பதிலளிக்கத் தவறினால் நாளை எனக்கு சிரச் சேதம் நடக்கும் என்றார் புலவர். தாத்தா மன்னன் கேட்ட அந்த மூன்று கேள்விகளும் யாவை என்கிறார் சிறுமி. குழந்தாய் அது மிகவும் கடினமான கேள்வி. உனக்கேன் கவலை. பரவாயில்லை தாத்தா. நீங்கள் கேள்வி என்ன என்பதைக் கூறுங்கள் என்று அடம் பிடிக்கிறார் சிறுமி. கடவுள் எங்கே இருக்கிறார்? அவர் எங்கே பார்த்துக் கொண்டிருக்கிறார்? என்ன செய்கிறார்? இவை தான் அந்த மூன்று கேள்விகளும் என்றார் புலவர். சிறுமி சிரித்தபடியே தாத்தா இந்தக் கேள்விகளுக்கா நீங்கள் பயந்தீர்கள். இந்தக் கேள்விகளுக்கு நானே பதில் கூறுகின்றேன் தாத்தா. நாளை நீங்கள் மன்னர் சபைக்குச் செல்லவேண்டாம். நானே சென்று பதில் அளிக்கிறேன் என்றார் சிறுமி. தன் பேர்த்தியின் வார்த்தையில் புலவருக்கு நூறுவீத







நம்பிக்கையில்லையாயினும் உயிர்ப்பயம் சரி என்று சொல்ல வைக்கிறது.

மறுநாள் பொழுது சிறுமி மன்னர் சபைக்குச் செல்கிறார். மன்னா! என் தாத்தாவிடம் நீங்கள் 3 கேள்விகள் கேட்டீர்களாம். என் தாத்தா இச்சிறிய கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கத் தயாரில்லை. ஆகையால் என்னை அனுப்பிவைத்தார். எங்கே உங்கள் முதலாவது கேள்வியைக் கூறுங்கள்.

**மன்னன்:** கடவுள் எங்கே இருக்கிறார்.

**சிறுமி:** மன்னா ஒரு போத்தலில் பசுப்பால் கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றுங்கள் என்று கூற சேவகர்கள் அதனைச் செய்கின்றனர்.

**சிறுமி:** மன்னா இந்தப் பாலில் நெய் இருக்கிறதா?

**மன்னன்:** ஆம்

**சிறுமி:** அப்படியானால் அந்த நெய் எங்கே இருக்கிறது? மன்னன் திணுக்குறுகிறான்.

**சிறுமி:** மன்னா இந்தப் பாலில் நெய் இருக்கிறது என்றாலும் அது எங்கே இருக்கிறது என்று தெரியவில்லையல்லவா? அதுபோலத்தான் கடவுளும் பாலில் நெய் போல் மறைந்து இருக்கிறார். சிறுமியின் பதில் மன்னனை அதிர்ச்சியடையச் செய்கிறது.

**சிறுமி:** மன்னா உங்கள் இரண்டாவது கேள்வி?

**மன்னன்:** கடவுள் எத்திசை நோக்கிப் பார்க்கிறார்?

**சிறுமி:** அரசே இந்தச் சபையில் ஒரு தீபத்தை ஏற்றுங்கள் என்கிறார் சிறுமி. அவரின் கட்டளைப்படி தீபம் ஏற்றப்படுகிறது.

மன்னவனே இப்போது ஏற்றப்பட்ட இந்தத்தீபம் எத்திசை நோக்கி எரிகிறது? சொல்லும் பார்க்கலாம்.

சிறுமியின் மறுத்தான் கேள்வியில் மன்னன் குழம்பிப் போகிறான். எரிகின்ற தீபம் எத்திசை என்றிராமல் எல்லாத் திசையிலும் தெரிகிறதல்லவா? இதுபோல்தான் இறைவனும் எல்லாத் திசைநோக்கியும் பார்க்கிறான்.

இப்போது மூன்றாவது கேள்வி.

**மன்னன்:** கடவுள் என்ன செய்கிறார்?

**சிறுமி:** யாரங்கே. சேவகர்களே இந்த மன்னனைச் சிறையில் அடையுங்கள். நான் அரியாசனத்தில் அமரப் போகிறேன் என்று கர்ச்சிக்கின்றார். மன்னன் அதிர்ந்து போகிறான்.

தாயே என்ன இது!

மன்னா! இதைத்தான் கடவுள் செய்கிறார் என்றார் சிறுமி.

மன்னனின் மூன்று கேள்விகளுக்கும் சிறுமி தெளிவான பதிலை அளித்து புலவனையும் காப்பாற்றி மன்னனின் ஐயத்தையும் தீர்த்தாள்.

அட, இந்தக் கதை எதற்கு இப்போ! என்று நீங்கள் கேட்கலாம். அது நியாயமும் கூட. மன்னனின் மூன்றாவது கேள்வியும் அதற்கான சிறுமியின் பதிலும்தான் இப்போது நாம் கவனிக்க வேண்டியது.

இந்த நாட்டின் மன்னனாக இருந்த மகிந்தவின் மகன் சிறையில், மூத்த புதல்வரையும் சிறையில் அடைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்த நிலையில் இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்து வன்னிப் போரை நடத்திய சரத் பொன்சேகா கடந்த இரு தினங்களுக்கு முன் திருவாய் மலர்ந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டனர் என்ற செய்தியை மகிந்த ராஜபக்ஷ அறிவித்தபோது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடுதான் இருந்தார் என்பது ஒரு செய்தி.

மற்றையது இராணுவம் போர்க்குற்றம் புரிந்திருக்கக்கூடும். அதனை விசாரிப்பதற்கு சர்வதேச நீதிபதிகள் ஈடுபடுவது ஏற்புடையது என்றார்.

சரத் பொன்சேகா இப்படிக் கூறியது அதிர்ச்சிக்குரியது. இது ஒருபுறம் இருக்க,

திருடர்களில் அவன் இவன் என்று கிடையாது. திருடர் என்றால் அவர்களை விசாரித்தாக வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் திடீரென்று இப்படிக் கூறுவது ஏன்? எதற்காக? என்பது புரியவில்லை.

அரசியல் புலத்தில் ஏதோ நடக்கப் போகிறது என்பதை ஊகித்துக்கொண்டாலும் மன்னனின் அந்த மூன்றாவது கேள்வியும் அதற்கான விடையும் வேலை செய்யத் தொடங்கிவிட்டது என்பதை மட்டும் இப் போது துணிந்து சொல்ல முடியும்.

சர்வதேச விசாரணைக்கு இடம்கொடுக்கக்கூடாது. எங்கள் இராணுவத்தை போர்க்குற்றவாளிகளாக ஆக்க முடியாது என்று கூறியவர் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா. அதே சரத்பொன்சேகா இப்போது சர்வதேச நீதிபதிகள் போர்க்குற்றம் தொடர்பில் விசாரிப்பது நல்லது என்று கூறுவது ஏன்? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


விதுரன்







# சொர்க்கம் வேணாம்!



அமெரிக்காவின் கெண்டகி மாநிலத்தில் ஒரு கிராமத்து தேவாலயத்தில் பாதிரியார் சொர்க்கத்துக்கு செல்வது பற்றிச் சிறப்பாக போதித்தார்.

அவர் பேசி முடிந்ததும், "யாரெல்லாம் சொர்க்கம் செல்ல விரும்பு கிறீர் கள்?" என்று கேட்க, ஒட்டு மொத்தக் கூட்டமும் கை தூக்கி யது.

ஆனால், ஓர் ஏழைச் சிறு வன் மட்டும் கையைத் தூக்க வில்லை. அந்தப் பாதிரியார் அவனிடம் வந்து, "தம்பி சொர்க் கம் வேண் டாமா? அப்படியானால் நர கம் செல்கிறாயா?" என்று கேட்டார்.

"பாதர் நான் சொர்க்கத்தை யும், நகரத்தையும் விரும்பவில்லை. அமெரிக்க ஜனாதிபதியாக விரும்புகிறேன்" என்றான்.

"உனக்கு இந்த சிறு வயதில் பதவி மோகமா? கடவுளை விட அதிகாரம் முக்கி யமா?" என்று கேட் டார் பாதர்.

"பாதர் இங்கே கறுப்பு இன மக்களை நாயை விட கேவலமாக சங்கிலி யால் கட்டிப் போட்டு பலர் கொடுமை செய்கின்ற னர்.

இந்த அதி காரத்தை தட்டிக் கேட்டு, அம்மக் களை விடுதலை செய்ய அமெரிக்க ஜனாதிபதி என்ற அதிகாரம்தான் சரியாக இருக்கும்" என்று சொன்னதோடு அதைச் சாதித்தும் காட்டியவர் தான் ஆபிரகாம் லிங்கன்.

தெளிவான சிந்தனை, குறிக் கோள் இருந்தால், நீங்கள் எதை யும் சாதிக்க லாம் குட்டீஸ்..



**இங்குள்ள தேசியக் கொடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று கண்டு பிடித்துக் கூறுங்கள் பார்க்கலாம்.**



# மணிவிழா வாழ்த்து



## E.S.P. நாகரத்தினம்

60 ஆவது அகவையில் அடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் வாழ்த்து கூறுவதில் உள்ளம் உவகையடைகின்றது. ஆரம்பகாலம் முதல் எமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் எமக்கு ஆக்கபூர்வமான ஆலோசனை வழங்கி எமது வளர்ச்சிக்கு பாத்திரமான இ.ச.பே.நாகரத்தினம் அவர்களையும் குடும்பத்தவர்களையும் இன்றைய விழா சிறப்புற எமது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றோம்.

**LUMALA CYCLE**
**SOLE PROPRIETOR**
**AND**
**CITY CYCLE INDUSTRY**

**119, GALLE ROAD,**
**PANANDURA.**

13.03.2016 இன்று ஞாயிற்றுக


# விழா

- பொன்மனச்செம்மல்
- தேசபுத்திரா
- மனிதநேய ஈகையாள



ப
கவர்
அரவ
நி

## மணிவிழா நாயகரை மனதார வாழ்த்துகின்றோம்



### E.S.P. நாகரத்தினம்

"கல்விக் காருண்யன்", "பொன்மனச் செம்மல்" உயர்திரு E.S.P. நாகரத்தினம் அவர்களின் மணிவிழாவினையொட்டிய வாழ்த்துச் செய்தி


இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல் இனிய நீர்த்தண்
சுனைகள் அமைத்தல் அன்னசத்திரம் ஆயிரம் வைத்தால்
ஆலயம் பதினாலாயிரம் நாட்டல் பின்னருள்ள தர்மங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி- ஆங்கோர்
ஏழைக்கெழுத்தறிவித்தல்

என்ற கோட்பாட்டிற்கிணங்க செயலாற்றிக் கொண்டிருக்கும் "காரை மண் தந்த பாரி" E.S.P. நாகரத்தினம் அவர்களின் கல்வி, சமூக, ஆன்மீகப் பணிகள் தொடரவும் அவரும் அவர்தம் குடும்பத்தினரும் நீடு வாழவும் எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்மனின் திருவருட் கடாட்சத்தினை வேண்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

(சி-3951)

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி., கோண்டாவில்.

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



"கல்விக் கதிரவன்" "ஈகைக்காவலன்"
"இறைபணி வேந்தன்"

### E.S.P.நாகரத்தினம்

கல்விக் கண்திறக்க கருணையுடன்
அள்ளி அள்ளி வாரி வழங்கிடும் வள்ளலே
உன்னை எம் உறவென்று
சொல்லி மகிழ்ந்திட-எம்
உள்ளம் பூரிக்கிறது
நின்பணி தொடர்ந்து
நீவிர் நீடுழி வாழ்க வாழ்க.

(சி-3944)

62, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

வாழ்த்துவோர்:
அக்கா, மைத்துனர்,
மருமக்கள்

# 60 ஆவது அகவை மணிவிழா

## Greeting At The Ceremoney

## E.S.P. நாகரத்தினம்



- பொன்மனச்செம்மல்
- மனிதநேய ஈகையாளன்
- கல்விக்காருண்யன்
- கல்விக்கதிரவன்
- ஈகைக்காவலன்
- இறைபணி வேந்தன்
- சமூகமாமணி
- சைவப்புரவலர்
- ஈகையார் திலகம்
- தேசபுத்திர

**With Best Compliments**
From
**TOKYO CEMENT COMPANY**



# கவிதைக் கலசம்



அட்டைப் பக்கங்களில்
ஆபாசப் படம்போட்டு
மிட்டாய்க்கழும் குழந்தையாய்
மிடுக்கான இளைஞரை எண்ணி
திட்டம் போட்டு அதை
திணிக்க நினைப்போரே
ஒளிகொடுக்கும் பெயர்களை- ஏன்
இழிவுபடுத்துகிறீர்

மாவை. நா.கஜேந்திரன்

## உறவுகள்

அடுத்தவனிடம் இருந்து
பறித்துக் கொள்வதில்
காட்டும்
புத்திக் கூர்மையை
விட்டுக் கொடுத்து
செயற்படுவதில்
தொலைத்து விடுகின்றனர்
வறுமையில்
இருந்த போது
பகிர்ந்துண்டு வளர்ந்த
உறவுகள்
வருமானம் தந்த
வசதிகளில்
பணம் மட்டுமே
வாழ்க்கை என்று
பக்கத்து வீடுகளை
பகை வீடாய் பார்க்கின்றன
பிறந்த வீடும்
பிறத்தி வீடாய் போச்சு
வார்த்தைகளில்
விடம் தடவி
மூச்சுக் காற்றில்
கலந்து விட்டு
குறுநகை புரிகின்றன
பற்கள்.
உற்றுப்பார்த்தால்
புரியும்
உள்ளிருக்கும் ஏளனம்

**க.செல்வநேசன்**
**அல்வாய்**

## பங்குனி எட்டே

சர்வதேசமே விழித்திடு
சாக்கடை நீரா பெண்ணினம்?
சுயமாய் வாழ்ந்திடும்
சுதந்திரம் நமக்கில்லையா?
கிள்ளுக்கீரையாய் நமையிங்கு
கிள்ளி முகர்வது தகுமா?
அடி உதை அதிகாரமென
அடக்குமுறை கலாசாரம்
எருதுகள் போல் நம்சேவை
எச்சில் பார்வைகளால் வன்முறை
குழந்தைச் சிறுமிகளோ வன்புணர்வில்
குற்றுயிராகிடும் பேரவலம்
பற்றைகள் பாழடை வீடுகளில்
பலியாகிடும் பாவையர்
தொடர்பாடல் வன்புணர்வென
தொடர்ந்திடும் காமலீலைகள்
அன்பினால் அகிலத்தை அணைப்பவரை
அழித்திட நினைப்பது கொடுமையன்றோ
புனிதமான பெண்ணினத்தை
புதுமைப்பெண்ணாய் நோக்கிட
பாவையர்க்காய்ப் பவனிவரும்
பங்குனி எட்டே பதில் பகிர்ந்திடு

**உடுவிலூர் கலா**

## வலி

இறுகக் கட்டியணைத்த
அவள் கரங்கள்
இன்று தட்டிப் பார்த்தும்
திறக்கவில்லை
அவள் இதயக் கதவுகள்.
என்னுயிர் உலகமென உளறிய
அவள் உதடுகள்- இன்று
உறக்கம் தொலைத்து ஊசலாடுது
என் உணர்வுகள் தனிப்பார்வையால்
பாசம் பேசிய பாவை இன்று
தனிமையில் தத்தளிக்க
வைக்கும் அப்பேதை.
காலத்தில் காத்திருப்பேனென்றாய்
என்னை கை நெகிழ்ந்தும் சென்றாய்,
அன்று....உனை வர்ணித்த என் கவிகள்
இன்று... வெட்கப்படுகுதடி அவ்வரிகள்,
அன்று... உன்னுள் வந்த என் காதல்
இன்று... பொய்யான வெறும் சாரல்,
இன்றும் வெளிவருகிற என் கவிகள்
என் காதல் தோல்வியின்
வலி(மி)கள்...

ஞா.கட்டைக்கவிதன்
நெடுந்தீவு

## கோவணமுமற்ற கேவல நிலையுமாச்சு

இரண்டு பத்தாறாண்டு காலம்
எட்டியும் பார்த்திட
முடியாதிருந்த எம்மரும்
மானம் பராயானை
கிட்டவே பார்த்தோமம்மா
கிழிந்தன இதயமெல்லாம்
போச்சு போச்சு எல்லாமே
அழிந்து போச்சு
பட்டுவேட்டி கட்டி
பகட்டாக வாழ்ந்த நாங்கள்
கோவணத்திற்கும் வழியற்ற
கேவல நிலையுமாச்சு
ஆனவழி தெரியாது
அலைமோதும் நமக்கு
என்னதான் செய்யப்போறார்
எல்லோரும் பாருங்கோ...!

**கவிமணி அன்னைதாஸன்**
**வயவையூரான்**

# மௌனத்தின் தேடல்- 292



## வீரம்

வீரம் செறித்த மண்
விடுதலை வேண்டி
வேட்கை கொண்ட மண்
துவண்டாலும் மாண்டாலும்
கொண்ட கொள்கையும்
எடுத்த சபதமும்
தலையோடு போனால் என்ன?
திசைமாறிச் சென்றால் என்ன
ஒரு துளி இரத்தத்தில்
உன் வரலாறு பதியப்படும்
ஒரு தமிழன் வீரத்துடன்
வாழும் வரை



சோபியா.யு
விசுவமடு

## விண் போர் தவிர்

தரைநீர் தவிர்த்து விண்மேல் அகர
போர்த்தொட எண்ணித்தமை தகா

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## வீரம் விளைந்த மண்

வீரம் விளைந்த மண் நம் மண்
பல வீரர்கள் வாழ்ந்ததும் நம் மண்
பாரம்பரியம் கொண்ட மண்
தமிழர் பண்பாடு காத்த மண்
இன்று போதயம் நிறைந்த மண்ணும்
பல கோழைகள் வாள் கொண்டு
வாழ்வதும் நம் மண்ணே

சந்நிதி
கதிர்ஷன்

## வாள் வீச்சு

வானத்தில் வெண் முகில்
வாள் வீச்சில் திகில்
புவனத்தில்
இதுவொரு சாகசத்தின் திரில்
மேனியோ காற்றினில்
நூல் இல்லாப் பட்டம்போல்

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## போட்டி

எந்தவொரு போட்டியானாலும்
போட்டி போடுபவர்
விட்டுக்கொடுக்காமல்
விலை போகாமல்
தவறுகள் செய்யாமல்
தலைக்கனத்தை தவிர்த்து
தந்திரமாக விளையாடினால்
வெற்றியை தனதாக்கலாம்
மிக இலகுவாக

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## தற்பாதுகாப்பு

சாதனை நிலை நாட்டிடவல்ல
சாகச விளையாட்டில்
தற்பாதுகாப்புக் கலையுமுண்டு
மோதலிலும் உனை மீட்டிடும்
மோசக்காரர் வலையில்
சிக்கையிலும் தப்பிடலாம்- ஏதோ
நடக்கட்டும் நடத்து-நீ
நாளைய உலக
காவியமாவாய்!

பொ.புனிதன்
வரியப்புலம்

## யுத்த தர்மம்

வாழ் ஏந்தி
நேருக்கு நேர் நின்று
போர் செய்வதில்
தர்மம் இருக்கின்றது
களத்தில் செய்யும்
போரில் போராளிகள்
மட்டுமே கொல்லப்படுவர்
இரத்தம் சிந்தினாலும்
மகத்துவம் இருக்கின்றது
யுத்தம் செய்தாலும்
நீதி இருக்கின்றது

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## யுத்த மாற்றம்

மன்னர் காலப் போர் வீரர்
மின்னல் வேகத்தில்
வாள் பிடித்துப்
பயிற்சியெடுத்துக் களத்தில்
போராடி நாட்டுக்கும் மன்னனுக்கும்
பெருமை சேர்த்தனர் அன்று
விஞ்ஞான யுகத்தில் கண்டுபிடித்த
நவீன யுத்தக் கருவிகளால் இன்று
உயிரோடு உடைமைகளையும்
தரைமட்டமாக்குகின்றனர்
மாற்றம் ஏமாற்றந் தரலாமா?

துரை
தென்மட்டுவில்

## வாழ்வும் வரலாறும்

அகம் புறமென்று
காதலும் வீரமும் அன்று
கைகோர்த்து நடந்தது
சங்ககாலத்தில் தான்
இருந்தாலும் ஒற்றுமையானது
குறைந்து வந்தபோது
சேர சோழ பாண்டியர்
சேர்ந் தொன்றாகாமல்
பிரிந்து நின்று போரில்
பிரியம் வைத்த போது
தமிழர் வாழ்வியலில்
இடர்கள் தலைதூக்கியது
ஒற்றுமையை மூலதனமாக்கி
தொலைநோக்கிலன்று
சிந்தித்திருந்தாலின்று
சந்ததியினர் மட்டுமல்ல
சரித்திரமும் வாழ்த்துப்பாடும்

க.நாகராசா, நுணாவில்

# மௌனத்தின் தேடல் -293



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.03.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## இந்திய அணி இருபது-20 கிண்ணம் வெல்லுமா?

## தற்காலத்தில் தமிழர் நிலை என்ன?

## மிருதன் வெற்றிப் படமா?

**கௌசி — புன்னாலைக்கட்டுவன்**

**பெண்கள் தினத்தில் தாங்கள் கூற விரும்புவது?**

வலிகளில் மிக உச்சமான வலி பிரசவ வலி. அந்த பிரசவ வலியையே தாங்கி இந்த உலக உருவாக்கத்திற்கு உயிர்தரும் பெண்களால் எதையும் சாதிக்க முடியும் எனும் எண்ணத்தை பெண்கள் மனதில் விதைப்போம். அவர் தம் உயர்விற்கு உறுதணையாய் நிற்போம்.

**றோசன் — மல்லாவி**

**ஒருவன் செய்யும் தவறுக்கு யார் பொறுப்பு?**

சிறுவயதில் வீட்டில் வன்முறையைக் கற்கும் பிள்ளைதான் நாளை வீதியில் வன்முறையில் இறங்குகிறது. ஒரு பாடசாலையில் முதலாம் ஆண்டில் படிக்கும் சிறுவன் பாடசாலை வரும் போது தனது பென்சிலை காதில் செருகிக் கொண்டே வருவான். அதை அவதானித்த ஆசிரியர் பிள்ளையிடம் விசாரித்த போது அவனின் தந்தை வேலையின் நிமித்தம் பென்சிலை காதில் செருகி வைத்திருப்பது தெரியவந்தது. மனித வாழ்க்கை என்பது கற்றுக்கொள்வதுதான். சிறுவயதில் நாம் எதைக் கற்றுக்கொள்கிறோமோ அதை அதுவாய் பிரதிபலிக்கின்றோம் அவ்வளவுதான்.

**குருபரந்தாமன் — அல்வாய்**

**தன்னைத் தாங்களே பெருமைப்படுத்தும் மனிதர்களை என்ன செய்யலாம்?**

ஒரு வயதிற்குப் பின் அந்த வியாதி வந்துவிடுகிறது. உங்களுக்குத் தெரிந்த ஒருவரின் ஆரம்ப காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒப்பிட்டுப்பாருங்கள. இளம் வயதில் பணம். இடை வயதில் பணம் + பதவி முதுமையில் புகழ்.

**அசோக் — மாவிட்டபுரம்**

**நடைபெறும் குற்றங்களுக்கு என்ன காரணம்?**

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.

**பொம்மி — யாழ்ப்பாணம்**

**காதலிக்கிறவங்களைப் பிரிக்கிறவர்கள் பற்றி?**

காதல் கணிதம் போல. கணிதத்தில் கூட்டல் மட்டுமா இருக்கிறது. கழித்தல், பெருக்கல், பிரித்தல் இப்படி பலதிருக்கிறதே.



**வியாஸ் — பண்டத்தரிப்பு**

**மனைவி அமைவது உண்மையில் இறைவன் கொடுத்த வரமா?**

அப்படித்தான் திருமணத்திற்கு முன் சொல்கிறார்கள். ஆனால் சிலர் அடுத்த வருடமே சட்டத்தின் முன் நிற்கிறார்கள் விவாகரத்தை கோரி. பலர் மனதுக்குள்ளேயே விவாகரத்துச் செய்துவிட்டு ஒன்றாய் வாழ்கிறார்கள் உறவுகளுடன் சண்டையிட்டுக்கொண்டு.

**நிவேத் — அலம்பில்**

**காதலிக்கும் போது பெண்களும் கல்யாணத்தின் பின் ஆண்களும் கண்ணீர் சிந்துவது ஏன்?**

காதலிக்கும் போது பெண் அழுகிறாள். அந்த அழுகை கல்யாணத்திற்குப்பின் இருக்காது என்பது பெண்களுக்குத் தெரியும். கல்யாணத்தின் பின் தன் வாழ்நாள் முழுவதையும் அழுது தீர்க்கப் போவதை ஒரு ஆண் அறிவதும் இல்லை அதுபற்றி சிந்திப்பதுமில்லை.




**ஜிவ்றி — மாதகல்**

**பரீட்சையில் வெற்றி பெற என்னவழி?**

இதையெல்லாம் கேள்வியா கேட்டா விளங்கின மாதிரித்தான். முதல்ல படிக்கிற அலுவலப் பாருங்கையா.

**நிதர்சன் — கொக்குவில்**

**தற்காலத்தில் தமிழர் நிலை என்ன?**

அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தபோது பலம் மிக்க எதிர்க்கட்சியில் இருக்கும் நாம் தீர்வு கிடைக்கும் நம்புங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள் என அறிக்கை விடுகிறோம். இதுவரை அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் எத்தனை உறுதி மொழி வழங்கினீர்கள்? அதில் எத்தனையை நிறைவேற்றினீர்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்? இதில் 2016ற்குள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்பது வேறு.

**தாரு — நல்லூர்**

**ஒரு பெண்ணைப் பார்த்ததும் தொலைபேசி இலக்கம் கேட்கும் ஆண்கள் பற்றி?**

ஆண் தன் குலப் பெருமையைக் காப்பாற்ற வேண்டுமல்லவா அதனால்தான் கேட்கிறான். கேட்டால் உடனே தொலைபேசி இலக்கத்தை கொடுக்க வேண்டியது தானே அப்பா நம்பரை.

**விது — யாழ்ப்பாணம்**

**பெண்கள் ஏன் ஆண்களை ஏமாற்றுகிறார்கள்?**

தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய் விட்டது என்று அவனும் கழுத்துக்கு வந்தது காதோடு போய்விட்டது என்று அவளும் நினைத்துவிட்டு போய்விடுவார்கள். இதற்கு நாமென்ன செய்ய முடியும்.

**தர்ஷி — விசுவமடு**

**காதலிப்பது தப்பா?**

காதலிப்பது தப்பல்ல. நான்குபேர் நம் காதலைப் பார்த்து காறித்துப்பும் அளவுக்கு காதலிப்பது ரம்பத் தப்பு.

**நித்திலன் — யாழ்ப்பாணம்**

**மிருதன் வெற்றிப் படமா?**

தொடர்ச்சியாக நான்காவது வெற்றியையும் பெற்றுவிட்டார் ஜெயம்ரவி என செய்திகளில் பார்த்திருக்கிறேன்.

**வினுஜா — பண்டத்தரிப்பு**

**இந்திய அணி இருபது-20 கிண்ணம் வெல்லுமா?**

ஆசிய அணிகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா பலமாக இருந்தாலும் சமீபத்தில் தென்னாபிரிக்கா- அவுஸ்திரேலியா அணிகள் மிரட்டும் திறனில் உள்ளது. அத்துடன் இந்தியாவை பழிதீர்க்க தம் துடுப்பு மட்டைகளைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. அதனால் இந்த இருபது-20 இந்தியாவுக்கு சவாலானதே.

### அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

குறுந்தகவல் (SMS)

021 567 1532

# நான் பிடித்த முயலுக்கு நான்கு கண்கள்



"அந்த ஆளு 'நான் புடிச்ச முயலுக்கு மூன்று கால்' என்று சொல்கிற பிடிவாதக்காரரப்பா..." என்று பிடிவாதம் பிடிப்பவர்களுக்கு உதாரணம் சொல்வோம். 'எல்லா முயலுக்கும் நான்கு கால்கள்தானே இருக்கும். அதெப்படி நீ மூன்று கால்கள் என்று சொல்லலாம்?' என்று நாம் சண்டைக்குக்கூட போவோம். ஆனால் இங்கு நான் சொல்கிற விடயத்தைக் கேட்டு யாரும் என்னிடம் சண்டைக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்த எச்சரிக்கைப் பதிவு.

நம்புங்கள், நான் புடிச்ச முயலுக்கு நான்கு கண்கள் இருக்கின்றன. நான் புடிச்ச முயலுக்கு மட்டுமில்லை... எல்லா முயல்களுக்குமே நான்கு கண்கள் இருக்கின்றன.

முயல்களுக்கு மட்டுமல்ல, அசை போடும் எல்லா பிராணிகளுக்கும் நான்கு கண்கள் இருக்கின்றன.இருந்தாலும் முயலுக்கு மட்டும் நான்கு கண்கள் இருப்பது தெளிவாகத் தெரியும். இதை என்றாவது நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?'எல்லாம் வல்ல அந்த பரம்பொருளுக்கே மூன்று கண்கள்தானே, முயலுக்கு எப்படி நான்கு கண்கள் இருக்க முடியும்?' என்று நீங்கள் முணுமுணுப்பது தெரிகிறது.

ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். நெரிசலான கடைவீதியில், அல்லது வனாந்திரத்தில் தனியாக நீங்கள் நடந்து போய்க்கொண்டு இருக்கும்போது, உங்கள் பின்னால் யாராவது பின் தொடர்வதை நீங்கள் பார்க்க முடியுமா? (சினிமாவில் மட்டும் முடியும்... ஹீரோ முன்னால் பார்த்துக்கொண்டே பின்னால் வரும் வில்லனை அடிப்பார்!).நிஜத்தில் உங்கள் பின்னால் யாராவது வருகிறார்களா? என்று உங்களால் திரும்பிப் பார்க்காமல் கண்டுபிடிக்க முடியுமா? நிச்சயமாக முடியாது.

ஆனால் காட்டில் ஒரு முயலைக் கொஞ்ச நேரம் பின் தொடர்ந்து பாருங்கள். காலடிச் சத்தம்கூட கேட்காதபடி மிக மெதுவாக ஒரு முயலைப் பின்னால் தொடர்ந்து சென்று பாருங்கள்.அது திரும்பிப் பார்க்காமலேயே, நீங்கள் பின்னால் வருவதைக் கண்டறிந்துகொண்டு தலைதெறிக்க ஓடிவிடும். உங்கள் அதிர்வுகளை வைத்தோ, சத்தத்தை வைத்தோ, அசைவுகளை வைத்தோ அது ஓடவில்லை.

## முயலுடன் செல்ஃபி எடுக்க முடியுமா?

நீங்கள்தான் மிக கவனமாக நடக்கிறீர்களே! பிறகு எப்படி? நீங்கள் பின்னால் வருவதை அது தன்னுடைய பின் கண்களால் பார்த்துவிட்டே ஓடுகிறது.



பெரிய இரகசியம், பெரிய விளக்கம் எதுவும் தேவையில்லை. அசைபோடும் பிராணிகள் எல்லாமே தங்களுடைய இரண்டு கண்களைக் கொண்டு நான்கு புறங்களையும் பார்க்கின்றன.ஒரே பொருளை நோக்கி இரண்டு கண்களையும் குவித்து ஒரு பொருளை முப்பரிமாணத்தில் (திரி டைமென்ஷனில்) பார்க்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. சில விலங்கினங்களுக்கும் உண்டு.

ஆனால் முயல் போன்ற எளிய விலங்கினங்களுக்கு கண்களைக் குவித்து எந்த ஒரு பொருளையும் இப்படி முப்பரிமாணத்தில் பார்க்கும் ஆற்றல் இல்லை. இந்த பலவீனத்தை அவை வேறொரு பலத்தால் சமன் செய்துகொள்கின்றன.

அதாவது, பின்னால் இருக்கக்கூடிய பொருட்களைப் பார்க்கும் ஆற்றலை அவை பெற்றிருக்கின்றன.நாம் ஒரு பொருளை உற்றுப் பார்க்கும்போது வலது கண் பார்வைப் புலமும், இடது கண் பார்வைப் புலமும் அந்தப் பொருளை நோக்கிக் குவிகிறது. அதனால்தான் எந்த ஒரு பொருளையும் முப்பரிமாணத்தில் நம்மால் பார்க்க முடிகிறது.

கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால், நம்முடைய இரண்டு கண்களையும் கொண்டு ஒரு நேரத்தில் ஒரே பொருளைத்தான் பார்க்க முடியும். இரண்டு கண்களும் இரண்டு வெவ்வேறு பொருட்களை ஒரே நேரத்தில் பார்க்காது. பார்க்கவும் முடியாது. ஆனால் முயல் போன்ற விலங்கினங்களால் இது முடியும்.

முயலால் தன்னுடைய இரண்டு கண்களாலும், இரண்டு வெவ்வேறு திசைகளைப்பார்க்க முடியும் எனவே தான் கண்களைச் சுழற்றாமலே நான்கு திசைகளையும் அது கண்காணிக்கிறது. அப்படியென்றால் முயலின் இரண்டு கண்களும், நான்கு கண்களுக்கு சமம் தானே! முயல் போன்ற விலங்குகளுக்கு கண்கள் முகத்தின் பக்கவாட்டில் இருப்பதால் இது சாத்தியமாகிறது.முயல் தன் தலையைத் திருப்பாமலே தனது விரிவான பார்வைப்புலம் மூலம் முன்னால் நடப்பதையும், பின்னால் நடப்பதையும் பார்க்கிறது.


அதாவது, முயல் தன்னுடைய ஒரு கண்ணை 180 டிகிரி வரை திருப்பி முன்னாலும், பின்னாலும் பார்க்கும்.ஆஹா... அற்புதம்! மனிதர்களுக்கும் கண்கள் இப்படிப் படைக்கப்பட்டிருந்தால் எப்படி இருக்கும்?நிச்சயமாக நன்றாக இருக்காது! ஏன் தெரியுமா..?

முயல் ஒவ்வொரு கண்ணையும் 180 டிகிரி வரை திருப்பினாலும், இரு கண் இணக்கப் பார்வை என்பது முயல் போன்ற விலங்கினங்களுக்கு வாய்க்காமல் போய்விடுகிறது. இரண்டு கண்களின் பார்வைப் புலமும் ஒரு புள்ளியில் ஒன்றினால்தான் ஒரு பொருளின் முப்பரிமாண வடிவம் நமக்கு பார்க்கக் கிடைக்கும். இல்லையென்றால் எந்த ஒரு பொருளும் அரைகுறையாகத்தான் தெரியும்.முயல் போன்ற விலங்கினங்களின் இரு கண்களின் பார்வைப்புலமும் ஒரு புள்ளியில் ஒன்றிணைவதில்லை. அதுபோலவே முயலின் முகத்திற்கு மிக அருகில் நேர்கோட்டில் இருக்கும் பொருளை முயலால் பார்க்க முடியாது.

தலையைத் திருப்பித்தான் பார்க்க முடியும்.

கண்களுக்குள் இத்தனை விடயமா? என் கண்களையே என்னால் நம்ப முடியவல்லையே என்று ஆச்சரியப்படுகிறீர்களா? முடிந்தால் முயலுக்கு நேர் எதிரில், அதற்கு மிக அருகில் நின்று கொண்டு செல்ஃபி எடுத்துக் கொள்ள முடியுமா?என்று பாருங்கள்... (செ-12)

# நம்பினால் நம்புங்கள்





❖ பூமி சூரியனை ஒருமுறை சுற்றி வர 365 நாட்கள் மட்டுமல்ல... கூடுதலாக 6 மணி நேரமும் ஆகிறது. அதனால் தான் கிரிகோரியன் கலண்டரில் லீப் தினம் உருவாக்கப்பட்டது!



❖ 1868 இல் ஹவாய் தீவில் நடந்த மாபெரும் நிலநடுக்கத்தின் 'பின் அதிர்வுகள்' இன்றும் கூட உணரப்படுகின்றன.


❖ எஸ்டோனியாவில் 2011 தேர்தலின்போது 24 சதவீத வாக்குகள் இணையம் மூலமாகவே பதிவு செய்யப்பட்டன. இதற்கு ஏற்ப அந்நாட்டு மக்களின் அடையாள அட்டையில் சிப் பொருத்தப்பட்டுள்ளது. ஆவணங்களில் கையெழுத்திடவும் இந்த சிப் அட்டையைப் பயன்படுத்தலாம்.







❖ மற்ற எந்தத் தலைவர்களையும் விடவும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கே டுவிட்டர் ஃபாலோயர்கள் அதிகம்.

❖ 2008 இல் அமெரிக்காவில் நடந்த ஒரு சூறாவளியைத் தொடர்ந்து, அங்குள்ள மிருகக்காட்சிச்சாலையில் ஒரு குரங்கு இரு வெள்ளைப்புலிக் குட்டிகளை வளர்த்து வருகிறது!



❖ அமெரிக்காவின் கிராண்ட் கேன்யான் விண்கல் பள்ள விளிம்பிலிருந்து, 55 பேர் கீழே விழுந்து உயிரிழந்திருக்கிறார்கள்.



❖ உயர் ரக வாசனைத் திரவியங்களில் இடம்பெறும் மஸ்க் எனும் கஸ்தூரி வாசனை, அந்த விலங்கிலிருந்து சுரக்கும்போது சிறுநீரின் மணமே வீசும்!

❖ எதிரிகளிடமிருந்து ஒருவரை ஒருவர் பாதுகாப்பதற்காக வரிக்குதிரைகளும் நெருப்புக்கோழிகளும் கூடிய வரை ஒன்றாக வாழ்கின்றன. நெருப்புக்கோழிக்கு சிறப்பான பார்வைத்திறன் உண்டு. வரிக்குதிரைகளுக்கு நல்ல கேட்கும் திறன் உண்டு. அத்தோடு, அபாயத்தை நன்கு உணர முடியும்.




❖ அப்போலோ 10 விண்கலத்தில் பயணித்த விண்வெளியியலாளர்கள், நிலவின் இருள் சூழ்ந்த பகுதியில் இனம்புரியாத ஓர் இசையைக் கேட்டதாகச் சொல்கிறார்கள்.



❖ ஒரு சராசரி அமெரிக்கக் குடிமகன், உணவுக்காக மட்டுமே ஆண்டுக்கு 5 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவிடுகிறான்.

# கடி கடி







### சமாளிப்பு

ஒவ்வொரு முறையும் கைபேசி எடுத்து உன்னிடம் பேச வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். பிறகு தான் நினைவுக்கு வருகிறது பலன்ஸ் இல்லை என்று.



### செய்தி



•வரும் தேர்தலில் வெற்றி பெற்று மக்கள் நலக்கூட்டணி ஆட்சி அமைக்கும்-வைகோ.

•தனியாக நின்று 150 தொகுதிகளில் ஜெயிப்போம் -ராமதாஸ்


# இத்துடன் விளையாட்டுச் செய்திகள் முடிவடைந்தன.

### தப்பு சண்டை

தான் செய்த தப்பை மறைக்க சண்டை போடுபவர்கள் ஆண்கள். தான் செய்தது தப்பே இல்லை என்று சண்டையிடுபவர்கள் பெண்கள்!



### யாசகர்கர்



வீதியில் இடை மறிக்கும் யாசகர்களை எளிதில் கடந்து விடுகிறேன் ... இந்த பொலிஸ்காரர்களைத் தான்!!!

# ...க்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள

# ...வ ஒட்டிய மணிவிழா வாழ்த்து

- கல்விக் காருண்யன்
- இறைபணி வேந்தர்
- சைவப்புரவலர்
- கல்விக் கதிரவன்
- சமூகமாமணி
- ...ான்
- ஈகைக்காவலன்
- ஈகையார் திலகம்

...பல வியாபார நிறுவனங்களுக்கு முன் உதாரணமாக திகழ்ந்து பலரையும்
...ர்ந்து தன்பால் ஈர்த்து அவர்களையும் சிறப்பாக வாழ வழிசமைத்து கொடுத்து
...ரவணைத்து செல்லும் பல பட்டங்கள் பெற்று கற்க கசடற கற்றவை கற்றபின்
...நிற்க அதற்குத்தக என்ற வாக்கியத்தை மகுடமாக்கி பெற்ற பட்டங்களுக்கு
பெறுமதி சேர்த்து தொடர்ந்தும் பல சேவைகள் செய்து வரும் பெரியார்
இ.ச.பே.நாகரத்தினம் அவர் தம் குடும்பத்தவர்களுடன்
பல்லாண்டு வாழ்ந்து பணியாற்ற மணிவிழா சிறக்கவும்
வல்லிபுரத்தாழ்வார் மாயவர் தம் பொற்பாதம்
பணிந்து யாசிக்கின்றோம்


**RAINBOW TILES STORES**



றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பெயின்ற்வகைகள், மாபிள்வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி பைப்வகைகள்,
கட்டடப்பொருட்கள், விவசாய மருந்து
வகைகள், துவிச்சக்கரவண்டி உதிரிப்
பாகங்கள் மற்றும் மின்சார பொருட்கள்
T.P: 021 226 2696, 077 869 5418
Reg : VADA/N/B.C/562
Point Pedro Road, Silaiaddy, Manthikai.

**GURUNATHAR HARDWARE STORES**
Regd. No:KVD 209
V.K.V
T.P. : 077 365 5590
V.V.T.Road Uduppiddy



**EMERALD HARDWARE STORES**
T.P.No: 021 226 3468
Jaffna Road, Uduppiddy.

**JEGA MOTORS**
ஜெகா மோட்டோர்ஸ் ஹாட்வெயர்
Dealers in : Electrical Goods, Paint & Electrical Contractors
T.P. & Fax : 021 226 3383
Main Street, Mathavady, Valveddy

**V.Manoharan**
Bicycle, Petrol max, Building Materials, PVC Pipes, Paints, Ceremics, Electric Goods Merchant
RegdNo:VADA/N/BR 01
Chavakachcheri Road, Manthikai, Puloly T.P: 021 226 4192

**Raajan Hardware Stores**
Hardware Merchants, Building Materials, Tokyo Cement, Nippon Cements, Rhino Roofing Products, P.V.C.Pipes & Paints Items.
407, Main Street, Pointpedro
T.P:021 226 4327

**சுதா றேட் சென்ரர்**
Sutha Trade Centre
கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
T.P: 021 300 1878

**GANESAN HARDWARE**
கணேசன் ஹாட்வெயர்
பிரதான வீதி,நெல்லியடி
Main Street, Nelliady
T.P : 021 226 3290

**மருதம் இரும்பகம்**
MARUTHAM IRON WARE STORE
நெ.ம.ம.வி.தெரு, நெல்லியடி, கரவெட்டி,
N.M.M.V.Road, Nelliady, Karaveddy,
Dealers in CIC Paints & Lanka walltiles
Reg.K.V.D.001

**RAGULASOORIYAN**
357, Main Street, Point Pedro

**அம்சன் ஒளியகம்**
இல.187, பிரதான வீதி, நெல்லியடி
தொ.பே: 021 226 1568, 077 674 9411

# வாசல் இல்லாத வேலி



சிறுகதை

அந்தி வானத்தை மெது மெதுவாக இருள் கவ்விக் கொள்ள மாசி மாதத்துப் பனிப்போர்வைக்குள் பூமாதேவி தன்னை அடைக்கலமாக்கிக் கொண்டாள். கருமுகிற் கூட்டத்தின் நடுவே நிலாமகள் பவனிவர ஆரம்பித்தாள்.

வீட்டின் பின்புறத்து வாசலில் சாந்தி சோகமே உருவாக அமர்ந்திருந்தாள். ஆற்றாமை என்னும் வடு அவளுள்ளத்தை அரித்து ரணகளமாக்கிக் கொண்டிருந்தது. வாழ்க்கை என்பது போராட்டம். அவள் செவிகளில் அந்த வார்த்தை பலமுறை விழுந்திருக்கிறது.

நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்த அவளுக்கு வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளைப் புரிந்துகொள்ள அவகாசம் இருக்கவில்லை. தானுண்டு தன் படிப்புண்டு எனக் காலத்தை பெற்றோரின் அனுசரணையால் சுமுகமாகக் கழித்தவள், பல்கலைக்கழகம் வரை சென்று பி.எஸ்.ஸி. பட்டதாரியாகினாள். அவளது சொந்த ஊரிலேயுள்ள பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரியும் வாய்ப்பும் கிடைத்துவிட அவள் எந்தவித சலனமுமின்றி · வாழ்க்கையை தெளிந்த நீரோட்டமாகவே அனுபவித்தாள்.

அந்தத் தெளிந்த நீரோட்டத்தில் முன்பின் தெரியாத ஒருவரை கணவன் என்ற பந்தத்திற்குள் திணித்து வைத்துவிட்ட திருப்தியில் பெற்றோர் நிம்மதியடைந்தனர். அவளுக்கும் அந்த இல்லற வாழ்க்கை மிகவும் பிடித்திருந்தது. அவன் கண் நிறைந்த கணவன் மட்டுமல்ல அவள் நெஞ்சத்திலும் நீக்கமற நிறைந்திருந்தான். இளமையின் நளினத்தால் ஈர்க்கப்பட்ட அந்த நாட்களின் நினைவுகளை ஒரு கணம் மீட்டுப் பார்த்தாள். எப்படியிருந்தவர் இப்படி மாறிப் போய்விட்டார். ம்...

சே!... என்ன உலகமிது.என்னுடைய வாழ்க்கையில் எல்லாம் நல்லபடியாகத்தானே போயிற்று. அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான பின்னரும் அவர் நல்லபடியாகத் தானே நடந்து கொண்டார். பிள்ளைகள் மீது உயிரும் பிராணனுமாய் பாசத்தை அள்ளிச் சொரிந் தார். என்னுடைய வாழ்க்கை யில் பிரச்சினை எங்கேயிருந்து ஆரம்பமாகியது என்று அவளது உள்மனம் கணக்குப் போடத் தொடங்கியது.

அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கு இருவருமே சேர்ந்து விண்ணப்பித்தார்கள். இருவரும் ஒன்றாகவே உந்துருளியில் பரீட்சை நிலையத்திற்குப் போனார்கள். அதே பரீட்சையைத்தான் இருவரும் எழுதினார்கள். காலம் கடந்தது. அவர்களுடைய குடும்ப வாழ்க்கை கலகலப்பாகவே போய்க் கொண்டிருந்தது. பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. சித்தி யெய்தியவர்களில் சாந்தியும் ஒருத்தி. அவர்களுடைய அந்நியோன்னியமான குடும்ப வாழ்க்கையில் முதன்முதலாய் கறைபடிந்த காலப்பகுதி அதுதான்.

நாளடைவில் உப அதிபராகப் பதவியுயர்வு பெற்ற மனைவியை குமரேசன் கூசிய கண்களோடு ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்தான். தானாகக் குடும்பத்தை விட்டு விலகி நடக்க ஆரம்பித்தான். அப்பா அப்பா என வாஞ்சையோடு அழைக்கும் குழந்தை களை உதாசீனப் படுத்தினான். தாழ்வு மனப்பான்மை எனும் வித்து அவனது மனதில் ஆழ வேரூன்றி விட்டதை சாந்தி உணரத் தவறிவிட்டாள். பாடசாலை வேலைகள், குடும்பப் பொறுப்பு, பிள்ளைகளின் கல்வி என அவளது கவனம் அவற்றில் முற்றாக லயித்திருந்ததே காரணம்.

சில சமயங்களில் குமரேசன் வீட்டில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி இதைக்கவனிக்க உமக்கு எங்கே நேரம் இருக்கிறது என்று குத்தலாகக் கூறினாலும் அவளுக்கு அது புரிவதில்லை. ஓமப்பா நீங்கள் சொல்லுறது உண்மைதான். எனக்கு வேலையில பொறுப்புகள் கூடினதால எல்லாத்தையும் கவனிக்க் முடியுதில்ல. சரியாய்த் திண்டாடுறன்.

உமக்கு முடியாவிட்டால் வேலையை றிசைன் பண்ணுறதுதானே. அதைவிட்டிட்டு வீட்டையும் பிள்ளையளையும் ஒழுங்காக் கவனிக்காம என்ன வேலை வேண்டிக் கிடக்கு.

சாந்திக்கு கணவனின் உள்ளக் கிடக்கை இப்போதுதான் புரிந்தது. வேலையை விட்டு விடுவதென்பது அவ்வளவு சுலபமான விடயமாக அவளுக்குத் தோன்றவில்லை. பிள்ளைகள் இருவரும் பெண்கள்தானே. அவர்களையும் படிக்கவைத்து இந்தச் சமுதாயத்தில் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்பதே அவளது உள்ளார்ந்த நோக்கமும் ஏன் இலட்சியமும்கூட. தன் னையே அளவுகோலாய் வைத்து பெண்மையின் நிலையைக் கணக்கிட்டுக் கொண்டாள். பெண்மை வாழ்க எனப் பாடிய பாரதியை ஒரு கணம் நினைத்து வேதனையடைந்தாள்.

போரினால் பாதிக்கப்பட்ட ஒரு இளம் விதவையை சமையலுக்கு அமர்த்தினாள். இதனால் தனக்கு ஓய்வு கிடைக்கும் என்ற எண்ணத்தை விட அவளுக்கும் அந்தச் சொற்ப வருமானம் உதவியாக அமையும் என்பதே நோக்கம். அவளும் ஒரு பெண்ணாயிற்றே.

நாட்கள் சில நகர்ந்தன. குமரேசன் தினமும் சமையலில் குறை கண்டுபிடித்து வாக்குவாதப்படுவது சகஜமாயிற்று. சாந்தி ஒருமாதம் பொறுத்துப் பார்த்தாள். குமரேசன் சமையல் சரியில்லை எனக் கூறிச் சாப்பாட்டைப் புறக்கணிக்கத் தொடங்கினான். அவனைத் திருப்திப்படுத்துவதற்காக சாந்தி அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து சமைத்து வைத்துவிட்டுப் பின்னர் காலை ஆகாரத்தையும் செய்து முடிப் பாள்.

மாலையில் வேலையால் வந்த பின் புறவேலைகளைக் கவனித்துவிட்டு இரவு ஆகாரத்தைத் தயாரித்து சூடாகப் பரிமாறுவாள். இப்படியாக கணவனின் நச்சரிப்பிலிருந்து ஒருவாறு அவள் தப்பித்துக்கொண்டாலும் அவன் ஏதாவது குறைபிடித்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவான். முடிந்தளவில் அவள் பொறுமையைக் கடைப்பிடித்து தன்னுள் மறுகுவாள். இன்றைய பொழுது நடந்த வாக்குவாதத்தில் அவனது கர்ஜனைக் குரல் இன்னமும் அவளது காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன.

என்ன வீக்கெண்டுக்கு டூர் போகப்போறியளோ. எந்த நேரமும் உனக்கு ஸ்கூல் அக்றிவிற்றீஸ் பற்றித்தான் சிந்தனை. இஞ்சை வீட்டில வயது வந்த பொம்பிளைப் பிள்ளையளைத் தனிய விட்டிட்டு உனக்கு டூர் கேக்குதோ.

இன்று சாந்தியாலும் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. கேட்டுவிட்டாள் ஏன் உங்களுக்கும் பிள்ளைகள் தானே. ரெண்டு நாளைக்கு அதுகளுக்குப் பாதுகாப்பாய் இருக்க முடியாதோ?

ஓஹோ... உன்ரை திமிர் அந்தளவுக்கு ஏறிவிட்டுதோ.. சொல்லிப்போட்டன. நீ ரூருக்குப் போகமுடியாது. என்ரை சொல்லை மிஞ்சி அப்பிடிப்போறதெண்டால் ஒரேயடியாய் வீட்டை விட்டுப் போயிடு. பீடை தொலைஞ்சிதெண்டு நான் தலைமுழுகிப் போட்டு நிம்மதியாய் இருக்கிறன்.

அநாவசியமாகத் தன்னைச்சாடிய கணவனின் சுடு சொற்களை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. பாடசாலையில் அதிபர் அவளையே பொறுப்பாக நின்று மாணவர்களை மலையகத்திற்கு சுற்றுலா கூட்டிச் செல்லப் பணித்திருந்தார். வேறு மூன்று ஆசிரியர்களும் உடன் வருவதாக ஏற்பாடு. அதிபரின் சொல்லை மீற முடியாதவளாய் அவள் அதற்கு ஒப்புக் கொண்டிருந்தாள். நிலைமை இப்படி இக்கட்டாக அமையுமென அவள் கடுகளவும் நினைத்திருக்கவில்லை.

பெண்கள் சுயமாக முடிவெடுக்க முடியாத அளவிற்கு ஆணாதிக்கம் அங்கே தாண்டவமாடுகிறது. இதுதான் நிதர்சனம். இந்த உண்மையை உளமாரப் புரிந்து கொண்டவள் தன் மனக்குழப்பத்திற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென அங்கலாய்த்தாள். தனது இரு பெண் பிள்ளைகளதும் எதிர்காலத்தைப் பற்றி நீண்ட நேரம் சிந்தித்தாள். நான் எடுக்கும் முடிவினால் அவர்களுடைய வாழ்க்கையில் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது. பெண்ணுரிமை, பெண் விடுதலை என்பதெல்லாம் வாய்ப் பேச்சளவில்தான். ஆணுக்குப்பெண் அடங்கி வாழவேண்டும். அவள் எவ்விதத்திலும் தன்னை மிஞ்சிவிடக் கூடாது என்பதே பெரும்பாலான ஆண் வர்க்கத்தின் நோக்கமாகும். அதேசமயம் பெண் விடுதலையை வரவேற்கும் ஆண்களும் மிக அரிதாக இந்தச் சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். எனது கணவரைப்போல் தாழ்வு மனப்பான்மையால் உந்தப்பட்டு மனைவியின் மனநிலையைப் புரி ந்து கொள்ளமுடியாமல் போகும் போதுதான் குடும்பத்தில் பிரிவுநிலை ஏற்பட வாய்ப்பாகிறது. இந்தச் சிந்தனை சாந்தியை நிமிர வைத்தது.

நான் அப்படியொரு நிலை ஏற்பட அனுமதிக்க முடியாது. என்ன நிலை வந்தாலும் நான் வளைந்து கொடுத்து என் குடும்பத்தைக் குலைய விடாமல் சீரான பாதையில் இட்டுச் செல்வேன். திடசங்கற்பம் பூண்டு கொண்டவளின் மனக்குழப்பம் சற்றுத் தீர்ந்து ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண சுமுகமான வழியை ஆராயத் தொடங்கியது.

விளைவு அலைபேசியை எடுத்தவள் அதிபருடன் தொடர்பெடுத்தாள். ஸாரி மேடம் இருந்தாப்போல எனக்கு வாந்தியும் வயிற்றோட்டமும் ஏற்பட்டு எழும்பி நடக்கேலாத அளவுக்கு ஒரே தலைச்சுற்றாய் இருக்குது. அதுதான்... என்று இழுத்தவள்... ஐ ஆம் எக்ஸ்றீம்லி சொறி.பிளீஸ் மேடம்.

சொன்ன பொய்யினால் மனம் குறுகுறுத்தாலும் அது சற்று நிம்மதியடைந்தது. தாலி பெண்ணுக்கு வேலி என்பார்கள். ஆனால் சாந்திக்கோ அது வாசல் இல்லாத வேலியாகிவிட்டது. வாழ்க்கையெனும் போராட்டத்தில் கண்ணியமான பெண்கள் தமது பிள்ளைகளின் நலனுக்காக எடுக்கும் முடிவுகள் இப்படித்தான் இருக்கும். வேலைக்குப் போய் வீட்டையும் கவனித்து இரட்டை உழைப்பாளிகளாக தன்னையே உருக்கி குடும்பத்தை மேம்படுத்துகிறாள் பெண்.

கணவனது முன்னே ற்றத்தைக் கண்டு பெருமையடையாத பெண்களே கிடையாது.

ஆனால்... மனைவி தன்னைவிட உயர்நிலையில் இருப்பதை பெரும்பாலான கணவர்கள் சகிக்கமுடியாதவர்களாய் தங்களது ஆணாதிக்கத்தைப் பிரயோகிக்கவே செய்கிறார்கள்.

இன்றைய சமூகத்தில் இந்நிலை மாறுவது எப்போது? ஆணுக்குப் பெண் நிகர் என்பது வாய்ப் பேச்சளவில் மட்டும் தானா? ஆற்றாமை தந்த விரக்தியினால் வெந்து மருகினாள் சாந்தி.

மலரன்னை

# மிகக் குறுகிய காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான 65,000 வீட்டுத்திட்டம்



## 65,000 வீடுகள்:-

சர்வதேச நியமங்களுக்கு அமைவான, சூழல் மற்றும் சமூக அங்கீகாரத்துடன் கூடிய வசதியான இவ்வீடுகள் உலகின் பெயர்பெற்ற முன்னணி நிறுவனத்தின் ஊடாக மிகக் குறுகிய கால எல்லையில் இவ் அமைச்சின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் தேவை கருதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

## அமைப்பு:-

வசிப்பிட அறை, சமையலறை, தனியான கழிவறை மற்றும் இரு அறைகளுடன் கூடிய 550 சதுரஅடி கொண்ட வீடுகள்.

## வசதிகள்:-

- சூரியக்கல மின்சார வசதி.
- கட்டில்கள் உட்பட வீட்டுத் தளபாடங்கள்.
- தொலைக்காட்சி, வாயு அடுப்பு, வலைப்பின்னல் தொடர்பு (Wifi)
- குழாய் நீர்க்கிணறு.
- சூழல் வெப்பத்தைவிட 3-5 பாகை செல்சியஸ் குறைவான சௌகரியமான வசிப்பிட சூழல் கொண்ட வீடுகள்.

## அழைப்பு:-

ஒஸ்கா ஒழுங்கை, செல்வபுரம், பலாலி வீதி உரும்பிராய், தெற்கு கோப்பாயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மாதிரி வீட்டினை பார்வையிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

# உலகக் கிண்ணத்தில் நடப்பு சம்பியன்

# இலங்கையின் நிலை என்ன?

3 முறை இறுதிப்போட்டிக்கு நுழைந்த ஒரே அணி இலங்கை ஆகும். இதில் கடந்த தடவை (2014) சம்பியன் பட்டம் பெற்றது. இறுதிப்போட்டியில் இந்தியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி உலககோப்பையை கைப்பற்றியது. 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானிடமும், 2012 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளிடமும் தோற்று கோப்பையை இழந்தது.


நடப்பு சம்பியனான இலங்கை அணி தற்போது திணறி வருவதால் பட்டத்தை தக்க வைத்து கொள்வது என்பது மிகவும்கடினமே. உலகின் தலை சிறந்த வீரர்களான சங்கக்கார, ஜெயவர்த்தனே ஆகியோரது ஓய்வுக்கு பிறகு அந்த அணி பலவீனப்பட்டு காணப்படுகிறது.

இலங்கை அணி சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பையில் வங்காளதேசத்திடம் அதிர்ச்சிகரமாக தோற்றது. இதேபோல இந்தியா, பாகிஸ்தானிடம் தோற்று இருந்தது. நியூசிலாந்து, இந்தியாவுக்கு எதிரான 20 ஓவர் தொடரையும் இழந்து இருந்தது. கடைசியாக விளையாடிய 8 ஆட்டத்தில் அந்த அணி 2 போட்டியில் மட்டும் வெற்றி பெற்றது.

அந்த அணியின் தலைவர் மலிங்கா கடைசி நேரத்தில் பொறுப்பில் இருந்து விலகி இருப்பது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. காயத்தில் இருக்கும் அவர் ஆசிய கோப்பை தோல்வி காரணமாக தலைவர் பதவியில் இருந்து வெளியேறினார்.



மத்யூஸ் தலைமையிலான இலங்கை அணியில் தில்சான், சண்டிமால், திரிமானே, கபுகேந்திரா, திசாரா பெரைரா, குலசேகரா, ஹெராத் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். தில்சான் 1751 ஓட்டங்கள் எடுத்து (71 ஆட்டம்) சர்வதேச அளவில் 20 ஓவர் போட்டியில் 2 ஆவது இடத்தில் உள்ளார். இதில் 12 அரை சதம் அடங்கும். மேலும் பவுண்டரிகள் அடித்ததில் முதலிடத்தில் (209) உள்ளார். மத்யூஸ் 862 ஓட்டங்கள் எடுத்து இருக்கிறார்.





மலிங்காவின் காயம் அந்த அணியின் பந்துவீச்சில் பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் 78 விக்கெட் கைப்பற்றி இலங்கை வீரர்களில் முதல் இடத்திலும், சர்வதேச அளவில் 4 ஆவது இடத்திலும் உள்ளார். ஆசிய கோப்பையில் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே விளையாடிய அவர் உலககோப்பை ஆட்டத்திற்கு உடல்தகுதி பெற்றுவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் தகுதி சுற்று அணி இடம்பெற்றுள்ள 'குரூப் 1' பிரிவில் இலங்கை உள்ளது. இதுவரை நடந்த 5 உலக கோப்பையில் அந்த அணி 2009 இல் இருந்து தொடர்ந்து 4 முறை அரை இறுதிக்கு நுழைந்து இருந்தது.

ஆனால் இந்த முறை அரை இறுதியில் நுழைவது இலங்கைக்கு சவாலானதே. (க)


# சாதிக்குமா நியூசிலாந்து




சிறந்த வீரர்கள், அமைதியான வீரர்கள், வசை சொற்கள் வீசாத ஜென்டில்மேன்கள், அதிரடியும் ஆக்ரோஷமும் கொண்டவர்கள், சிக்ஸர் பிரியர்கள், ஆவேச வேகப்பந்து வீச்சாளர்கள் என உலகின் ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் அணி, நியூசிலாந்து. கோப்பையை வெல்வதற்கு தகுதியான அணி என ரசிகர்களும், முன்னாள் வீரர்களும் நியூசிலாந்துக்கு ஒவ்வொரு உலகக் கோப்பையிலும் ஆதரவு தெரிவித்தாலும், ஒருமுறை கூட ஐ.சி.சி உலகக்கோப்பை, சம்பியன்ஸ் கோப்பை, இருபது-20 உலகக் கோப்பை ஆகியவற்றை நியூசிலாந்து வென்றதே இல்லை.

பிரண்டன் மக்குல்லம், ஷேன் பாண்ட், டேனியல் வெட்டோரி என கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னராக திகழ்ந்த பல வீரர்களை நியூசிலாந்து உற்பத்திசெய்திருக்கிறது. ஆனால், ஓர் அணியாக சேர்ந்து ஏன் கோப்பையை வெல்லமுடியவில்லை என்பதன் இரகசியம் இன்னும் நியூசிலாந்துக்கே பிடிபடவில்லை. நியூசிலாந்து அணிக்கு பிளஸ், மைனஸ் எல்லாமே சொந்த ஊர் ஆடுகளங்கள் தான். சொந்த ஊரில் எந்த போட்டி நடந்தாலும் அதிரடி அபார வெற்றிகளை குவிக்கும் நியூசிலாந்து அணியால், மற்ற நாடுகளில் உள்ள பிட்சில் விளையாடும் போது சிங்கிள் வெற்றிக்கே தடுமாறுகிறது. இதுதான் வரலாறு. ஆனால், இந்த வரலாற்றை கொஞ்சம் அசைத்து பார்த்தார் பிரண்டன் மக்குல்லம். கடந்த இரண்டு வருடங்களாக பிரண்டன் மக்குல்லம் தலைமையில் அயல் நாடுகளில் போட்டிகளை வெல்ல ஆரம்பித்துள்ளது நியூசிலாந்து அணி.

கடந்த ஆண்டு ஒருதின உலகக் கோப்பையில் மிகவும் அக்ஸ்ரசிவ் மனப்பான்மையுடன் வியூகங்களை வகுத்து; அதிரடியாக இறுதிக்கு நுழைந்தது நியூசிலாந்து அணி. நல்ல மைதானமான மெல்பேர்னில் முதலில் பட்டிங் பிடித்தது நியூசிலாந்து. முதல் ஓவரில் மக்குல்லம் அவுட்டாகும்போதே நியூஸியின் கையில் இருந்து கோப்பை நழுவ ஆரம்பித்துவிட்டது. அவுஸ்திரேலிய மண்ணுக்கு ஏற்றவாறு, எதிரணியை பொறுத்து சிலநேரம் வியூகங்களை மாற்றி விளையாடினால் தான் வெற்றி பெற முடியும். ஆனால், வலுக்கட்டாயமாக ஒரே பார்முலாவை கடைப்பிடித்து விளையாடியதால் நியூசிலாந்து அணி தோல்வியை தழுவியது. உலகக் கோப்பைக்கு பின்னர் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா சுற்றுப்பயணங்களில் சிறப்பாகவே விளையாடியது நியூசிலாந்து. அதன் பின்னர் இலங்கை, பாகிஸ்தான் அணியை சொந்த ஊரில் வறுத்தெடுத்தனர் நியூசி வீரர்கள்.




நியூசிலாந்து அணியில் தற்போது பிரண்டன் மக்குல்லம் இல்லை. அவரது திடீர் ஓய்வு காரணமாக சற்றே சில படிகள் பின்னிறங்கி உள்ளது நியூசிலாந்து அணி. இருபது-20 போட்டிகளை பொறுத்தவரையில் நியூசிலாந்து எப்படி விளையாடும் என யாராலுமே கணிக்க முடியாது. திடீரென்று இரண்டு வீரர்கள் அடுத்தடுத்து வேகமான அரைச் சதம் அடித்து சாதனை படைப்பதும், சில சமயங்களில் இரண்டு விக்கெட் விழுந்துவிட்டால் படுத்தே விடுவதும் நியூசிலாந்து அணியில் மட்டுமே நடக்கும்.

நியூசிலாந்து அணியில் மரண ஹிட்டர்கள் இருக்கின்றனர். குப்டில், முன்ரோ, கோரே அண்டர்சன் ஆகியோர் பக்கா இருபது-20 ஸ்பெஷலிஸ்ட்கள். பட்டிங்கில் நியூசிலாந்து அணி பக்கா மாஸ் காட்டினாலும், பவுலிங்கில் வீக்தான். இந்திய பிட்சகளை கருத்தில் கொண்டு அணியில் இஷ் சோதி எனும் சுழற்பந்து வீச்சாளரை அணியில் சேர்த்திருக்கிறார்கள். சோதி யார் தெரியுமா? இந்திய மண்ணில் பிறந்தவர் தான். பஞ்சாபில் பிறந்து பின்னாளில் நியூசிலாந்தில் செட்டிலாகிவிட்டார். நியூசிலாந்து அணி மலை போல இஷ் சோதியை நம்பியிருக்கிறது. இருபது-20 உலகக் கோப்பைகளில் நியூசிலாந்து அணி இதுவரை அரையிறுதியை தாண்டியதில்லை. பெரும்பாலான சமயங்களில் அரையிறுதிக்கு கூட தகுதி பெற்றதில்லை. இந்திய பிட்ச்களில் பெங்களூருவை தவிர மற்ற அனைத்து பிட்சும் சற்று பெரிதாகவே இருக்கும். நியூசிலாந்தில் குட்டி பிட்ச்களில் விளையாடி பழக்கப்பட்ட வீரர்களால், இந்திய மண்ணில் ஜொலிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

கேன் வில்லியம்சன் தற்போது முழு நேர கப்டனாகிவிட்டார். இளம் வீரர் வில்லியம்சன் இந்திய மண்ணில் சிறப்பாக விளையாடக்கூடியவர். வில்லியம்சன் மட்டுமே நியூசிலாந்து அணியில் நிலைத்து நின்று பொறுப்பாக விளையாடும் ஒரே வீரர். கேன் வில்லியம்சன் உலகின் சிறந்த துடுப்பாட்டக்காரர்கள் பட்டியலில் இடம்பெறுவதற்கான தகுதியை அடைந்துவிட்டாலும், தற்போது கூடுதலாக கொடுக்கப்பட்ட கப்டன் பொறுப்பை இனி வில்லியம்சன் எப்படி எதிர்கொள்ளப் போகிறார் என்பதை பார்ப்போம். பல ஆண்டுகளாக கிடைக்காத உலகக்கோப்பை எனும் கனியை, இம்முறை வில்லியம்சன் நிச்சயம் நியூசி மண்ணுக்கு எடுத்து வருவார் என எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

# facebook

## மகனின் அறிவுரை



சிறப்பு தரிசனம் போயும் சாமிய சரியா பார்க்க முடியலை யேங்க. எவ்வளோ கூட்டம்...! என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே வருத்தத்தோடு சொன்னாள் மேகலா. உண்டியலில காசு போடுற இடம் கூட ஒரே கூட்டம். நல்ல வேலை நம்ம போடணும்னு நினைச்ச காசை கஷ்டப்பட்டு போட்டுட்டேன் என்று அவர் பங்குக்கு பேசினார் கார்த்தியின் அப்பா.

மொத்தம் 7 பேர் இருந்தார்கள் காரினுள் அவர்களின் உறவினர்கள் 4 பேரையும் சேர்த்து. இவர்கள் அனைவரும் ஒரு புகழ் பெற்ற கோயிலுக்கு சென்று விட்டு வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தார்கள்.

இவர்கள் பேசுறது எதுவுமே காதில் விழாதது போல காரின் ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் கார்த்தி.

ஒரு முதியவர் ரோட்டை கடக்க முடியாமல் திண்டாடுவதை பார்க்கிறான் கார்த்தி...

அப்பா ஒரு நிமிஷம் வண்டிய நிறுத்துங்களேன் என்றான் கார்த்தி.

ஏன்? என்று கேட்க வண்டிய நிறுத்துங்கப்பா ப்ளீஸ் என்று மறுபடியும் சொல்றான் கார்த்தி.

வண்டியை நிறுத்தியவுடன் இறங்கி வேகமாய் ஓடிப்போய் அந்த முதியவரிடம் என்ன ஐயா ரோட்டை கிராஸ் பண்ணனுமா" என்று கேட்கிறான்.

ஆமாம் தம்பி ரொம்ப நேரமா நிக்கிறேன். வண்டியே நிற்க மாட்டது என்று பரிதாபமாய் சொன்னார் தாத்தா .

சரி தாத்தா நான் கிராஸ் பண்ணி விடுறேன் என்று சொன்னான் கார்த்தி.

"சரி தாத்தா மணி 7 ஆக போகுதுஇந்த நேரத்துல எங்க போறீங்க என்று கேட்டான்.

இல்ல தம்பி காலைல இருந்து என் மனைவிக்கு உடம்பு சரி யில்ல அதனால எதாவது காசு கிடைக்குமானு பார்க்க போறேன் நைட்டு சாப்டணும்ல என்று சொன்னார்...

ஓ அப்படியா..! என்று சொல்லிக் கொண்டே "யார்கிட்ட காசு கேக்க போறீங்க" என்று கேட்டவுடன் சிறிது அமைதியாய் இருந்தார் தாத்தா.

ஏன் அமைதியாய் இருக்கிறார் என்று அவர் மாட்டி இருந்த பையை பார்க்கும் போது அவர் பிச்சை எடுக்கிறார் என்பது அவனுக்கு புரிந்தது.

ஒரு நாளைக்கு உங்களுக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கேட்டான் கார்த்தி.

அதற்கு "30 ரூபா விலிருந்து 50 ரூபா வரை கிடைக்கும் தம்பி" என்று சொன்னார் தாத்தா.

சிறிது யோசித்தவன். ஒரு நிமிஷம் இருங்க சொல்லி விட்டு அப்பாவிடம் ஓடினான். அப்பா 200 கொடுங்க" என்றான்.

ஏன்டா" என்று கேட்டார்.

கொடுங்க பா" என்றான்.

நீங்களும் என் கூட வாங்க பா என்றான்.

எங்கடா எதுக்குடா என்று கேட்டார் அப்பா. வாங்க பா ப்ளீஸ்" என்றான் கார்த்தி.

எதுக்குன்னு புரியாமல் அப்பா அவன் பின்னாடியே போறார்.

அவன் அந்த முதியவர் முன்னாடி அப்பாவை கூப்பிட்டு கொண்டு போய் இந்த 200 ரூபாவை அவரிடம் கொடுத்து கொடுக்க சொல்றான்.

"தாத்தா இவர் என் அப்பா உங்கள பத்தி சொன்னதும் வந்தார். இந்தாங்க இந்த காசை வாங்கி கொண்டு போய் ஏதாவது சாப்டுங்க அப்புறம் உங்க மனைவிக்கு ஏதாவது மாத்திரை வாங்கி கொண்டு போங்க என்று சொன்னான் கார்த்தி.

நடப்பதை நம்ப முடியாமல் மெல்லமாய் கை நீட்டினார். கார்த்தியின் அப்பா புரியாமல் காசை கொடுத்தார்.

அதை வாங்கிக்கொண்டு அழுது கொண்டே "நீங்க தெய்வம் சார். நீங்களும் உங்க குடும்பமும் எப்போதும் சந்தோசமா இருக்கணும் சார். ரொம்ப நன்றி தம்பி உங்களுக்கு. நான் வரேன் தம்பி வரேன் சார்" என்று மனசார வாழ்த்திட்டு தாத்தா அவர்களிடம் இருந்து விடை பெற்றார்.

தாத்தா பேச்சைக் கேட்டதும் அப்பா கொஞ்சம் ஆடி போய்விட்டார்.

"நீங்க கோயில்ல கொடுத்த காசுக்கு அந்த தெய்வம் திருப்பி ஏதாவது கொடுக்குமானு தெரியாது பா. ஆனால் இப்ப காசு கொடுத்தீங்களே அவர் கண்ணுக்கு நீங்க தான் பா தெய்வம்.

உதவி தேவைப்படுறவங்களுக்கு தான் செய்யனும் பா அது கடவுளானாலும் சரி" என்று சொன்னான் கார்த்தி.

அப்பாவிற்கு சுரீரென்று உரைத்தது.

அப்பா கார்த்தியை கட்டிப் பிடித்து வாழ்த்தினார்.


நடந்ததை காருக்குள் இருப்பவர்களிடம் சொன்னார் அப்பா. அனைவரும் சந்தோஷப் பட்டார்கள்.

அப்பா தன் மகனை எண்ணி பெருமைப்பட்டுக்கொண்டே கார் ஓட்டத் தொடங்கினார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 660

Search for people, places and things Nagendram Home

### அருள்ராஜ்





### மது



செந்தில் :அண்ணே திமுன்னா தில்லு முல்லு அதிமுன்னா அதிக தில்லு முல்லு ன்னு அண்ணி மீட்டிங்ல சொல்லி இருக்கங்களே தேமுதின்னா தேவையான தை முதலே திருடிடலாம் ன்னு அர்த்தமான்னே கவுண்டமணி : அடேய் என்னை எதிலும் மாட்டிவுட்டுடாதே டா

### சர்மிளா



### நிரோஜா



வாத்தியார், ஸ்டாப் ரூம்ல இருந்து சக மாணவனை பிரம்பு எடுத்துட்டு வர சொல்லி அனுப்பும் அந்த நிமிடங்கள விடவா பேய் படம் திகிலா இருந்துட போகுது.

#பள்ளிக்கால நினைவுகள்

### ராதை



### நிசாந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 24

A.Q.H.M.Ashiqlie
மருத்துவபீடமாணவன்
யாழ். பல்கலைக்கழகம்

1)முதலில் மாரடைப்புதானா என்பதை உறுதி செய்ய பின் வரும் அறிகுறிகள் இருக்கின் றனவா என்பதை கவனிக்க.

➢திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலியானது இடதுபக்க தாடைக் கோ அல்லது இடதுபக்கதோறப்பட் டைக்கோ பரவுவதைப் போன்று உணரல்

➢ வியர்த்தல் /மயக்கம் / வாந்தியெடுத்தல்

2)உடனே அண்மையிலுள்ள வைத்தியசாலைக்கோ/ நண்ப ருக்கோ/ அயல்வீட்டாருக்கோ தொலைபேசி அழைப்பை ஏற் படுத்தி வைத்தியசாலைக்கு செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். நீங் கள் தனியாக வண்டியில் வைத் தியசாலைக்கு செல்ல வேண் டாம்.

3)உங்கள் வீட்டில் aspirin மாத்திரை இருந்தால் அதை கடித்து சாப்பிடவும். அது உங்கள் குருதிக்குழாயில் ஏற்பட்ட அடை ப்பை நீக்கி குருதியோட்டத்தை அதிகரிக்கும். (பவமாத்திரை இருந்தால் நாக்கின் அடியில் வைக்கலாம்)

4) உங்களுக்கு தலைச் சுற்று ஏற்படுமாயின் அது குருதியமுக் கத்தின் குறைவு காரணமாக இருக்கலாம். எனவே நீங்கள் கீழே படுத்து கொள்வதன் மூலம் மூளைக்கு செல்லும் குருதியின் அளவை அதிகரிக்கலாம்.

5) உங்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுமாயின் ஒரு கதிரையில் நேராக உட்கார்ந்து கொள்ளுங்கள். அதன் மூலம் சீரான சுவாசித்தலை பேண லாம். நடக்க முயற்சிக்க வேண் டாம்.

6)உங்களுக்கு மயக்கம் ஏற் பட்டு நீங்கள் உணர்வை இழ ப்பதுபோன்றுதோன்றினால் தீவிரமாக இருமுவதன் மூலம் மயக்கத்தை தவிர்க்கலாம். (cough cpr )

## விரிவடைந்த நாளங்கள் (varicose veins)


காலிலிருந்து குருதியை இத யத்தை நோக்கி கொண்டு செல் லும் மேற்பரப்பு நாளங்களில் ஏற்படும் பிரச்சினையாகும். இதனால் கால் வீங்குதல், காலில் மாறாதபுண்கள் உருவாதல், காலின் நிறம் கறுத்தல், சிறிதாக காலில் காயம் ஏற்படும் போது அதிக இரத்தம் வெளியேறல் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

**இது ஏன் ஏற்படுகிறது?**

எமது காலில் இரு வகையான நாளங்கள் காணப்படுகின்றன. அவையாவன, காலில் மேற்புற மாக செல்லும் நாளங்கள் மற்றும் ஆழமாக செல்லும் நாளங்களா கும். இவை இணைப்பு நாளங்க ளால் இணைக்கப்பட்டிருக்கும்.

பொதுவாக கால் நாளங்களில் குருதி புவியீர்ப்புக்கு எதிராக





இதயத்தை நோக்கி கடத்தப்பட எமது கால் தசை அசைவுகளும் நாளங்களில் காணப்படும் ஒரு திசை புகவிடும் வால்வுகளும் காரணமாகும்.

மேற்பரப்பு நாளங்களிலுள்ள வால்வுகள் செயலிழப்பதாலோ அல்லது மேற்பரப்பு நாளங்களை யும் ஆழமான நாளங்களையும் இணைக்கும் இணைப்புகள் செய லிழப்பதாலோ அல்லது ஆழ மான நாளங்கள் கட்டிபடுவதாலோ மேற்பரப்பு நாளங்கள் வீக்கமடை கின்றன. இதுவே varicose veins என்று அழைக்கப்படுகிறது.

இப்பிரச்சினை பரம்பரையூ டாக கடத்தப்படலாம். சிலவேளை களில் அதிகம் நின்று வேலை செய்பவர்களுக்கு இது ஏற்படு கிறது.

**ஏன் இதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும்?**

➢கணுக்காலில் மாறாத புண் கள் ஏற்படும்.

➢காலில் eczema ஏற்படும்.

➢கீழ்கால்கருநிறமாகமாறலாம்

➢ விரிவடைந்த நாளங்களிலி ருந்து குருதிப்பெருக்கு ஏற்படலாம்.

➢ காலில் அடிக்கடி கிருமித் தொற்றுக்கள் ஏற்படலாம்.

➢காலின் அழகு பாதிக்கப்படும்.

**இதற்கு சத்திரசிகிச்சை தான் செய்ய வேண்டுமா?**

சத்திர சிகிச்சை செய்வது நல்லது. எனினும் சத்திர சிகி ச்சை செய்ய முடியாதவர்களுக்கு வேறு வழிகளிலும் சிகிச்சைய ளிக்கலாம். அவையாவன,

➢ இறுக்கமான bandage அணிதல்.

➢நாளங்களுக்குள் மருந்து ஏற்றல்.

➢சூடு அல்லது கதிர்வீசை பயன் படுத்தி நாளங்களை சிதைத்தல்.

**இறுக்கமான bandage ஐ எவ்வாறு அணிய வேண்டும்?**

➢இவற்றைஉங்கள் காலின் அளவுக்கேற்ப கடைகளில் பெற் றுக் கொள்ளலாம்.

➢இவற்றை நீங்கள் பகலில் வேலைசெய்யும் போது அணிய வேண்டும்.

➢இவற்றை இரவில் கழற்றி வைக்க வேண்டும்.

➢ இதை அணியும் போது கால் விரல் பகுதியிலிருந்து மேல் தொடைப் பகுதிவரை இதை அணிய வேண்டும்.

➢இதை வைத்திய ஆலோச னையின் பின்னரே அணிவது நல்லது, ஏனெனில் காலில் இரத் தோட்டம் குறைந்தவர்கள் இதை அணிந்தால் இது இரத்தோட் டத்தை மேலும் குறைக்கும்.

**நாளங்களுக்குள் ஊசி மருந்து எல்லோருக்கும் ஏற்றலாமா?**

➢இல்லை. மேற்பரப்பு நாள ங்களுக்கும் ஆழமான நாளங் களுக்கும் இடையில் உள்ள இணைப்பில் பிரச்சினை இருப்பின் மாத்திரமே ஊசி ஏற்றலாம்.

➢இதற்கு விறைப்பூசி ஏதும் ஏற்றப்படாது.

➢ சத்திரசிகிச்சை கூடத்தி லேயே ஊசிமருந்து ஏற்றப்பட்டு காலுக்கு bandage இடப்படும்.

➢bandage இட்டபின் நீங்கள் நடக்கலாம். bandage ஒரு கிழ மையின் பின் அகற்றப்படும்.

**varicose நாளங்களுடன் என் காலில் புண் இருப்பின் கடையில் வாங்கி bandage இடலாமா?**

இல்லை,புண்ணில் இருந்து வரும் ஊறல்கள் bandage ஐ பாதிக்கும்.

இதற்கு four layer bandage வைத்தியசாலையில் இடப் படும். இது வைத்தியரின் அறி வுரைக்கேற்ப குறிப்பிட்ட தினங் களுக்கு ஒருமுறை மாற்றப்படும்.

புண் மாறியபின் சத்திர சிகி ச்சை செய்யப்படும்/ நீங்கள் bandage அணியலாம்.

varicose நாளங்களுக்கான சத்திரசிகிச்சை யாருக்கு செய்ய ப்படுகிறது?

➢varicose நாளங்கள்ஸ்கான் பரிசோதனையில் எவ்வாறு தோன்றுகின்றது என்பதை பொறு த்து வைத்தியரே அதை தீர்மா னிப்பார்.

➢bandage முறைமற்றும்ஊசி மருந்து முறை பயனளிக்காவிடின்,

➢ varicose நாளங்கள் பெரிய திரட்சிகளாக காலில் உரு வாகின்,

**நான் varicose சத்திர சிகி ச்சை செய்ய வேண்டுமாயின் இச்சத்திர சிகிச்சைக்கு எப் போது வைத்தியசாலைக்கு வரவேண்டும்?**

சத்திர சிகிச்சை தினத்துக்கு முதல் நாள் காலையிலேயே வந்தால் போதுமானது.

**இச்சத்திர சிகிச்சைக்காக நான் எவ்வாறு தயாராக வேண்டும்?**

➢ உங்கள் கால் மற்றும் அரைப் பகுதியிலுள்ள மயிர்களை அகற்றவேண்டும். இது வைத்தி யசாலையிலேயே செய்யப்படும்.

➢ குளித்து வெள்ளை நிற ஆடை அணிய வேண்டும்.

➢சத்திர சிகிச்சை செய்ய முன் ஆறு மணித்தியாலங் களுக்கு ஆகாரம் உள்ளெடுக்கக் கூடாது.

**இச் சத்திர சிகிச்சைக்கு எவ் வகையான மயக்க மருந்து பாவிக்கப்படும்?**

இடுப்பு பகுதியில் விறைப்பூசி ஏற்றி இடுப்புக்கு கீழே விறைப் பை ஏற்படுத்தி சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்படும்.

**இச்சத்திர சிகிச்சையின் போது வைத்தியர் என்ன செய்வார்?**

➢ முதலில் உங்கள் காலின் அரைப்பகுதியில் வெட்டு இடப்பட்டு உங்கள் மேற்புற நாளத்துக்கும் ஆழமான நாளத துக்கும் இடையிலான இணை ப்பு வெட்டப்படும்.

➢மேற்பரப்பிலுள்ள நாளம் முழங்காலின் கீழ்ப்பகுதி வரை அகற்றப்படும்.

➢முழங்காலுக்கு கீழே உள்ள நாளங்கள் சிறுசிறு பகுதியாக அகற்றப்படும்.

➢பின்னர் காலுக்கு "bandage" இடப்படும்.

**சத்திரசிகிச்சையின் பின் நான் என்ன செய்ய வேண்டும்?**

காலில் விறைப்பு விலகும் வரை நடக்கக் கூடாது. அதன் பின் நடக்கலாம்.

**நான் எப்போது வீட்டுக்கு செல்லலாம்?**

நீங்கள் அன்று பின் நேரமோ அல்லது மறுநாளோ வீட்டுக்கு செல்லலாம்.

**நான் எப்போது வேலைக்கு செல்லலாம்?**

இரண்டு கிழமைக்கு பின் செல்வது நன்று.

**எப்போதுநான் தையல் மற்றும் bandage அகற்ற வரவேண்டும்?**

இரண்டு கிழமையின் பின் வரவேண்டும். bandage இல் திரவங்கள் படக்கூடாது.

bandage இல் ஊறல் இருப் பின்வைத்தியசாலைக்குவரவேண் டும். புதிதாக bandage இடப்ப டும். அவ்வாறு மாற்றா விடில் bandage துர்மணம் வீசும் அதேவேளை சத்திர சிகிகசை பகு தியில்நோய்த்தொற்றும் ஏற்படும்.

**இந்தசத்திரசிகிச்சையில் ஏதும் பிரச்சினைகள் ஏற்படுமா?**

➢பொதுவாக பிரச்சினைகள் ஏற்படுவதில்லை.

➢ சில வேளையில் சத் திர சிகிச்சை காயங்களில் நோய்த் தொற்று ஏற்படலாம்.

➢ சில வேளையில் அகற் றப்படும் நாளங்களுடன் இணை ந்து செல்லும் நரம்புகளும் சேர் த்து அகற்றப்படலாம். இதனால் காலின் சிலபகுதிகளில் விறை ப்புத் தன்மை ஏற்படலாம்.

➢சில வேளையில் அகற்றப் படும் நாளம் மீண்டும் வளர லாம். இவ்வாறு ஏற்படின் மீண் டும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிவரும்.

Dr.க.சிவசுகந்தன்
யாழ். போதனாவைத்தியசாலை

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.